Free Circulation | Germany | England | Swiss
ஐப்பசி. Oct. 2018

# வெற்றிமணி

ESTD 1950

Vettimaniy

பிரதம ஆசிரியர் கலாநிதி மு.க.சு சிவகுமாரன் B.F.A

Orientalische Textilien & Schmuck

தொடர்
மலிவு விற்பனை!
தரமான தங்க நகைகளுக்கு
உத்தரவாதமிக்க
நகை மாளிகை



Tel:0231 162377
Königswall 16 (Am HBF)
44137 Dortmund
Germany
Fax:0231 147836

## இங்கிலாந்தில் தற்போது வசிக்கும் மூன்று மில்லியன் ஐரோப்பியரின் நிலை என்ன?



## ஆண் பெண் இடைவெளி

## Dr IN

## வலி தரும் மகாவலி



கலாகீரத்தி சாந்தினி சிவநேசன் அவர்களின் பாராட்டு மழையில்....



## கனவு



S.K.Silks & Gold Paraadise

மாபெரும் மலிவு விற்பனை!

மாபெரும் ராஜமுத்திரை

06.10.2018 One Day Sale
அனைத்து ஆடைகளும் 50% முதல் 70% வரை
Buy one get one free

16th ANNIVERSARY

பேர்லின் நகரில் MEGA SALE
13.10.2018 ,14.10.2018 (விபரம் பக்கம் 29)

Mr.P.Sritharan.Proprietor

Tel:0231 9501 647 Adler str 33 - 44137 Dortmund

MITCHAM (UK) U.K
செல்வராஜா
Selvaraja Gold House & Textiles

T.T.S.Brothers GmbH&Co.KG
RHEINISCHE STR 52
44137 DORTMUND
Tel:0231 819288
Germany
Page.12

Gopara Gnanam GMBH
Tel:0231 5450028 Mob:0171 330 6542
Rheinische str.81 - 44137 Dortmund
Page.08

StaR-Impex
Kipper Str.03
44147 Dortmund/ Germany
Tel:0231 860 26 96
S.39

# யேர்மனியில் இரதமும் பங்காக் புகையிரதமும்



சிறப்புற நடந்த டோட்மூண்ட் சிவன் கோவில் தேர்

Maeklong Railway Market Reviews - Bangkok, Thailand -

Foto: Vettimaniy

மாதவி

யேர்மனியில் தேர்க்காலம் முடிந்து இனி இலையுதிர்காலம் ஆரம்பிக்கின்றது. ஆனால் தேர்க்கால நினைவுகள் பல உதிராமல் நெஞ்சில் உள்ளது. அவற்றில் சிலவற்றை மீண்டும் தேர்க்காலம் வரும் வரை தொடர்ச்சியாக பார்ப்போம். அரசாங்கம் மக்கள் போக்குவரத்திற்கு செய்யும் சேவையில் புகையிரதத்தின் பணி முக்கியமானது. அச் சேவையாற்றும் அரசு மக்களுக்கு அரசனே!

## அரசனுக்கு வழிவிட்ட மக்கள்

பாங்காக் நகரில் (**The Famous Maeklong Railway Market** Bangkok, thailand ) நதியில் மிதக்கும் சந்தையுண்டு. அதனை அடுத்து தரையில் ஒரு பெரிய சந்தை உண்டு. அந்த சந்தையின் நடுவே சந்தையை கூறுபோட்டுக்கொண்டு ஒரு புகையிரதப்பாதை உண்டு. அப்பாதை பாவனை கைவிடப்பட்ட பாதை அல்ல. தினமும் புகையிரதம் காலையும் மாலையும் செல்லும் பாவனையில் உள்ள பாதை. அந்த தண்டவாளத்தை மூடி இருமருங்கிலும் சந்தை நடக்கும். பெரும்திரளான மக்கள் அங்கு கூடுவார்கள்.

புகையிரம் காலை சரியாக 8.10. வரும். வியாபாரிகள் தம் கூடாரங்களை மடக்க்கி கடைகளை ஒதுக்கிட,கூடிநின்ற மக்கள் ஒதுங்கி வழிவிட, பேர் அரசன் பேல் புகையிரதம் சந்தைக்கு நடுவால் வரும். அரசனும் (புகையிரதமும்) தான் அரசன் என்ற எந்த திமிருமின்றி மெதுவாக மக்கள் சந்தைக்கும் அவர்களது தொழிலுக்கும் இடையூறு செய்யாமல் மெதுவாகக்கடந்து செல்லும். இது தினமும் நடைபெறும் காட்சி. இந்தக்காட்சியனைக்காண சந்தைக்கு கூடும் மக்களைவிட உல்லாசப் பயணிகள் அதிகமாகக் கூடுவார்கள். ஆபத்து விளைவிக்கக்கூடிய ஒரு போக்குவரத்து சந்தைக்குள் விழிப்புடனும் பொறுப்புடனும் அழகாக நிகழ்த்தப்படுவது ஓர் அற்புதமே!

பாங்காக்கில் மக்கள் விலகி அரசனுக்கு வழிவிடுகிறார்கள். அரசனும் மக்கள் வேலை சிதறாமல் அவதானமாக மெதுவாக செல்கின்றான். அவன் பாதையில் பாய்விரித்து வியாபரம் செய்தவர்கள் கூட, கூடாரங்களை மடக்கி இடம் விடுகின்றார்கள். அவன் வரும் நேரம் தெரிந்து மக்களும் உஷாரக இருக்கிறார்கள்.

## கடவுளுக்கு வழிவிட்ட அரசன்

யேர்மனியில் டோட்மூண்ட் சிவன் ( சாந்தநாயகி சமேத சந்திர மௌலீசர் ஆலயம்) ஆலயத்தில் வருடாந்த தேர் உற்சவகாலத்தில் தேர் தெருவீதி வலம்வருவது வழமை. இந்த ஆண்டும் (24.06.2018) சிறப்பாக நடைபெற்றது. பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்டனர். சிவனின் இரதம் செல்லும் பாதை ஓர் இடத்தில் அரச போக்குவரத்து இராம் (புகையிரதம்) செல்லும் பாதையில் சில தூரம்சென்று கடக்கவேண்டும். அப்படிச் செல்லும்போது அந்த பாதையில் இரதம் அல்லது புகையிரதம் மட்டுமே செல்லலாம்.

இங்கே அரசன் (அரசு) தெய்வத்திற்கு வழிவிட்டான். புகையிரதம் வர, நகரக்காவலர்கள் உதவ, அரசின் புயிரதம் அமைதிகாத்து தரித்து நின்று, தெய்வம் இரதத்தில் தன் பாதையைக் கடக்குவரை வழிவிட்டு காத்திருந்து சென்றது. அதுமட்டுமன்றி வழிபாடு செய்யும் மக்களுக்கும் வழிவிட்டு அமைதியா விழிப்புடனும் பொறுப்புடனும் கடந்து (ராம்) சென்று அரசனும் தெய்வமாகினான்.

யேர்மனிய அரசு அவரவர் சமயப் பின்னணியின் பிணைப்பைக் குறைத்து மதிப்பிடுவது கிடையாது. தெருத் தெருவாக தங்கள் சமயச் சின்னங்களை வைக்வேண்டும் என்ற வெறியும் கிடையாது.

இரவிரவாக தெருக்களைத் திருத்தவும், தெருவோரங்களில் மரங்களை நடவும் இத்தகைய பணிகளை மேற்கொள்ளவுமே முனைவார்கள் அன்றி. ஊர் உறங்கும் நேரத்தில் நம்தேசத்தில் போல் தெருவோரத்தில் மரங்களின் கீழே புத்தர் சிலைகளை வவைக்க, வாகனங்களில் சிலையுடன் அலைய மாட்டார்கள்.


பக்தனின் அழகு உள்ளத்தை ஆலயமாக்குவதில் உண்டு. அரசனின் அழகு மக்களை கடவுளாகக் காண்பதில் உண்டு.







வெற்றிமணி
தமிழ் எங்கள் உயிருக்கு மேல்
—கவிஞர்.வி.க
ஓசை 266



ஆரம்பம்:1950
ஸ்தாபகர்
அமரர் மு.க.சுப்பிரமணியம்
(முன்னாள் அதிபர்: குரும்பசிட்டி பொன்.பரமானந்தர் வித்தியாலயம்)

பிரதம ஆசிரியர்
“ஓவியக்கலைவேள்”
கலாநிதி
மு.க.சு.சிவகுமாரன் B.F.A.
Chief Editor:
Dr.M.K.S.Sivakumaran B.F.A.



Brinker Höhe.13
58507 Lüdenscheid
Germany
Tel: 02351/45 88 62
0163 199 2 333

e-mail: vettimaniy@hotmail.com


**“வெற்றிமணிமொழி”**
தோல்வியைக் கண்டு
அஞ்சுபவர்களிடமிருந்து
வெற்றி தானாகவே
விலகிச்செல்கிறது


பத்திரிகை வடிவம்
சிவகுமாரன் சஞ்ஜீவன்.B .Eng (Hons)
Sanje:07824 61 83 83

Vettimaniy Ltd
Company No: 8876276


# மகிந்தவின் டில்லி விஜயமும்
# இந்தியாவின் புது வியூகமும்

இலங்கையிலிருந்து பாரதி



இலங்கை விவகாரத்தில் இந்தியா மீண்டும் ராஜதந்திர காய்நகர்த்தல்களை இந்தியா ஆரம்பித்திருக்கின்றதா என்ற கேள்வி கடந்த வாரத்தில் எழுந்திருக்கின்றது. கொழும்பு அதிகார மட்டத்தில் குழப்பங்கள் உருவாகிவரும் நிலையில், இந்தியாவின் இந்தக் காய்நகர்த்தல்கள் இராஜதந்திர வட்டாரங்களில் பல்வேறு கேள்விகளை எழுப்பியிருக்கின்றது. மீண்டும் ஒரு ஆட்சிமாற்றத்துக்கு இந்தியா வழிவகுக்கப்போகின்றதா என்ற கேள்வியும் எழுப்பப்பட்டிருக்கின்றது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ டில்லிக்கு மேற்கொண்டிருந்த விஜயம்தான் இந்தக் கேள்விகளுக்குக் காரணம். மகிந்த ராஜபக்ஷ மட்டுமன்றி அனைத்துக் கட்சிகளின் தலைவர்கள் குழு ஒன்றும் கூட டில்லி சென்றிருந்தது. சபாநாயகர் தலைமையிலான இந்தக் குழுவில் எதிர்க்கட்சித் தலைவர், அமைச்சர்கள் உட்பட கட்சித் தலைவர்கள் பலரும் இடம்பெற்றிருந்தார்கள். ஆனால், மகிந்தவின் விஜயத்துக்கு முன்பாக அந்த அனைத்துக் கட்சித் தலைவர்கள் குழுவின் விஜயம் அடிபட்டுப்போய்விட்டது.
ராஜபக்ஷவின் புதுடில்லி விஜயம் இந்தளவுக்கு முக்கியத்துவம் பெற்றுக்கொண்டமைக்குப் பல காரணங்கள் உள்ளன. சில மாதங்களுக்கு முன்னர் வரையில் இந்தியாவை கடுமையாக விமர்சிக்கும் ஒருவராகவே ராஜபக்ஷ இருந்தார். சீன சார்பானவராகக் கருதப்படும் ராஜபக்ஷ, இலங்கையின் விவகாரங்களில் இந்தியா அவசியமற்ற முறையில் தலையிடுவதாக குற்றஞ்சாட்டி வந்துள்ளார். ஒரு இந்திய எதிர்ப்பாளராகவே அவர் தன்னைக் காட்டி வந்திருக்கின்றார். தென்பகுதி கடும் போக்கு சிங்களவர்களின் ஆதரவைத் தக்கவைக்க ”இந்திய எதிர்ப்பு“ அவசியம் என அவர் கருதியிருக்கலாம்.

இரண்டு தடவைகள் ஜனாதிபதியாகத் தெரிவான அவர், மூன்றாவது தடவையாகவும் பதவிக்கு வர முற்பட்டவர். 2015 இல் தனது மூன்றாவது முயற்சியில் தான் தோல்வியடைந்தமைக்கு இந்தியாதான் காரணம் என்ற குற்றச்சாட்டை அவர் முன்வைத்திருந்தார். ஆக, இந்தியாவுக்கும் ராஜபக்ஷவுக்கும் இடையிலான உறவுகள் இனிப்பானதாக இருக்கவில்லை. இது வரலாறு. இந்த வரலாற்றை மாற்றியமைப்பதற்கு இரு தரப்பினரும் இப்போது முற்பட்டிருக்கின்றார்களா என்ற கேள்வியைத்தான் ராஜபக்ஷவின் டில்லி விஜயம் எழுப்பியிருக்கின்றது.

இந்திய விஜயத்தை முடித்துக்கொண்டு கொழும்பு திரும்பிய ராஜபக்ஷ ஊடகங்களுக்குத் தெரிவித்த கருத்துக்கள் முக்கியமானது. ”தவறான புரிதலை மீள் திருத்தும் வகையில் டில்லிச் சந்திப்புகள் அமைந்தன. அது மாத்திரம் அல்லாது இலங்கை - இந்திய உறவை மேலும் பலப்படுத்துவதற்கான சந்தர்ப்பமாகவும் இந்திய விஜயம் அமைந்தது” என அவர் குறிப்பிட்டிருக்கின்றார். ”இந்த விஜயத்தின் ஊடாகப் பல புதிய மாற்றங்கள் ஏற்படும் சாத்தியப்பாடுகள் காணப்படுகின்றன” எனவும் ராஜபக்ஷ தெரிவித்திருப்பது கவனத்துக்குரியது.

பாரதிய ஜனதா கட்சி மூத்த உறுப்பினர் சுப்ரமணியன் சுவாமியின் அழைப்புக்கு அமையவே இந்த விஜயத்தை மேற்கொண்டு ராஜபக்ஷ டில்லி சென்றார். இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங், காங்கிரஸ் கட்சி தலைவர் ராகுல் காந்தி உள்ளிட்ட அரசியல் பிரமுகர்களுடன் முக்கிய பேச்சுக்களை ராஜபக்ஷ நடத்தியிருந்தார். இந்திய அரசியலில் ஆட்சிகளை மாற்றக் கூடிய பேரங்களை நடத்துவதில் வல்லவராக் கருதப்படும் சுவாமிதான் இந்த சந்திப்புக்களுக்கும் ஏற்பாட்டாளராக இருந்திருக்கின்றார். ராஜபக்ஷவின் ஆதரவாளரான சுவாமி, ராஜபக்ஷ ஆட்சியை மீண்டும் இலங்கையில் ஏற்படுத்த வேண்டும் என்பதில் அக்கறையுடன் செயற்படுபவர்.


மகிந்த குறித்த இந்தியாவின் அணுகுமுறையிலும், இந்தியா குறித்த மகிந்தவின் அணுகுமுறையிலும் மாற்றம் ஏற்பட்டிருப்பதை புதுடில்லிப் பேச்சுக்கள் வெளிப்படுத்து கின்றன. 2015 இல் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்துக்கு இந்தியா பின்னணியில் இருந்ததாக குற்றஞ்சாட்டிய ராஜபக்ஷ, இப்போது இந்தியாவின் ஆதரவை நாடிச்செல்ல வேண்டிய ஒருவராக இருக்கின்றார். பிராந்திய வல்லரசான இந்தியா, இலங்கை அரசியலில் செலுத்தக்கூடிய செல்வாக்கை ராஜபக்ஷ புரிந்துகொண்டிருப்பதன் விளைவுதான் அதற்குக் காரணம். மீண்டும் அதிகாரத்துக்கு வருவதற்கும், அதிகாரத்தைத் தக்கவைத்துக்கொள்வதற்கும் புதுடில்லியின் ஆதரவு அவசியம் என்பதை ராஜபக்ஷ தெளிவாகவே உணர்ந்துகொண்டிருக்கின்றார்.

மறுபுறத்தில் இலங்கை அரசியலில் ராஜபக்ஷவின் மீளெழுச்சியையும் இந்தியா அவதானித்திருக்கும். உள்ளூராட்சிமன்றத் தேர்தல்களில் அவருடைய கட்சி பெற்ற வெற்றி இதற்கு ஆதாரம். இதனைவிட, அடுத்த தேர்தலில் ராஜபக்ஷவின் அணியே வெற்றிபெறும் என “எக்கனாமிக்ஸ்ட்“ சஞ்சிகையின் புலனாய்வுப் பிரிவின் ஆய்வில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. ஆக, மீண்டும் அதிகாரத்துக்கு வரக்கூடியவருடன் உறவுகளைப் பலப்படுத்தி வைத்திருப்பதுதான் தமது நலன்களுக்கு அவசியமானது என புதுடில்லியும் கணக்குப் போட்டிருக்கும்.
இல்லையெனில் ராஜபக்ஷ மீண்டும் சீனாவின் பக்கம் சரிந்துவிடக்கூடிய அபாயம் இருப்பதையும் டில்லி அவதானித்திருக்கலாம்.

தொடர்ச்சி 09 ம் பக்கம்.




# சேலையும் பெண்களும்





அனித்தா செல்வராஜா பூஷன்

அதற்கேற்ப சட்டையும் பல வேலைப்பாடுகளுடனேயே அமைகின்றது. ஆபரணங்கள் கூட ஒவ்வொரு சேலைக்கும் ஒவ்வொரு விதமாக வடிவமைக்கப்படுகின்றது. அதாவது பட்டுசேலைகளுக்கென பிரத்தியேகமானதும், பான்சி சேலைகளுக்கென வேறொரு வகையிலும் அணிகலன்கள் அணியும்போது, அவை மென்மேலும் பெண்களுக்கு அழகைக் கொடுக்கின்றன.

இவை இவ்வாறிருக்க, தாயக மக்களிடையே "வெளிநாட்டில் பெண்கள் ஒரு சேலையை ஒருமுறை கட்டினால் இன்னொருமுறை கட்டுவதில்லை" எனும் கருத்து பரவலாக உள்ளது. இக் கருத்தானது புலம்பெயர் பெண்களால் தாயக பெண்களுக்கு கூறப்பட்டதால் வந்த கருத்தா? அன்றேல் "ஒருமுறை கட்டிய சாறிதான்" என்று கூறி தாயக உறவுகளுக்கு சேலைகளை கொடுப்பதால் ஏற்பட்ட கருத்தா என்பது கேள்விக்குறியாக உள்ளது.

தமிழர் பண்பாட்டைப் பொறுத்தவரையில் அன்றுதொட்டு இன்றுவரை பெண்களையும் சேலையையும் பிரித்துப்பார்க்கவே முடியாது. பெண்கள் என்றாலே உடனே ஞாபகத்திற்கு வருவது சேலைதான். சேலை உடுத்தும்போதே ஒரு பெண் முழுமையான அழகினைப் பெறுகிறாள். பற்பல வர்ணங்களில் மட்டுமல்லாது பல்வேறு விதமான தரங்களிலும் வடிவமைக் கப்படுகின்றது.



சேலைக்கென்றே பொருந்தக்கூடிய அணிகலன்களும் விஷேடமாக வடிவமைக்கப்படுகின்றது. ஓர் பெண் பருவமடைந்ததும் நடாத்தப்படும் பூப்புனித நீராட்டு விழாவிலேயே முதன்முதலாக சேலை உடுத்துகிறாள். இவ்விழாவைக்கூட இன்று சாறிஷெறிமொணி என்றே ஆங்கிலத்தில் அழகாகக் கூறுகின்றனர். இச்சடங்கில் முக்கிய இடத்தைப் பிடிப்பதும் சேலைதான்.

இன்றைய நிலையில் சுடிதார் சேலையின் இடத்தை ஆக்கிரமித்துள்ளது. அதாவது அணிவது சுலபமானது, ஆபாசமில்லாதது, வேலைகளைச் செய்வதற்கு சுலபம், இளமையாகக் காட்டக்கூடியது, வாகனங்களை ஓட்டுவதற்கு வசதியானது என பல்வேறு காரணங்களை தாங்கி சுடிதார் பெண்கள் மத்தியில் செல்வாக்குச் செலுத்துகின்றது. விழாக்களில் கூட சிறு விழாவென்றால் சுடிதாரும், விமரிசையாகக் கொண்டாடப்படும் விழாக்களுக்கே சேலை என்ற நிலை வந்துள்ளது.



இவ்வாறு பல்வேறு காரணங்கள் இருப்பினும் இவற்றையெல்லாம் முறியடித்து பெண்கள் விரும்பியும், அதிக பணம் மற்றும் நேரத்தை செலவு செய்து வாங்குவது சேலையே.

இலங்கையைப் பொறுத்தவரையில் அரசதுறையில் கடமையாற்றும் பெரும்பாலான பெண் உத்தியோகத்தர்கள் சேலையே உடுத்துகின்றனர். நேர்த்தியாக சேலை உடுத்தி பணியிடத்தில் பணிபுரியும்போது ஓர் கம்பீரமான தோற்றத்தையே ஒவ்வொரு பெண்ணும் பெறுகின்றாள். இவ்விடத்தில் ஒவ்வொரு பெண்ணின் கல்வித்தரம் மற்றும் உத்தியோகம் என்பவற்றை அவர்களின் சேலையே சமூகத்தில் அவர்களுக்கான நன்மதிப்பை மென்மேலும் உயர்த்துகின்றது.



புலம்பெயர் நாடுகளைப் பொறுத்தவரையில் சேலை அணிவதற்கான சந்தர்ப்பங்கள் பெண்களுக்கு மிக குறைவாக அமைந்துள்ள போதிலும், விழாக்கள் நடைபெறும்போது சேலையையே மிகவும் விரும்பி அணிகின்றனர். இளம் தலைமுறையினர் மிகவும் பார்த்து பார்த்து சேலையை தெரிவு செய்து உடுத்துகின்றனர்.

அதிலும் இன்னொருவரது விழாவாக இருந்தாலும் அதற்கு செல்லுமிடத்து, தம் வீட்டு விழாவாக கருதி மிக மகிழ்ச்சியுடன் புதிதாக சேலை வாங்கி அணிகின்ற சேலைகட்டும் கலாச்சாரமானது என்றுமே பெண்களுடன் வாழ்ந்து கொண்டிருக்கும் என்பதில் எவ்வித மாற்றமுமில்லை.

சேலையில் பெண்களுக்கு மென்மேலும் அழகு சேர்ப்பது அதனைக்கட்டும் முறையும், அதற்கேற்ப பொருத்தமாக அணியும் சட்டையும், ஆபரணங்களுமே. சிலசமயங்களில் சேலையின் விலையை விட அதன் சட்டை அதிகவிலையுடையதாக காணப்படும்.




Bochum
Lucky Fly Reisebüro
Luckyfly
என்றும் சிறப்பு விலையில்
தரமான சேவைகள்......
Gulf Air
Mob:No: 0179 1484 892
Jan,Feb,March.2019
Ab:599 €
40 Kg
SMILE PRICE!
e.mail:siva 0108 @hotmail.com
Graphic Design Vettimaniy Ltd
QATAR AIRWAYS
Emirates
Essener Str.26
44793 Bochum
Tel: 0234-2399032
Fax 0234-79457171
www.Lucky-fly.de


5வது ஆண்டில் கால்பதிக்கும் எமது நிறுவனம்
150 யூரோவிற்கு மேல் கொள்வனவு செய்யும் வாடிக்கையாளருக்கு
குலுக்கல் முறையிலான பரிசுகள்
ஆஹா ஓஹோ ஒரு நாள் திருவிழா
06.10.2018
சனிக்கிழமை
TKS BEST FOODS
மலிவும் தரமும் என்றால்
TKS தானே
மளிகை உலகின்
BIG BOSS
TKS
ஆச்சர்யமூட்டும் விலைகள்
வியப்பூட்டும் பரிசில்கள்
ONE DAY SALE
Awesome Prices - Awesome Gifts
TKS BEST
0049 231 950 468 83
0049 231 950 468 82
tks-bestfoods@web.de
www.tks-bestfoods.de
tksbestfoods
Rheinische Str.79, 44137, Dortmund Germany



# வலி தரும் மகாவலி

ஜூட் பிரகாஷ் (மெல்பேர்ண்)”

தண்ணீர் என்றாலே தமிழர்களிற்கு கண்ணீர் தான் போலிருக்கிறது. சங்க காலத்தில் பூம்புகாரை அழித்த கடற்கோளாகட்டும், 2004ல் கடற் புலிகளின் பலத்தை அழித்த ஆழிப்பேரலையாகட்டும், காவேரியை வாட வைக்கும் கன்னடர்களாகட்டும், இப்போது தமிழர் தாயகப் பகுதிகளை கவர முயலும் மகாவலி அபிவிருத்தித் திட்டமாகட்டும், எல்லாமே தண்ணீர் தந்த கண்ணீர் கதைகள் தான். 1961ல் சிறிமாவோ பண்டாரநாயக்காவின் ஆட்சிக் காலத்தில், ஐக்கிய நாடுகள் சபையின் நிறுவனங்களான ருனேீ மற்றும் குயுழுவின் அனுசரணையில், இலங்கைத் தீவில் விவசாயத்தைப் பெருக்கவும், நீர் மின்சார திட்டத்தை அறிமுகப்படுத்தி விரிவாக்கவும் என 30 வருட திட்டமாக, மகாவலி அபிவிருத்தித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

1977ல் ஆட்சியைப் பிடித்த ஜெயவர்தனவின் அரசு, ஆறே ஆறு ஆண்டுகளில் மகாவலி திட்டத்தை முழுமையாக முடிக்க கங்கணம் கட்டிக் கொண்டு, துரித மகாவலி அபிவிருத்தித் திட்டத்தை அமுலாக்கத் தொடங்கியது. காமினி திஸநாயக்காவின் அமைச்சின் கீழ் செயற்படத் தொடங்கிய இந்தத் திட்டத்திற்கு, ஜேர்மனி, இங்கிலாந்து, அமெரிக்கா, ஜப்பான், ஒஸ்ரேலியா, சுவீடன் உட்பட பல முதலாளித்துவ நாடுகள், பாரியளவில் நிதியுதவி வழங்க முன்வந்தன. 1977ல் திறந்த சந்தை பொருளாதார கொள்கையை பின்பற்ற தொடங்கிய இலங்கைக்கு மேற்கத்தைய நாடுகள் வழங்கிய ஊக்கசக்கதியாக துரித மகாவலி திட்டம் அமைந்தது.



1985.04.11-13 British Prime Minister Margaret Thatcher inaugurating Victoria Dam

1984 ஒக்டோபர் மாதமளவில், முல்லைத்தீவு மாவட்டத்தின் மணலாறு பகுதியில் குடியிருந்த தமிழ் விவசாயக் குடும்பங்களை இலங்கையின் பாதுகாப்புப் படையினர் பலவந்தமாக வெளியேற்றினர். செழிப்பான விவசாய பூமியான இந்தப் பகுதிகளில், சிறு சிறு தமிழ்க் கிராமங்களும், நீண்ட கால குத்தகையடிப்படையில் 16 தமிழர்களிற்கு சொந்தமான நிறுவனங்கள் இயக்கிய விவசாய பண்ணைகளும் இருந்தன.

தமிழ் நிறுவனங்கள் நடாத்திய விவசாயப் பண்ணைகளில், நாவலர் பண்ணை, முநவெ குயசஅ, சிலோன் தியேட்டர்ஸ், னுழடடயச குயசஅ என்பன பெரிய நிலப்பரப்புகளில் இயங்கி வந்தன. முநவெ மற்றும் னுழடடயச பண்ணை களில், 1977ல் இடம்பெற்ற இனக்கலவரத்தினால் மலையகத்திலிருந்து இடம்பெயர்ந்த தமிழ் மக்கள் குடியமர்த்தப் பட்டிருந்தனர். 1984ல், னுழடடயச மற்றும் முநவெ பண்ணைகளில் குடியேறிய மலையகத் தமிழர்களை இலங்கை இராணுவம் பஸ்களில் ஏற்றிக் கொண்டு போய், மலையகத்தில் இறக்கிவிட்டது.

வடக்கு கிழக்கு தமிழர்களின் இதயபூமியான மணலாற்றில் தமிழர்களை கொன்றும் அடித்தும் விரட்டி விட்டு, பண்ணைகளை திறந்த சிறைச்சாலைகளாக அறிவித்து விட்டு, தென்னிலங்கை சிறைகளில் இருந்தசிங்களக் கைதிகளைஅவர்களது குடும்பங்களோடு அந்தக் பண்ணைகளில் இலங்கை அரசு குடியேற்றியது. 1988ல் வெளியான வர்த்தகமானி மூலமாக, மணலாறு என்ற தமிழ்ப்பெயரை தாங்கிய பிரதேசத்தின் பெயர் அதிகாரபூர்வமாக வெலிஓயா என்ற சிங்களப் பெயராகிய தோடு, தனியான பிரதேச செயலகப் பிரிவுமானது (DS Division).

வடக்கு கிழக்கில் தோன்றியிருக்கும் பிரிவினைவாதிகளின் தமிழீழக் குறிக்கோளை முறியடிக்க, வடக்கில் 2 லட்சம் சிங்களவர்களை குடியேற்றுவோம் என்று இலங்கையின் தேசிய பந்தோபஸ்து அமைச்சர் அத்துலத்முதலி இதே காலப்பகுதியில் தான் முழங்கியருந்தார்.

2009ல் யுத்தம் முடிவடைந்த பின்னர், சுமார் 6,000 சிங்களக் குடும்பங்கள் மீண்டும் மணலாற்றில் அரசாங்கத்தால் குடியேற்றப்பட்டார்கள்.

மணலாற்றைச் சுற்றியுள்ள பிரதேசங்களில் குடிதண்ணீரில் கலந்திருந்த ஒருவித நச்சுதன்மையால் சிறுநீரகத்திற்கு பாதிப்புக்கள் ஏற்படுவதால், குடியேறிய குடும்பங்களிற்கு தூய்மையான குடிநீர் வழங்க 50 மில்லியன் ரூபாய்கள் செலவில் water purification இயந்திரங்கள் மணலாற்றில் நிறுவப்பட்டுள்ளன.

தொடர்ச்சி 24 ம் பக்கம்.



# அன்று ஆண்ணாந்து பார்க்க வைத்தவர்களை இன்று ஆண்ணாந்து பார்க்க வைத்த தெருவிழா!







இலங்கையில் இருந்து புலம்பெயர்ந்து 1980 களில் யோ்மனி வந்த வேளை, கோடைகாலத்தில் தெருக்களை அடைத்து பல கடைகள் போட்டு அவர்களது பாரம்பரிய உணவுகள், உடைகள், சிறுகடைகள், என பலவற்றுடன் தெருவிழாக்கள் நடைபெறும். தெருவில் அமக்களமாக பெரும் மேைடையில் இசை நிகழ்ச்சி நாடகம் என பல நடக்கும்.



தாய் நாட்டை விட்டு பிரிந்த துயரத்திலும், மனதை திசைதிருப்பி ஆறுதல் பெற இப்படியான நிகழ்வுகள் அன்று எமக்கு கைகொடுத்தன என்பதும் உண்மையே.

அன்று அப்படி தெருக்களில் விழா நடக்கும்போது அண்ணாந்து பாரத்தவர்கள் நாம். புரியாத மொழி, பழகாத உணவு, அறியாத கலைகள், இப்படிப் பல இருப்பினும், புதியனவற்றை அறியவேண்டும் என்ற ஆவல் எம்மினத்துடன் கூடப்பிறந்தது. அதனால் நிகழ்வுகளை அணு அணுவாக இரசிப்போம்.

அன்று அண்ணாந்து பார்க்க வைத்தவர்களை, இன்று ஆண்ணாந்து பாரக்க வதை்த நிகழ்வாக தமிழ்கள் நடத்திய தெருவிழாவினைக் காண்கின்றோம்.

யோ்மனியில், கடந்த 08.09.2018 சனிக்கிழமை டோட்மூண்ட் நகரில் தெருவிழா சிறப்பாக நடைபெற்றது. இவ்விழா டோட்முண்ட் தமிழர் அரங்கம் ஏற்பாட்டில், யோ்ரமன் தமிழ் வர்த்தகர் சங்கம், தமிழர் கலையகம், comdu.it, vmdo போன்ற பல்வேறுபட்ட அமைப்புக்களின் ஆதரவுடன் விழா நடைபெற்றது

T வடிவில் தெருவை மறித்து மேடை போட்டு விழா நடத்தப்பட்டது. கலை நிகழ்ச்சிகள் ஒரு புறம். தாயக உணவுகள் மறுபுறம். தெருப்புறம் எங்கும் வேட்டியும் சேலையும் சறமுமாக மனதுக்குள் மொட்டுவிட்டு இருந்த ஆசைகள் எல்லாம் மொத்தமாக விரிந்து மணம்பரப்பியது ஒரு பூரிப்பாக இருந்தது. பொய்க்கால் குதிரையாட்டம் அது எம் மெய்கால்களைத் துள்ளவைத்தது. கடைகள் எங்கும் ஊர்வாசம். தெருக்களில் பாடல்களை உரத்துக்கேட்டு எத்தனை வருடம். -பாடும்போது நான் தென்னங்காற்று பருவ மங்கையோ தென்னங்கீற்று- பாடல் இன்று யோ்மனியிலே வீட்டில் கூட அவ்வளவு சத்தமாக கேட்க முடியாது. ஆனால் அன்று தெருவிழாவில் அமக்களமாகக் கேட்டோம்.





தாயத்தை மறக்காத நாம், புலம்பெயர் நாட்டில் சில மணித்தியாலங்கள் என்றாலும் தாயகமாக நம்மிடத்தை மாற்றி மகிழ்ந்தது மனதுக்கு இனிமையான ரம்மியமான பொழுது அது. தாயத்திற்கு போக வசதி அற்றவர்களுக்கும்,மனச்சாந்தி தரும் நிகழ்வாக அமைந்தது.

பல்லாயிரக்காணக்கான மக்கள் ஒன்று கூட யோ்மனியில் உள்ள அனைத்து தமிழ் ஊடகங்களும்,யோ்மன் ஊடகங்களும், கைகொடுத்தன என்பது மகிழ்வான செய்தியாகும்.

இவ்விழா Street Fest சிறப்புற உழைத்த அனவருக்கும் பாராட்டுக்கள். புலம்பெயர் வாழ் தமிழர்கள் கலைகளில் மட்டும் அல்ல கல்வியிலும் பிற இனத்தவர்கள் அண்ணாந்து பார்க்கும் அளவு உயர் நிலையடைந்திருப்பது இரட்டிப்பு மகிழ்வான செய்தியாகும். படங்கள்: வெற்றிமணி







அணியும் நுட்பமும், பணப் பரிமாற்றமும்

# நாளை உங்கள் பாதணியே உங்களுக்கு பாதை காட்டலாம்?

வெற்றி மைந்தன்

வியரபில் டெக்னாலஜி எனப்படும் அணியும் தொழில்நுட்பம் இன்றைக்கு தொழில்நுட்ப உலகில் ஆதிக்கம் செலுத்தத் துவங்கி விட்டது. அதில் புதிதாகச் சேர்ந்திருப்பது தான் இந்தப் பணப் பரிவர்த்தனை !

அணியும் தொழில்நுட்பத்தில் பணப்பரிவர்த்தனை பற்றிப் பார்க்கும் முன், அணியும் தொழில்நுட்பம் என்றால் என்ன என்பதை மிகச் சுருக்கமாய் சொல்லி விடுகிறேன். நமது உடலில் அணிந்து கொள்ளக் கூடிய ஒரு கருவி, இன்டர்நெட் ஆ.்.ப் திங்க்ஸ், செயற்கை அறிவு போன்ற நவீன தொழில்நுட்பங்களின் உதவியுடன், சில பணிகளைச் செய்வது தான் இதன் அடிப்படை ! இந்த அணியும் கருவி ஒரு வாட்ச் ஆகவோ, மோதிரமாகவோ, ஷூவாகவோ, உடையாகவோ எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம். இப்போது பரவலாக எல்லோரும் கைகளில் கட்டிக்கொண்டு திரியும் 'ஹெல்த் டிராக்கர்' இதன் ஒரு சிறந்த உதாரணம் எனலாம். சென்சார்களின் மூலமாக நமது உடலின் ஆரோக்கியம் குறித்த தகவல்களைத் திரட்டும் வேலையை இத்தகைய ஹெல்த் டிராக்கர்கள் செய்கின்றன. .்.பிட் பிட் போன்ற நிறுவனங்கள் இந்த தொழில்நுட்பத்தில் கொடிகட்டிப் பறக்கின்றன.

எவ்வளவு தூரம் நடந்தீர்கள், எத்தனை மாடிப்படி ஏறினீர்கள், எத்தனை நேரம் ஓடினீர்கள், எவ்வளவு கலோரிகளை இழந்தீர்கள் போன்றவற்றை இது அக்கு வேறு ஆணி வேறாக படம்பிடித்துக் காட்டும். இரவில் அணிந்து கொண்டு தூங்கினால் நமது தூக்கத்தின் தன்மையையும் படம் போட்டுக் காட்டும். எத்தனை மணி நேரம் தூங்கினீர்கள், எத்தனை முறை முழித்தீர்கள், எத்தனை முறை தூக்கம் வராமல் புரண்டீர்கள் என அனைத்து விஷயங்களையும் இந்த வாட்ச் விளக்கமாய் சொல்லும். இதை உங்களுடைய ஸ்மார்ட் போனுடன் இணைத்துக் கொண்டு, தகவல்களை போனில் பார்க்கலாம். கடந்த ஒரு வாரம் எப்படி இருந்தீர்கள், கடந்த ஒரு மாதம் உங்களுடைய தூக்கம் எப்படி இருந்தது, சராசரியாய் எவ்வளவு நடந்தீர்கள் என அனைத்து விஷயங்களையும் அறிந்து கொள்ளலாம்.

இப்போது இந்த தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி பணம் செலுத்தும் முறை வந்திருக்கிறது. கடந்த ஒலிம்பிக் விளையாட்டின் போது விசா நிறுவனம் இத்தகைய அணியும் நுட்ப பணம் பரிமாற்றத்தை வெள்ளோட்டம் விட்டுப் பார்த்தது. அதன் படி ஒலிம்பிக் நிகழ்ச்சிக்குப் போகும் மக்கள் அங்கே மிக எளிய வகையில் பணப் பரிவர்த்தனை செய்ய வழி பிறந்தது.
மக்கள் அணிகின்ற கிளவுஸ் பணம் செலுத்தும் சாதனமாக பயன்படுத்தப்பட்டது. பிரிபெய்ட் பணத்தை செலுத்துவதற்குரிய வகையில் அந்த கிளவுஸ் வடிவமைக்கப்பட்டது.

அங்கே அப்போது அதிக குளிர் நிலவியதால், மக்கள் கிளவுஸ் அணிவது தேவையாய் இருந்தது. அதையே மீடியமாகப் பயன்படுத்தி இந்த வியரபிள் டெக்னாலஜி வெற்றிப் பயணத்தைத் தொடங்கியது. கிளவுஸ் பயன்படுத்த விரும்பாதவர்களுக்கு வியரபிள் ஸ்டிக்கர் ஒன்றையும் அறிமுகப் படுத்தினார்கள். அந்த ஸ்டிக்கரை பையிலோ, துணியிலோ எங்கு வேண்டுமானாலும் ஒட்டிக்கொண்டு பயன்படுத்தலாம் ! வெள்ளோட்டம் வெற்றிகரமாக அமைந்ததால் இப்போது முழுமையாக அத்தகைய அணியும் நுட்பத்தை சந்தைப்படுத்தும் முயற்சியில் விசா இறங்கியிருக்கிறது.

தொடர்ச்சி 32 ம் பக்கம்.

03 ம் பக்கத் தொடர்ச்சி

## மகிந்தவின் டில்லி விஜயமும்

சுப்பிரமணியன் சுவாமியின் அழைப்பின் பேரில்தான் ராஜபக்ஷ டில்லி சென்றிருந்தாலும், அதன் பின்னணியில் ஆளும் பாஜ.கவும், மோடி அரசும் இருந்திருக்க வேண்டும் என்றே இராஜதந்திரிகள் கருதுகின்றார்கள். புதுடில்லி சென்ற ராஜபக்ஷ அங்குள்ள மிகவும் உயர்ந்த ஹொட்டலான டுந ஆéசனைநைெ ர்ழவநட இல் தங்கவைக்கப்பட்டார். மோடியின் குண்டு துளைக்காத கார்களில் ஒன்றே ராஜபக்ஷவின் பாவனைக்கு வழங்கப்பட்டது. அதனைவிட, கடுமையான பாதுகாப்பும் அவருக்குக் கொடுக்கப்பட்டது. மற்றொரு நாட்டின் தலைவருக்குக் கொடுக்கப்படும் கௌரவம்தான் அவருக்குக் கொடுக்கப்பட்டிருந்தது.
இதன்மூலம் இலங்கைக்கு மோடி அரசாங்கம் முக்கியமான ஒரு செய்தியைச் சொல்லியிருப்பதாகவே கருதப்படுகின்றது. மைத்திரி - ரணில் அரசு அதிகளவுக்கு சீனாவின் பக்கம் சாய்வது இந்தியாவுக்கு சீற்றத்தை ஏற்படுத்தியிருக்கின்றது என்பது தெரிந்த செய்திதான். ராஜபக்ஷவுக்குக் கொடுக்கப்பட்ட வரவேற்பு அதன் பிரதிபலிப்பாக இருக்கலாம். அதனைப் புரிந்து செயற்படாவிட்டால், ஆபத்துதான் என்பதை புதுடில்லி இராஜதந்திர பரிபாசைகளில் உணர்த்தியிருப்பதாகவே தெரிகின்றது.



Tel: 0231- 108 763 61, 0231 584 407 63 Fax: 0231 108 763 62 Mobile:0163- 871 43 69 Rheinische str-72 44137 Dortmund

# மனிதர்களுக்குப் பின் புத்திசாலியான விலங்கு இதோ!



Dr.நிரோஷனின் அதிசய உலகம்

விலங்கு இராச்சியத்திலேயே புத்திசாலியான இனம் மனித இனம் என நாம் பெருமைப்பட்டுக் கொண்டிருக்கின்றோம். சரி சரி அது மறுக்க முடியாத ஒரு உண்மை தான். இருந்தாலும் மனிதர்களைத் தவிர்த்து வேறு விலங்குகளும் கூட மிகவும் புத்திசாலியாக இருக்கின்றன. அப்படி மனிதர்களுக்குப் பின் அடுத்த இடத்தைப் பெற்ற புத்திசாலியான விலங்கு எது என்று உங்களுக்குத் தெரியுமா?

புத்திசாலியான விலங்குகளில் மனிதர்களுக்குப் பின் இரண்டாவது இடத்தைப் பிடித்திருப்பது ஒரு வகை(டால்பின்) ஓங்கில் (dolphin), குறிப்பாக பாட்டில்நோஸ் ஓங்கில் (Bottlenose dolphins) ஆகும். அது ஏன் தெரியுமா? இந்த ஓங்கில் வகைக்கு மேம்பட்ட மொழி அறிவு இருக்கிறது. மேலும் இதனால் எளிதான சைகை மொழிகளைக் கூட அறிந்து கொள்ள முடிகிறதாம். இது எல்லாமே போதாது என்று இந்த ஓங்கில் வகை அடிப்படை எண் கணிதத்தைக் கூட புரிந்து கொள்ளுமாம்.

பொதுவாக இந்த பாட்டில்நோஸ் ஓங்கில் சமூக குழுக்களாகத் தான் இருக்குமாம். மேலும் அவை சிக்கலான விசில் மற்றும் கீச்சு சத்தங்கள் மூலம் ஒன்றுடன் ஒன்று தொடர்பு கொள்கின்றதாம். உதாரணத்திற்குப் பிற ஓங்கில்களுக்கு ஏதாவது விபத்து ஏற்பட்டால், மற்ற ஓங்கில்கள் குழுக்களாகப் பயணித்து வந்து அதைக் காப்பாற்றுமாம். மனிதர்களை விடப் புத்திசாலியாக இல்லையென்றாலும், இந்த பாட்டில்நோஸ் ஓங்கிலுக்கு இரக்கம் அதிகம் இருக்கின்றது என்பதில் சந்தேகமே இல்லை.

இன்னும் ஒரு விஷயம் உங்களுக்குத் தெரியுமா? தங்களது பயிற்சியாளர்கள் கற்றுக் கொடுத்த வித்தைகளை நினைவில் வைத்துக் கொள்வது மட்டுமல்லாமல், மற்ற ஓங்கில்களுக்கு இந்த செயல்முறைகளைக் கற்று கொடுக்கின்றனவாம். குரல்வித்தைகள் மற்றும் செயல்பாடு இரண்டிலும், மனிதர்களைப் போல் நடிக்கவும் இந்த ஓங்கில்களுக்குத் தெரியுமாம். இதை எல்லாம் கேட்கவே ஆச்சரியமாக இல்லையா?
சரி, நண்பர்களே, இனி நீங்கள் கூறுங்கள். இந்த அதிசய விலங்கைப் பற்றி என்ன நினைக்கின்றீர்கள்?



## வெள்ளி ஏன் சூரிய குடும்பத்தின் விசேஷகோள் ?

ஒரு நாள் என்றால் என்ன? சுமார் 24 மணிநேரங்களை ஒரு நாள் என்று அழைக்கின்றோம். சரி அது இருக்கட்டும். ஆனால் அதே ஒரு நாள் ஒரு ஆண்டை விட நீளமானால் எப்படி இருக்கும்? அட இது என்னடா ஆரம்பமே இப்படி இருக்கிறது என்று யோசிக்கின்றீர்களா? சரி பரவாயில்லை, இதற்குப் பின்னால் அப்படி என்ன மர்மம் இருக்கிறது என்று அறிய விரும்பினால் தொடர்ந்து படியுங்கள்.
நீங்கள் இரவு நேரத்தில் மேலே வானத்தை அவதானித்தால், ஒரு பிரகாசமான வெளிச்சத்தை அவதானிக்கலாம். அது நீங்கள் நினைப்பது போல் ஒரு நட்சத்திரம் கிடையாது. அது தான் சூரியக்குடும்பத்தில் சூரியனிலிருந்து இரண்டாவது இடத்தில் அமைந்துள்ள வெள்ளி, சுக்கிரன் அல்லது வீனஸ் (Venus) என்று அழைக்கப்படும் கோளாகும். பல ஆண்டுகளாக, குறிப்பாகப் பண்டைய மக்கள், சில வேற்றுக் கோள் அரக்கர்கள் வெள்ளியில், மேகங்களுக்குக் கீழ் வாழ்வதாக நினைத்துக் கொண்டிருந்தனர். ஆனால் இப்பொழுது வெள்ளியில் கடும் வெப்பத்தால் இது சாத்தியமே இல்லை என்பது நமக்குத் தெரியவந்துள்ளது.

வெள்ளி பல அற்புதமான இயல்புகளைக் கொண்டுள்ளது. அந்தக் கோளும் பூமியும் இரட்டைக் கோள்களாகவே பெரும்பாலும் கருதப்படுகின்றன. அது ஏன் தெரியுமா? வெள்ளியும் பூமியும் எறத்தாழ ஒரே அளவில் இருப்பது மட்டுமல்லாமல், இந்த இரண்டு கோள்களும் ஒன்றுக்கொன்று மிக அருகாமையில் இருப்பதும் இதற்குக் காரணமாக உள்ளது. இதைத் தவிர்த்து வெள்ளி பற்றிய இன்னும் ஒரு சுவாரசியமான விஷயம் என்னவென்றால், இந்தக் கோள் நீங்கள் நினைப்பது போல் நமது பூமியைப் போல் சுற்றுவது இல்லை, இதனது சுழற்சி பிற்போக்கான சுழற்சி, அதாவது ஆங்கிலத்தில் Retrograde Rotation என்று அழைக்கப்படும். இதற்கு என்ன அர்த்தம் தெரியுமா? நமது பூமியில் சூரியன் கிழக்கில் உதித்து மேற்கில் மறையும், ஆனால் வெள்ளியில் மேற்கில் உதித்து கிழக்கில் மறையும்.

வெள்ளி பற்றிய இன்னும் ஒரு சுவாரசியமான விஷயம் என்ன தெரியுமா? சூரியக் குடும்பத்திலே அதிக அளவில் எரிமலைகள் காணப்படும் கோள் வெள்ளி தான். அதில் 1,600 கும் மேற்பட்ட எரிமலைகள் காணப்படுகின்றன. உண்மை சொல்லப்போனால், இந்த எண்ணிக்கையை விட அதிகமாகத் தான் இருக்கும், ஏனென்றால் ஆராய்ச்சியாளர்களால் இன்னும் சிறிய சிறுய எரிமலைகளைக் கண்டுபிடிக்க முடியவில்லை. என்ன தான் வெள்ளியைப் பூமியின் இரட்டைச் சகோதரக் கோள் என்று கூறினாலும், அதில் நம்மால் வாழவே முடியாது. ஏனென்றால் நமது சூரிய குடும்பத்திலேயே வெப்பம் அதிகமான கோள் வெள்ளி தான். அதுவும் சும்மா வெப்பம் இல்லை! வெள்ளியில் சராசரியாக 462 பாகை செல்சியஸ் வெப்பநிலை இருக்கும்.


ஆனால், இது எல்லாவற்றிலும் என்னை மிகவும் வியக்க வைத்த விஷயம் என்ன தெரியுமா? வெள்ளியில் ஒரு நாள், அதன் முழு ஆண்டை விட நீளமானது என்கிற உண்மை தான். என்ன புரியவில்லையா? வெள்ளி தன்னைத் தானே சுற்றி வர, மிகவும் மெதுவாக, பூமியின் நாள் கணக்கின்படி 243 நாட்கள் எடுத்துக் கொள்கிறது. ஆனால் அந்த வெள்ளி சூரியனைச் சுற்றி வர, பூமியின் நாள் கணக்கின்படி 225 நாட்கள் எடுத்துக் கொள்கிறது. எனவே வெள்ளியில் ஒரு நாள் அதன் ஒரு ஆண்டை விட நீளமானது. இது ஆச்சரியமாக இல்லையா?
சரி நண்பர்களே இனி நீங்கள் கூறுங்கள். வெள்ளி பற்றி உங்களுக்கும் ஏதும் சுவாரசியமான விஷயங்கள் தெரியுமா? இதற்குப் பதிலை மட்டுமில்லை, எனது சிறு கட்டுரை பற்றிய அபிப்பிராயத்தையும் எனக்குக் கண்டிப்பாக எனது முகநூல் பக்கத்தில் (www.facebook.com/scinirosh) அறியத்தாருங்கள்!




# கண்ணில் நீர் வழிதல்

## Excessive Tearing (Epiphora)








கவலை வந்தால் கண்ணீர் வரும். ஆனால் கவலை இல்லாமலும் கண்ணீர் வருகிறது. உண்மையில் எந்த நேரமும் கண்களிலிருந்து கண்ணீர் சுரந்து கொண்டே இருக்கிறது. இது இயல்பானது. ஆனால் சிலருக்கு சிலவேளைகளில் கண்ணிலிருந்து நீர் அதீதமாக வழிகிறது. இது ஏன்?

Dr IN
டாக்டர் எம்.கே.முருகானந்தன்
MBBS (Cey),DFM (Col),FCGP (Col)
குடும்பவைத்தியர்

**கண்ணீரின் கடமைகள்**

காரணம் என்னவென்றால், கவலையை வெளிக்காட்டுவதை விட கண்களுக்கு மேலும் பல கடமைகள் உள. கண்களை ஈரலிப்பாக வைத்திருப்பது முக்கிய கடமையாகும். கண்கள் ஈரலிப்பாக இருப்பதால்தான் கண்களை நாம் மூடித் திறக்கும்போதும், பார்வையைத் திருப்புதற்காக கண்களை ஆட்டும் பொழுதும் உராய்வு இன்றி வழுவழுப்புடன் அதனால் இயங்க முடிகிறது.

கண்களுக்கு தேவையான போசணையில் ஓரளவு அதனூடகவும் கிடைக்கிறது. தூசி மற்றும் உறுத்தக் கூடிய பொருள்களிலிருந்து கண்களைப் பாதுகாக்கிறது. கண்கள் மாசு மறுவின்றி பளிங்கு போல கண்ணீரினால் பேணப்படுவதால்தான் எமது பார்வை தெளிவாக இருக்கிறது.

**கண்ணில் தொற்று நோய்கள் ஏற்படாமல் காப்பதும் கண்ணீர்தான்.**

எமது கண்களின் மேல் மடலுக்கு கீழே பல சிறிய கண்ணீர் சுரப்பிகள் உள்ளன. அவற்றிலிருந்து நாசிக்கு அருகே கண்களில் இருக்கும் நுண்ணிய துவாரங்கள் ஊடாகவே கண்ணீர் வருகின்றது.

இந்தக் கண்ணீரின் ஒரு பகுதி ஆவியாகி மறைந்துவிட, மீகுதி கண்ணீர்க் குழாய்களுடாக நாசியினுள் வழிந்து விடும். இது தொடர்ச்சியாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் வழமையான செயற்பாடு. இக் குழாய் அடைபடுவதாலும் கண்ணீர் அதிகமாக வழியலாம்.

**திடீரென அதிகமாக கண்ணீர் வடிதல்**

ஆனால் நாம் உணர்ச்சி வசப்படும்போதும், கண்களுக்குள் ஏதாவது விழுந்து உறுத்துப்படும்போதும் அதிகமாகக் கண்ணீர் வடிகிறது. இது வித்தியாசமான செயற்பாடு. இது கண்ணீர்ச் சுரப்பியிலிருந்து வெளியேறுகிறது. இது தற்காலிகமாக நடைபெறுவதாகும்.

தொடர்ந்து ரீ.வீ பார்க்கும்போது அல்லது கணனியில் வேலை செய்யும்போது கண்ணீர் வடிகிறது எனப் பலர் சொல்வதைக் கேட்கிறோம். இதற்குக் காரணம் என்ன? வழமையாக எமது கண்கள் அடிக்கடி இமைக்கிறது. அதாவது தானாகவே வெட்டி மூடுகிறது. இச் செயற்பாட்டின்போது மேலதிக கண்ணீர் கண்ணீர்குழாய் ஊடாக வெளியேறிவிடுகிறது.

ஆனால் தொடர்ந்து உற்றுப் பார்க்கும்போது கண்களை வெட்டி மூடும் செயற்பாடு குறைகிறது. இதனால் கண்ணீர் குழாய் ஊடாக வடிவது குறைந்து தேங்குவதாலேயே கண்ணீராக வடிகிறது.

கண்ணில் கிருமித்தொற்று (Conjuntivitis) ஏற்படும்போதும் கண்களிலிருந்து நீர் போல வடிவதுண்டு. கண்களின் பாதுகாப்பு சில தவறான நம்பிக்கைகள் பற்றிப் படிக்க மேலை கிளிக் பண்ணுங்கள்

**தொடர்ச்சியாக கண்களிலிருந்து நீர் வழிதல்**

ஆனால் இதைத் தவிர நீண்டகாலத்திற்கு தொடரும் அதிக கண்ணீர் சுரப்பதை chronic epiphora என்பார்கள். இவ்வாறான நீண்டகாலம் தொடரும் கண்ணீர் சுரப்பதற்கு மருத்துவ ஆலோசனை பெறுவது அவசியமாகும்.

**தொடர்ந்து கண்ணீர் வழிதலின் காரணங்கள்.**

சூழல் காரணமாகலாம். இரசாயனப் பொருட்கள், புகை, வெங்காய மணம் போன்ற கண்களை உறுத்தக் கூடிய ஏதாவது ஒன்று காரணமாகலாம்.


ஓவ்வாமை காரணமாகலாம். சுழலிலுள்ள தூசி, மகரந்தம் போன்றவற்றால் ஏற்படும் ஒல்வாமை (Kernal Conjunctivitis) காரணமாகலாம். குளுக்கோமா போன்ற ஏதாவது கண் நோய்களுக்கு தொடர்ந்து கண்களுக்கு ஊற்றும் துளி மருந்துகள் கூட சிலருக்குக் காரணமாகலாம்.

கண்நோய் எனப்படும் கண்களில் ஏற்படும் கிருமித் தொற்று கைெநஉவைைந conjunctivitis மற்றொரு காரணமாகும். வைரஸ் கிருமித் தொற்று எனில் நீர்போலவும், பக்றீரியா தொற்று எனில் சற்றுத் தடிப்பாக பூளையாகவும் வரும். காலையில் கண் விழிக்கும்போது அதனால் கண்கள் ஒட்டிக்கொண்டிருக்கும். அன்ரிபயடிக் கண்துளிகளை மருத்துவர் தருவார்.

ஓரிரு இமை முடிகள் உட்பக்கமாக சிலருக்கு வளர்வதுண்டு. Entropion என்பார்கள். இதுவும் மற்றறொரு காரணமாகும். வரட்சியான கண்கள் முக்கிய காரணமாகும். வயதாகும்போது பொதுவாக ஏற்படும் பிரச்சனை இதுவாகும். அடிக்கடி கண்களை வெட்டி மூடுதல், கடுமையாக காற்று வீசுமிடங்களைத் தவிர்த்தல், புகைத்தலை நிறுத்தல் போன்றவை உதவும். செயற்கைக் (Artificial tears) கண்ணீரை உபயோகிப்பதும் உதவும்.

கண்ணீர்க் குழாய் ஏற்படும் அடைப்புகளால் வழமையாக நாசிக்குள் வழிவது தடைப்படுவதால் கண்ணீராக ஓடக் கூடும். இதற்கு சிறிய சத்திரசிகிச்சை உதவும். மாறாக நுண்துவாரங்களில் ஏற்படும் அடைப்பு மருத்துவர் நீரினால் கழுவுவதன் மூலம் அகற்றுவார். சில குழந்தைகள் பிறக்கும்போது அக்குழாய் முழுமையாக வளர்ச்சியடையாததால் கண்ணீர் தொடர்ந்து வரும். சில வாரங்களில் அக் குழாய் முழுமையாக வளர்ந்ததும் கண்ணீர் பெருகுவது குறைந்துவிடும்.

CENTURY TRAVELS
CENTURY TRAVELS GmbH



Fon: 0231 5574 319 // Fon: 0231 5896 557
Fax: 0231 5844665

*Niederlassung.*
Rheinische Strasse 29
44137 Dortmund

உங்கள் விடுமுறையை சிறப்புடன்களிக்க
நம்பிக்கையான விமான சேவைகளை
பெற்றுத் தருகிறோம்.

*Hauptsitz.*
Steeler Strasse 150
45139 Essen.

Mob:0176 21 68 2149 Nishanthan
Email:info@centurytravels.de

# உங்களுக்கு காலம் எப்படி?




வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டங்களைக் கடக்கும் போதும் காலப் பாதையின் கட்டுமாணங்கள், கனவுகள், காட்சிப்படிமங்கள், இடர்கள், இமயாப் பொழுதுகள், மூளைப்பதிவுகள் எம்மை வழிநடத்துகின்றன. சில நேரங்களில் நாம் நினைக்கின்ற விடயங்கள் எமக்கு நடக்காமலே போகலாம். சில நேரங்களில் நாம் நினைக்கின்ற விடயங்கள் அப்படியே நடந்தும் விடலாம், சில நேரங்களில் நாம் நினைக்காத விடயங்கள் எமக்கு நடக்கலாம் இதற்கு காரணம் சந்தர்ப்பம் சூழ்நிலை என்று கூறினாலும் எம் மனது என்றோ போட்ட கணக்கு அது இன்று நிறைவேறியுள்ளது என்று தான் எடுத்துக் கொள்ள வேண்டும்.

ஒன்றை நினைக்கின் அது ஒழிந்திட் டொன்றாகும்
அன்றி அதுவரினும் வந்தெய்தும் - ஒன்றை
நினையாத முன்வந்து நிற்பினும் நிற்கும்
எனையாளும் ஈசன் செயல்

என்று நல்வழியிலே ஔவையார் கூறியிருக்கின்றார். இதைத்தான் நேரம் வரக் கூடிவரும் என்றும் கூறுவார்கள். எப்படித்தான் நீரூற்றி வளர்த்தாலும் பருவத்தால் அன்றிக் கனி தராது மரம்.

அடுத்து முயன்றாலும் ஆகும் நாளன்றி
எடுத்த கருமங்கள் ஆகா – தொடுத்த
உருவத்தால் நீண்ட உயர்மரங்கள் எல்லாம்
பருவத்தால் அன்றிப் பழா

என மூதுரையிலே அதே ஔவையாரே கூறியிருக்கின்றார். அவர்கள் அன்று கூறினார்கள். அதை எப்படி இன்று ஏற்றுக் கொள்வது? என்று சந்தேகப்பட்டு விட முடியாது. நாம் முன்னெடுக்கின்ற காரியங்கள் பல தடைகள் வந்து இறுதியில் அதற்குரிய காலமும் நேரமும் வருகின்ற போது வெற்றியையே தருகின்றது என்பதை அனுபவப் பாடமாக நாம் கற்றிருக்கின்றோம். பல முறை முயற்சித்து தோல்வி கண்டு இறுதியிலே வெற்றியடைந்தார் தோமஸ் அல்வா எடிசன். ஒவ்வொரு முறை தோற்கும் போதும் "இவ்வளவு பொருள்களைக் கொண்டும் பல்பை எரிய வைக்க முடியாது" என்ற உண்மையைக் கற்றுக் கொண்டேன் என்கிறார் தோமஸ் அல்வா எடிசன். தவறுகள் எமக்குக் கற்றுத் தரும் பாடம் எந்த நூல்களும் கற்றுத் தருவதில்லை. காலம் ஏற்படுத்தும் காயத்தின் வலி இன்பத்தின் முதலீடு என்றே கருத வேண்டும். "தன் மீது விழும் ஒவ்வொரு அடியும் தன்னைச் சிற்பமாகும் என்று கல்லுக்குத் தெரியாது" என்று அல்பேர்ட் ஐன்ஸ்ரைன் கூறியிருக்கின்றார். எனவே ஒவ்வொருமுறையும் காயப்படும் போதும் ஏதோ ஒரு பெரிய மகிழ்ச்சி காத்திருக்கின்றது என்ற நம்பிக்கையை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்பதை "நம்பிக்கை என்பது புயல் காற்றில் துவண்டு விழும் மெல்லிய மலர் அல்ல. அசையாமல் நிற்கும் இமயமலை போன்றது" என்று காந்தியடிகள் கூறிய வார்த்தைகளை மனதிலே கொள்ள வேண்டும். உலகில் வென்றவர்கள் எல்லாம் எமக்குச் சொல்லித்தரும் பாடம் இதுவாகவே இருக்கின்றது.

ஏனென்றால், காலம் கற்றுத்தரும் பாடம் எந்த ஆசிரியனும் கற்றுத்தர முடியாது. காலமும் நேரமும் அறிஞர்களை விட மேதாவிகள். இலையுதிர்காலம் வந்தால் நாம் விரிவுரை நடத்தாமலே மரங்கள் இலைகளை உதிர்த்துக் காட்டிவிடும். காலத்தையும் நேரத்தையும் எந்தவிதத் தடையும் போட்டுத் தடுத்துவிட முடியாது. அது கவலைகளைத் துடைத்தெறிந்துவிட்டுப் போகும். துன்பங்களைக் கழுவிவிட்டு கண்டுகொள்ளாமலே போய்விடும். சிலநேரங்களில் காயங்களையும் தந்துவிட்டுப் போகும். ஆனால், நடக்க வேண்டிய நல்ல விடயங்கள் சில நேரத்தில் சொல்லிக் கொள்ளாமலே நடந்துவிடும்.

## பட்ட அறிவே எம்மைப் பட்டை தீட்டுகின்றது.

செல்லுகின்ற வாழ்க்கைப் பாதையிலே பல விடயங்களைக் கற்றுக் கொள்ளுகின்றோம். அதன் படியே தொடருகின்றோம். பிரதிஸ்டம், அனுமானம், ஸ்வாதி என்னும் மூன்று விடயங்கள் மூலம் எமது வாழ்க்கை தொடருகின்றது. இதில் பிரதிட்சம் என்பது கண் முன்னால் காண்பதை விளங்கிக் கொள்ளல், அனுமானம் என்பது இது இப்படி இருப்பதினாலே அது அப்படி இருக்கும் நீ இதைப் பெறவில்லையென்றால், உனக்கு இது நடக்கும் என்று நினைத்துப் பார்த்தல், ஸ்ருதி என்பது முன்னோர்களின் மொழி. அதை அப்படியே ஏற்றுக் கொள்ளுதல். இவ்வாறு முன்னோர்கள் சொன்னதை அப்படியே சில விடயங்களில் ஏற்றுக் கொள்ளுகின்றோம். இல்லையென்றால், அவற்றைக் கொண்டு எம்மைத் தீர்மானிக்கின்றோம். இல்லையென்றால், கண்முன்னால் காண்பது மட்டுமே சரி என்று எடுத்துக் கொள்ளுகின்றோம். ஒரு நிகழ்ச்சியைப் பார்க்கும் போது பிரதிஸ்டம், அனுமானம், சுவாதி இதில் ஏதாவது ஒன்றைப் பிரதியீடு செய்து பார்க்கின்றோம். அனைத்தும் எமது மூளைப்பதிவுகளாகி எம்மை வழிநடத்துகின்றன.

ஆணி அடித்து மரத்தில் வைத்தது போல் ஆழமான சிந்தனைகள், அதேபோல இருளில் கிடக்கும் சிந்தனைகள் இவற்றை யெல்லாம் எழுத வைக்கும் பல நிகழ்வுகள் அத்தனையும் எமக்குக் காலம் போதிக்கும். வாழ்க்கையும் நேரமும் எங்களுடைய இரண்டு ஆசிரியர்கள். எப்படி நேரத்தை பாவிக்க வேண்டுமென்று வாழ்க்கை எங்களுக்குக் கற்பிக்கின்றது. நேரம் வாழ்க்கையை எங்களுக்குக் கற்பிக்கின்றது. ஒரு கவலையில் நாம் இருக்கின்ற போது நேரம் நீண்டு கொண்டு போவதுபோல உணருகின்றோம். ஆனால், ஒரு ஆசையை நாம் நிறைவேற்ற வேண்டுமென்றால், அதே நேரம் மெதுவாக ஊர்ந்து செல்வது போல உணருவோம். அனைத்தும் எம்முடைய உணர்வுகளே. ஆனால், காலமும் நேரமும் எம்மை வழிநடத்திக் கொண்டே இருக்கின்றன.

அறிவெனப்படுவது படித்த அறிவு, பட்ட அறிவு என்று இரண்டு வகைப்படுகின்றது. இதில் படித்த அறிவை விடப் பட்ட அறிவே எம்மைப் பட்டை தீட்டுகின்றது. அதனாலேயே வயோதிபர்கள் இறக்கின்ற போது ஒரு நூலகமே எரிகின்றது என்கின்றார்கள். அவர்களிடமே பட்ட அறிவு பல பக்கங்களை விளக்கமாக எடுத்துக்காட்டியிருக்கின்றது. அறிவைத் தேடிப் பெற காலம் கைகொடுக்க அக்காலத்தின் காட்சிப் படிமங்களையும், மூளைப்பதிவுகளையும், எமக்குள் ஏற்படும் எதிர்காலக் கனவுகளையும் முயற்சி, நம்பிக்கை, உண்மை என்னும் துணைக்கருவிகள் கொண்டு தொழிற்படுவோம். எமக்குக் காலம் நல்ல நேரத்தை தேடித்தரும்.






# சுழிபுரம் - காட்டுப்புலத்தில் ஒரு நாள்.





## இப்படியும் இளைஞர்களா நம் தாய்மண்ணில்!









வ.றொபின்

வல்லமையின் ஐந்தாண்டு, நிறைவையொட்டி நினைவில் நீங்கா நிகழ்வாய் நிறைவாண்டைக் கொண்டாடி மகிழ மக்களோடு மக்களாய் வீடு வீடாய் பிடியரிசி வாங்கிச் சேர்த்து ஒன்றாய் இணைந்து கூட்டாஞ்சோறு சமைத்துண்டு பசியாறிப் பறைந்து பேசி கலைகளால் கதைசொல்லி அவர்களின் கதை கேட்டு,இன்னல்கள் மறந்து கலந்துரையாடி கவலைகள் நீங்க வழிதேட, யாவரும் ஒன்றாய் கரம்கோர்த்த அந்நாள் பற்றி என்னுள்ளத்திலிருந்து............
வளைந்து நெளிந்த பாதை வழியே விழுந்து, பாய்ந்து பயணித்துக் கொண்டிருக்கும் பேருந்தின் பின்னிருக்கையிலே நானும் ஒருவனாய் கிராமத்தின் அழகினை இரசித்தவண்ணம் சென்று கொண்டிருந்தேன். வீதியோரக் கரும் பனைகள், வேலிகளாய் பூவரசு மரங்கள், பனை யோலைகளாலும், பனம் மட்டைகளாலும் நேர்த்தியாக அடைக்கப்பட்ட வேலிகளும், தரவைகளிலே மேய்ந்து கொண்டிருந்த செம்மறி ஆடுகளும், மாடுகளும், ஆங்காங்கே பயிரிப்பட்டிருந்த வெங்காயம், மிளகாய்,கத்தரி, பாவற்காய் போன்ற பயிர்களும் கிராமத்தின் கட்டமைப்பையும், பொருளாதார நடவடிக்கைகளையும் எடுத்தியம்பின.

காலை 10.30 மணியளவில் காட்டுப்புலம் காளி கோவிலடியில் சென்று நின்றது பேருந்து. சமைப்பதற்கும், கலந்துரையாடுவதற்குமான ஏற்பாடுகள் ஏற்கனவே கிராமத்து இளைஞர்களால் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது. எதிர்பாராத அளவில் மழலைகள் பலர் குழுமியிருந்தனர். சிலர் விரைவாக ஓடியோடி வந்துகொண்டிருந்தனர் இன்னும் சிலர் தங்களுடைய தோழமைகளை கூட்டிக்கொண்டு வருவதற்காய் ஓடிச் சென்றனர். நாங்கள் அனைவரும் குழுக்களாகப் பிரிக்கப்பட்டோம். ஒவ்வொரு குழுக்களுக்கும் தலைவர்களாய் அக்கிராமத்து சிறுவர்களே வழிகாட்டும் தலைமைகளாய் எம்மை வழிநடத்திச் சென்றார்கள்.
மணற்தரைப் பாதைகளும், தோட்டாத்துக்கூடாய் செல்லும் ஒற்றையடிப் பாதைகளும், வீட்டுக்கு வீடு காணப்படும் வேலிப் பொட்டுகளையும் நன்கறிந்த சிறுவர்கள் முன்செல்ல பறை முழங்கி, மேளங்கள் அடித்து நிகழ்வினை அறிவித்த வண்ணம் அவர்களைப் பின் தொடர்ந்தோம் நாம். வீடு வீடாய் சென்ற வேளை இன்முகத்தோடு வரவேற்று இல்லையென்று சொல்லாமல் அரிசி, வெங்காயம், மரக்கறியென சமையலுக்கான பொருட்கள் யாவும் தந்துதவினர் மக்கள். மாலைநேரம் நாடகங்களும், கலந்துரையாடலும் உள்ளதென செய்திகளும் பரிமாறப்பட்டன. வீட்டுக்கு வீடு வளர்க்கப்படுகின்ற நாய்களின் குணமறிந்து நாய்க்கடியிலிருந்தும் எம்மைக் காப்பாற்றினர் அக்கிராமத்துச் சிறார்கள்.

சேர்த்த பொருட்கள் யாவும் காளி கோவிலடியில் அமைந்துள்ள பொது நோக்கு மண்டபத்தடிக்கு கொண்டுவரப்பட்டு வந்தவரும், ஊரவரும் சேர்ந்து சமையல் வேலைகளில் மும்முரமாய் ஈடுபடத் தொடங்கினர். மறுபக்கம் சிறுவர்களோடு விளையாடியும், அவர்களை மகிழ்வூட்டும் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தார்கள் "புதிய வாழ்வுக்கான அரங்கப் பயணம்" எனும் அடிநாதத்தோடு செயற்பட்டுக்கொண்டிருக்கும் செம்முகம் ஆற்றுகைக் குழுவினுடைய கலைஞர்கள். ஏற்கனவே பெற்றுக்கொண்ட அனுபத்தோடு சிறுவர்களோடு அரங்க விளையாட்டுக்கள், கதைகூறல், பாட்டு பாடுதல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள்.


சிறுவர்களும் தங்களுடைய திறன்களை வெளிக்கொணர்வதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டபோது பல சிறுவர்கள் தயக்கமின்றி முன்வந்து தங்கள் திறமைகளை வெளிக்காட்டினர். ஆடிப் பாடி, விளையாடிக் களைத்த சிறுவர்களுக்கும் எமக்கும் பசிக்கத் தொடங்கியபோதே கூட்டாஞ்சோறு சமையல் முடிந்து சாப்பிட வருமாறு மகிழ்வான அழைப்பும் எமக்கு வந்து சேர்ந்தது.

தொடர்ச்சி 28 பக்கம்




# சூரியன் கிழக்கில் உதிப்பதில்லை.

## எனது ஞானக் குரு செ.கணேசலிங்கம்



கல்லாறு சதீஷ்



இலங்கைத் தமிழர்களின் படைப்பு வள்ளல் செ.கணேசலிங்கம் என்பேன். யாழ்ப்பாணத்திலிருந்து கணேசலிங்கம் தமிழகத்திற்குப் புலம்பெயர்ந்து சென்றார்.அங்கே அவர் பட்ட வாழ்வியல் துயரங்கள் அதிகமானது. அத்துயரங்களுக்குள் நீராடி இலக்கியம் படைத்து . இந்துப் பத்திரிகையில் கௌரவ பதவி வரை சென்றார். இலங்கைத் தமிழர்கள் தூக்கிவைத்துக் கொண்டாட வேண்டிய உயர்ந்த படைப்பாளி. எனது பதின்ம வயதுகளில் தேடித்தேடிச் செ.கணேசலிங்கம்,எம்.எஸ்.உதயமூர்த்தி என்று படிப்பேன். உதயமூர்த்தி எனக்குள் தன்னம்பிக்கையை விதைக்க கணேசலிங்கம் உலகை ஞானக் கண்களால் பார்க்க அறிவூட்டினார்.

”சூரியன் கிழக்கில் உதிப்பதில்லை”என்னும்

தலைப்பிட்ட நூலைப் பார்த்ததும்,”சூரியன் கிழக்கில் உதிக்கும்” என்றுதானே பாடசாலையில் சொல்லித் தந்தார்கள்,இவர் ஏன் இப்படித் தலைப்பிட்டுள்ளார் எனும் எண்ணத்துடன் நூல் வாசிக்க ஆரம்பித்தேன்,நான் அறிந்திருந்தது தவறு,இவர் தலைப்பிட்டிருந்ததே உண்மை என்று உணர்ந்தேன்.ஆம்,சூரியன் எந்தப்பக்கத்திலும்

உதிப்பதில்லை,அது தன்னிடத்தில்தான் இருக்கிறது,பூமிதான் சூரியனையும்,தன்னையும் சுற்றுகிறது அதனால்தான் சூரியன் கிழக்கில் உதிப்பதாகத் தோன்றுகிறது.சொல்லித்தரும் மேலோட்டமான ,கற்றுத் தந்த பொய்மைகளைக் கேள்வி கேட்கவும் ,புறக் கண்ணால் அன்றி அகக் கண்ணால் உலகைப் பார்க்கவும் எனக்குக் கற்றுத் தந்த ஒரே வரி”சூரியன் கிழக்கில் உதிப்பதில்லை”,அவரே என் முதன்மைக் குருவான செ.கணேசலிங்கம்.

இன்றைய சந்ததி எமது முதுசமாக விளங்கும் செ.கணேசலிங்கம் போன்றோரை வாழும் போதே கொண்டாட வேண்டும்.சாதித்துச் சாதித்து சரித்திரத்தை நிரப்பி நிற்கும் வரலாற்றுச் சிற்பி அவர்.

செ.கணேசலிங்கம் படைத்த ”சடங்கு” (1966)நாவல் யாழ்ப்பாணத்துச் சடங்குமுறைகளைப் பதிவு செய்த அற்புத நாவல்.அவரின் ”செவ்வானம்” (1967)நாவல் தமிழக பல்கலைக்கழகத்தில் எம்.ஏ பாடத்திட்டத்தில் இணைக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

இவரது ”நீண்ட பயணம்” நாவல்தான் 1965இல் வெளிவந்த முதலாவது புதினம். நீண்ட பயணம்,சடங்கு,செவ்வானம் ஆகிய மூன்று நாவல்களும் இருபதாம் நூற்றாண்டில் இலங்கையில் வெளிவந்த தலையாய நூல்கள் என்று உரைக்கின்றனர் பேராசிரியர்களான க.கைலாசபதி, கா.சிவத்தம்பி, செ.யோகராசா ஆகியோர்.

தொடரும் செ.கணேசலிங்கம் படைப்புகள் ஐம்பதையும் தாண்டுகிறது.
43 நாவல்கள்,சிறுகதைகள்,கட்டுரைகள் என்று அறிவும்,பதிவுமாய் கொட்டிக்கிடக்கின்றன,இந்த இலங்கைப் படைப்பாளியின் அறிவின் விருட்சங்கள்.
குந்தவிக்குக் கடிதங்கள்,குமரனுக்குக் கடிதங்கள்,மான்விழிக்குக் கடிதங்கள் என்றுபிரிந்திருந்த ஒரு தந்தை தூரேயிருந்து தனது பிள்ளைகளுக்கு உலகை ஞானக்கண்ணோடுபார்க்கக் கற்றுக்கொடுத்துப் படைக்கப்பட்ட கடிதங்களே நூலுருப்பெற்று பின்னாளில் என்னைப்போன்றசிறுவர்களும் அந்த நாட்களில் தேடிப் படிக்கும் பாடங்களாயின,ஆனால் நான் வாசித்து இலக்கியத்தில்அறிந்து வைத்திருந்த குந்தவி அக்கா பின்னொருநாளில் எனக்கும்,எனது மகனுக்கும் தேனீர் தயாரித்துத் தந்து,அவர் என் மகனோடு விளையாட,நான் எனது ஞானக்குருவான எழுத்தாளர் செ.கணேசலிங்கம் அவர்களுடன் அவர் இல்லத்தில் நீண்ட நேரம் உரையாடி மகிழ ஒரு நாள் கிடைத்ததை மகிழ்ந்து சொல்ல என்னிடம் வார்த்தைகள் இல்லை.

அவரை அன்புடன் விடைபெறும் போது பாலுமகேந்திரா நினைவுகள் எனும் நூலை அன்பளிப்பாக எனக்கு வழங்கினார். அங்கே இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்து சென்று கலைச்சாதனை புரிந்த இருவரின் வரலாறு அறிவோடும்,அன்போடும் பதிவு செய்யப்பட்டு படிப்போரை வியந்து பார்க்க வைக்கிறது. பாலுமகேந்திராவின் ஆரம்பகாலசினிமா முயற்சிகளில் முயன்று முன்னின்று வெற்றிகளை ஈட்டிக் கொள்ள செ.கணேசலிங்கம் அவர்களின் பங்களிப்பும் போற்றுதலுக்குரியது.-கல்லாறு சதீஷ்- 0041798000100










# இங்கிலாந்தில் தற்போது வசிக்கும் மூன்று மில்லியன் ஐரோப்பியரின் நிலை என்ன?

சிவஜெனனி

3 மில்லியன் ஐரோப்பிய நாட்டைச் (EU) சேர்ந்தவர்கள் இங்கிலாந்தில் (UK) வில் வசித்து வருகிறார்கள். இவர்கள் எல்லோருக்கும் கொடுக்கப்பட்ட நேரம் ஆனி மாதம் 2021ம் ஆண்டு வரை, இது வரை மட்டும் தான் இவர்கள் இங்கிலாந்தில் (UK) தங்களை “settled status” என்று பதிய முடியும்.

இங்கிலாந்து (UK) ஐரோப்பிய யூனியனில் (EU) இருந்து நிரந்தரமாக 29 March 2019 விலகிறது.

அரசாங்கம் என்ன சொல்கிறது என்றால், இதுவரை UK யில் இருந்தவர்கள் தாராளமாக இருக்கலாம். ஆனால் அவர்கள் exit அல்லது exit இல்லைக்குரிய விதிமுறைகளுக்கு கட்டுப் பட வேண்டும்.

இங்கிலாந்தின் மந்திரிகளின் (Ministers) அளிக்கும் வாக்குறுதிப்படி சில தரவுகளை நிரப்பவேண்டி (paperwork) இருக்கும், ஆனால் அவை பெரிதளவில் நேரம் எடுக்கமாட்டது! சில வினாடிகளிலேயே கேள்விகளிற்கு பதில் நிரப்பிவிடலாம்.
முதலில் பரீட்சாரத்திகமாக 4000 க்கும் மேற்பட்ட லிவப்பூல் (Liverpool) இருக்கும் பல்கலைக்கழக மாணவர்களும் (Universities student) 12 NHS Trusts சில் வேலை பார்ப்பவர்களும் தான் இந்த கேள்வி பதில் online நிரப்ப இருக்கிறார்கள். இவர்களுக்கு home office சில் பணிபுரிபவர்கள் எப்படி நிரப்புவது என்பதினை பக்கத்தில் இருந்து கற்றுக் கொடுப்பர்.

EU settled status சிற்கு விண்ணப்பிக்க விரும்புவோருக்குத் தேவையானவை: அடயாளதிற்கு ஆதாரம், குற்றவியல் ஒன்றும் இல்லை என்ற அத்தாட்சி, புகைப்படம் ஆகியவன. Home office சில் பணிபுரிவோர் உங்களுடைய உத்தியோகத்தில் உங்களைப் பற்றி விசாரனைகள் மேற்கொள்வார்கள்.

இவற்றை செய்வதற்குரிய செலவு, £65 பெரியவர்களுக்கும் சிறியோருக்கு (அதாவது 16வயதுக்குட் பட்டோருக்கு) £32.50 ஆகும்.
Eu மக்கள் இங்கே சுலபமாக settled status அடைவதற்காகவும் பணிபுரிவதற்காகவுமே இப்படி ஒரு நடவடிக்கையை உருவாக்கியுள்ளோம் என்றார் Immigration Minister Caroline Nokes.
இப்போதில் இருந்தே சிறு சிறு குழுவாக விண்ணப்பிக்க அழைத்து






அவர்களது நிலையை (status) தக்கவைத்துக் கொள்ள உதவி செய்கின்றோம். அவர்கள் இப்போது இருப்பது போலவே பின்பும் இருக்கலாம். சிறுதளவில் நாம் மக்களை அழைப்பதற்கு காரணம் என்னவென்றால், இவர்களுடைய பின்னணியை அறிந்து இன்னும் இந்த செயல் முறையை சுலபமாக்குவதற்கே!
இந்த திட்டம் முழுமையாக 30ம் திகதி பங்குனி 2019 ஆரம்பிக்கப்படுகிறது. இதற்கு பின்னர் EU வை சேர்ந்தவர்களுக்கு 5 வருடம் UK யில் வசித்தவர்களுக்கு settled staus கொடுக்கபடும்.

31ம் திகதி மார்கழி மாதம் 2020 க்குள் வந்து UK யில் இருப்பவர்களுக்கு, அதாவது இதுவரை UK யில் வசிக்காதவர்களாயிருப்பின் அவர்களுக்கு “pre settled” என்ற status கொடுக்கபடும். அவர்களும் 5 வருடங்கள் இருந்த பின் “settled status” கொடுக்கப் படும்.
2020 மார்கழிக்குப் பின்னர் வருவோருக்கு என்ன நிலை என்பது இன்னும் அறிவிக்கப் படவில்லை.






Frankfurt நகரில்....

புதுப்பொலிவுடன்
மீண்டும் உங்கள்
அபிமான ஸ்தாபனம்

Jaffna Bazar




# Jaffna Bazar

உங்கள் இல்லத்திற்கு தேவையான அனைத்து
மளிகைப்பொருட்களும் பசுமையான மரக்கறி
மற்றும் கடல் உணவு வகைகளும்
நம்மிடம் கிடைக்கும்

வாருங்கள் தாயகத்தில் நிற்கும் உணர்வை
நீங்கள் பெறுவீர்கள்






Kaiser Straße.49 69329 Frankfurt Main
Tel: 069 25 62 6353 e.mail:jbspiece2018@yahoo.com

0049 69 25626353
0049 179 4792961
0049 151 71520425

## சோஸ்ற் தமிழ்க் கல்வி கலாச்சார அமைப்பு நடத்திய 14 வது ஆண்டு விளையாட்டுப்போட்டி









**யேர்மனியில் 16.09.2018 ஞாயிறு சோஸ்ற் தமிழ்க் கல்வி கலாச்சார அமைப்பு நடத்திய 14 வது ஆண்டு விளையாட்டுப்போட்டியில் இருந்து சில காட்சிகள். படம் : வெற்றிமணி**

## நான் சிறுவயதில் எழுதிய வெற்றிமணியா இது! மகிழ்ச்சியில் டாக்டர் எம். கே.முருகானந்தன்





## தாயகத்திலும் உங்கள் வெற்றிமணி

வெற்றிமணி இலங்கையில் அன்று சிறுவர் மாத இதழாக வெளி வந்த வேளை. தனது எழுத்தாற்றலை சிறுவயதிலேயே பதிவு செய்துள்ளேன் என்கிறார் டாக்டர் முருகானந்தன் அவர்கள். அத்துடன் அதன் ஸ்தாபகர் அமரர் மு.க.சு.ப்பிரமணியம் அவர்களை தான் பல தடவை கொழும்பில் சந்தித்து இருப்பதாகவும் நினைவுகூர்ந்தார்.

இலங்கையில் இன்று பிரபல டாக்டராக விளங்கும் இவர். இலக்கியத் துறையில் மிகுந்த ஆர்வம் கொண்டவர்.

எல்லா டாக்டருக்கும் இலக்கியம் வாராது. இலக்கியவாதிகள் எல்லோருக்கும் மருத்துவம் வராது. ஆனால் இவருக்கு இரண்டும் கைவந்த கலை.

அன்று 1960 களில் வெற்றிமணியில் ஆக்கங்களைப் படைத்த இவர் இன்றும் தமது ஆக்கங்களை வெற்றிமணியில் அருமருந்தாகத் தருவது வியப்பான உண்மை.

வெற்றிமணியில் வாசகர்கள் விரும்பி படிக்கும் பகுதிகளில் ஒன்று Dr IN என்பதபதாகும். அப்பகுதியில் மாதம் மாதம் வாசகர்களைக் காணும் டாக்டர் முருகானந்தனுக்கு எமது நன்றி.

கட்டுரைகளை பெறுவதற்கான தொடர்பினை ஏற்படுத்தி உதவிய திரு எஸ்.திருச்செல்வம் (பிரதம ஆசிரியர் தமிழர்தகவல் கனடா )அவர்களுக்கும். இன்று வெற்றிமணி பிரதிகளை நேரில் கையளித்து (10.09.2018) படங்கள் எடுத்து உதவிய வெற்றிமணி அறிவிப்பாளர் சகநாயகன் சக்திவேல் அவர்களுக்கும் வெற்றிமணியின் நன்றி.


## எமது தயாரிப்புக்கள் தற்போது யோ்மனியிலும் கிடைக்கும்







Foto: Konessfotos.de

# கலாகீர்த்தி சாந்தினி சிவநேசன் அவர்களின் பாராட்டுமழையில் நனைந்த செல்வி அபிரா தயாபரனின் நாட்டிய அரங்கேற்றம் !

யேர்மனியில் கடந்த 15.09.2018 சனிக்கிழமை செல்வி அபிரா தயாபரனது பரதநாட்டிய அரங்கேற்றம் மிகச்சிறப்பாக இடம்பெற்றது. இவர் கிறிபீல்ட் ஆடற்கலாலய அதிபர் ஆடற்கலைமணி திருமதி ரஜினி சத்தியகுமார், நாட்டியக் கலாவித்தகர் செல்வன் நிமலன் சத்தியகுமார் அகியோரது மாணவியும் திரு.திருமதி தயாபரன் ஆகியோரது அன்புப் புதல்வியுமாவார்.

சுவெற்றா கனகதுர்கை ஆலயக் குருக்கள் செல்வன் சங்கர் சர்மா அவர்களின் பூஜையுடன் அரங்கேற்றம் ஆரம்பமானது. பிரதம விருந்தினராக தாயகத்தில் இருந்து, கொக்குவில் கலாபவனம் நடனப்பள்ளி அதிபரும் பிரபல நடன ஆசிரியையுமாகிய கலைச்செல்வன் அமரர் ஏரம்பு சுப்பையா அவர்களின் மகளும் மாணவியுமான கலாகீர்த்தி சாந்தினி சிவநேசன் அவர்கள் கலந்து சிறப்பித்தார்.

அவர் தனதுரையில் யேர்மனியில் வாழும் தமிழ்மக்கள் மொழியும் கலையும் இரு கண்கள் எனப் போற்றி வளர்ப்பது கண்டு பூரிப்படைந்தேன் என்றார். தனது மாணவியான திருமதி றெஜினி சத்தியகுமார் அவர்கள் தான் கற்றகலையை ஜீவநதியாக யேர்மனியில் பாயவும் வழிசமைத்துள்ளார். அது மட்டுமன்றி, நதி வற்றாது பாய மாணவர்களையும் உருவாக்கியுள்ளார். இந்த வகையில் அவரது மாணவனும் புதல்வனுமாகிய செல்வன் நிமலன் சத்தியகுமார் அவர்கள் பரதக்கலையின் நம்பிக்கை நட்சத்திரமாகத் திகழ்கின்றார் என்று பெருமிதத்துடன் குறிப்பிட்டாார்.

மேலும் அவர் குறிப்பிடுகையில் பக்கவாத்தியக்கலைஞர்கள் தாளம் பாவம் உணர்ந்து பாடுவதாகவும். அரகேற்ற நாயகி அற்புதமாக பாவங்களை வெளிப்படுத்துவதாகவும். நடனத்துக்குரிய ஆடைகள் அணிகலன்கள் சிறப்பாக அமைந்திருப்பதாகவும் தெரிவித்து. இசையை இரசிப்பவர்களுக்கு இசையும் பரதத்தை இரசிப்பவர்களுக்கு பரதமும் அலங்காரத்தை இரசிப்பவர்களுக்கு அலங்காரமும் என ஒன்றை ஒன்று விஞ்சும்வண்ணம் அமைந்து யாரையும் மகிழ்சியில் மூழ்கடித்துவிட்டது, என்றார்.

சிறப்பு விருந்தினராக கலந்து சிறப்பித்த வெற்றிமணி, சிவத்தமிழ் பிரதம ஆசிரியர்மு.க.சு.சிவகுமாரன் அவர்கள். யேர்மனியில் கலை வளர்த்தவர் களுக்கும் தமிழ் வளர்த்தவர்களுக்கும் தலைவணங்கி தன் உரையை ஆரம்பித்தார்.

மதுரக்குரலோன் கண்ணனும் அவர் புதல்வி அனுஷா கண்ணனும் இணைந்து பாடிய கண்ணன் பாட்டில் தன்னை மறந்து ஆடிய செல்வி அபிரா, பாடலின் இறுதியில் அலாக்காகத் திரும்பி ஒரு பார்வையில் யாவரையும் வீழ்த்தி, பின் திரும்பாது மிடுக்காகக்க சென்ற காட்சி அபிரா தயாபரனது ஆற்றலுக்கும் ஆசிரியர் செல்வன் நிமலனது பயிற்றுவிக்கும் பாணிக்கும் கிடைத்த பெரும் அங்கீகாரமாக அமைந்தது.

மேடையில் இருந்த அந்தனை கலைஞர்களும் நம் கண்முன்னே வளர்ந்த பெரும் கலைஞர்கள். அவர்கள் வளர்ச்சியை அருகில் இருந்து பாரர்க்க கிடைத்தது வாழ்வில் தனக்கு கிடைத்த பெரும்பாக்கியம் என்றார். சிறப்புற அரங்கேற்றம் கண்ட நாயகி அபிரா தயாபரன் அவர்களுக்கு வெற்றிமணி சார்பாக வளர்கலை விருதினை வழங்கிக் கௌரவித்தார். இந்த விருதினை நான்கு தலைமுறை கலைஞர்களாக கலைச்செல்வன் அமரர் ஏரம்பு சுப்பையா அவர்களின் பாதம் பணிந்து, கலாகீரத்தி திருமதி சாந்தினி சிவநேசன், ஆடற்கலைமணி திருமதி ரெஜினி சத்தியகுமார், நாட்டியக் கலாவித்தகர் செல்வன் நிமலன் சத்தியகுமார் ஆகியோர் ஒருமித்து நிற்க, சபையோரின் பலத்த கரகோஷத்தின் மத்தியில் வழங்கப்படது.




மற்றும் சிறப்பு விருந்தினராக கலந்து சிறப்பித்த சங்கீத ஆசிரியை வித்தியாபூசணம் மீரா நித்தியானந்தன் அவர்கள் செல்வி அபிராவின் ஆடற்திறனைப் போற்றியதுடன் பரதக்கலைக்கு அவசியமாகத் திகழும் இசைக்லையை பயில மாணவர்கள் முன்வரவேண்டும். என்ற ஆதங்கத்தையும் முன்வைத்தார்.

வாழ்த்துரை வழங்கிய திரு. கி.த.குகதாசன் அவர்கள் தனது உரையில். இந்த அரங்கில் அத்தனை கலைஞர்களும் இளைய முத்துக்கள். இவர்கள் எமது கலாச்சாரத்தை தொடர்ந்து எடுத்துச் செல்வார்கள் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை என்று கூறி அவர்களை வாழ்தினார்.

இறுதியாக ஒரு குச்சியுடன் ஓர் இசை நடனம் வாழ்வின் தொடக்கம் முதல் இறுதி வரை அந்தக் குச்சி எப்படி நம்மைத் தொடர்கிறது என்பதனை தன் அபிநயத்தால் சிறப்புற படைத்தாள் அபிரா. குச்சிக்கும் கதை சொல்லும் ஆற்றல் உண்டா என வியக்கவைத்த நடனம் அது. அந்த வியப்புடன் அற்புதமாக அரங்கேற்றம் நிறவுற்றது. அரங்கேற்றம் நிறைவா நடைபெற்றதற்கான சான்றிதழை ஆடற்கலாலய அதிபர் செல்வி அபிரா.தயாபரனுக்கு வழங்கி வாழ்த்தினார். அரங்கேற்ற நிகழ்வானது தமிழ் மொழியில் திரு ரமேஸ் அவர்களும் யேர்மன்மொழியில் செல்வி கிலார். ஜஸ்ரின் அவர்களும் சிறப்பாக தொகுத்துவழங்கினார்கள்.

Konessfotos.de

Nandy's Catering & Partyservice
உங்கள் இல்லத்தில் எந்த வைபவங்களாக இருந்தாலும்
குன்றாத சுவையுடன், சுடச் சுடப் பரிமாறுகின்றோம். இலங்கை இந்திய ஐரோப்பிய
உணவுகளையும் தயாரித்த வழங்குகின்றோம்.
பரிமாறுதல் ஒரு கலை அது எமது நிறுவனத்தின் கைவந்தகலை!
ஒரே குடையின் கீழ் எங்கள் சேவை!
உணவு விநியோகம் பாரிமாறல் மற்றும் நிழல்படம், வீடியோ
அதுமட்டுமன்றி எமது திறமையான ஊழியர்கள் உங்கள்
விழாவை திட்டமிடுதல், திருமணமேடை, மண்டபம்
மற்றும் மண்டபச் சோடனைகள் மற்றும்
நடைமுறைப்படுத்துதல் போன்றவைகளுக்கு உதவ
ஆயத்தமாக உள்ளளோம்
NANDY'S CURRY'S & MORE WWW.NANDYS.DE
Düsseldorf
Mobil 0173-7424955
Tel:0211 76 91 974
www.Nandys.de
e.mail:info@nandys.de

# தாயகம் நோக்கிய பயணம்!........

**வ.சிவராஜா**



"பெற்றதாயும் பிறந்தபொன் நாடும்
நற்ற வானிலும் நனிசிறந்தனவே"

என்ற நல்மொழிக்கு இணைதான் ஏது. புலம்பெயர் வாழ்வில் பல ஆண்டுகள் கடந்து வாழ்ந்தாலும் பிறந்த நாட்டை, ஊர், உறவுகளை, நட்புக்களைச் சந்தித்து, ஒன்றுகூடி உண்டு குடித்து மனம்விட்டுக் கலந்துபேசி மகிழ்வது எவ்வளவு ஆனந்தம். இவற்றை வார்த்தைகளால் விபரிக்கமுடியாது. அனுபவித்தால்தான் அதன் தார்ப்பரியத்தை விளங்கிக் கொள்ளலாம்.

இந்தவருட கோடை விடுமுறையில் நான் பிறந்த தேசமான இலங்கைக்கு யேர்மனியிலிருந்து சென்றிருந்தேன். நிண்டநேர விமானப்பயணத்தின் பின் 18.8.18 அதிகாலை தாயக மண்ணில் காலடி வைத்தபோது என்னையறியாத ஒரு உணர்வு, ஒரு ஆனந்தம், ஒரு மகிழ்ச்சி. இந்த விடுமுறையின் போது வடமாகாண முதலமைச்சரைச் சந்திக்க வேண்டும் என நான் ஏற்கனவே திட்டமிட்டிருந்தேன்.
2018 யூலைமாதம் வடமாகாண முதலமைச்சருக்கு நான் யேர்மனி யிலிருந்துவந்து தங்களைச் சந்திக்க விரும்புகிறேன் எனக் கடிதம் அனுப்பி இருந்தேன். அதற்கு அவர்கள் 28-8-2018 தேதியன்று கைதடியிலுள்ள அவரது அலுவலகத்தில் சந்திப்பதற்குப் பதில் அனுப்பியிருந்தார். அதன்படி நானும் எனது ஊர் காந்தி சனசமூக நிலையத்தின் தலைவர் திரு ஆ.பாலேந்திரன் செயலாளர் திரு சி.றஞ்சித் ஆகியோர் சென்றிருந்தோம்.

கௌரவ முதலமைச்சர் நீதியமைச்சர் திரு.சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் ஏற்கனவே நேரம் குறிப்பிட்டபடி காலை பத்து மணிக்கு தமது அலுவலகத்தில் எங்களை வரவேற்றார். மரியாதையின்படி அவருக்கு நான் பொன்னாடை ஒன்றை அணிவித்துக் கௌரவித்தேன். புலம்பெயர்வாழ் எழுத்தாளர்கள், மற்றும் ஊடகங்கள் பற்றியும் மண் சஞ்சிகையின் 28வருடகால செயற்பாடுகளையும் குறிப்பாக ஆதரவற்ற பிள்ளைகளுக்கு எமது வாசகர்கள் செய்துவரும் உதவிகள் எனப் பல விடையங்களை எடுத்துரைத்ததுடன் நாட்டின் அரசியல் நிலவரங்களையும் மாகாணசபை விடையங்களையும் சுமார் ஒரு மணிநேரம் கலந்துரையாடினோம்.





எனது ஊர் காந்தி சனசமூகநிலையம் சார்பில் மகஜர் ஒன்றையும் நியைலத்தலைவர் கையளித்தார். நமது விடையங்களை எல்லாம் செவிமடுத்த முதலமைச்சர் அவர்கள் எதிர்காலத்தில் உங்கள் தேவைகள், நிலைப்பாடுகள் பற்றி எழுத்துமூலம் அறியத்தரும்படியும் கேட்டுக்கொண்டார். ஒரு திறமைமிக்க முதலமைச்சர், ஒரு உயர்நீதிமன்ற இளைப்பாறிய நீதி அரசர், மேலாக நல்லதோர் மனிதர் இவரைச் சந்தித்த பெருமையும் மகிழ்வோடும் அவரிடமிருந்து விடைபெற்றுச் சென்றோம்.
பலவருடங்களாக எமது மண் சஞ்சிகையூடாக வாசகர்களின் பெரும் நிதி உதவியால் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள ஜெயபுரம் (ரூத் மிஷன்) சிறுவர் இல்லத்திற்கும் உதவிவருகிறோம். 31.08.2018 அன்று எனது பிறந்தநாள் பரிசாக அந்த இல்லத்தின் பாவனைக்காக ஒரு கை மடிக்கணனி ஒன்றை அன்பளிப்பாக வழங்கினேன். மேலும் இல்ல நிர்வாகி வணக்கத்துக்குரிய சகோதரி கிளாடிஸ் ஜெயரட்ணம் அவர்களிடம் இந்த இல்லத்தின் தேவைகளுக்காக 25.000-00 ரூபாவையும் வழங்கினேன்.
இப்படியாக எனது 2018 விடுமுறை நல்லமுறையில் கழிந்ததை எண்ணி ஆனந்தப்படுகின்றேன். இம்முறை கிழக்கு மாகாணத்திற்குச் செல்லும் வாய்ப்புக் கிட்டவில்லை. இருந்தும் அவர்களுக்கான சேவைகள் தொடர்கின்றன. வடபகுதியின் பல ஊர்களுக்கும் சென்று பல உறவுகள் நண்பர்களைச் சந்தித்ததில் பெரும் சந்தோசம். அன்பர்களே இக்கட்டுரையை வாசிக்கும் நீங்கள் எதாவது கருத்துக்கள் இருப்பின் என்னோடு பகிர்ந்துகொள்ளுங்கள்.....பயணங்கள் முடிவதில்லை.....

## திருக்கேதீஸ்வரத்தில் அம்மை அப்பன் இல்லம்.





கடந்த 18.08.2018 தாயகத்தில் திருக்கேதீஸ்வரத்தில் (மன்னார்) திரு.வே.விசுவலிங்கம் தலைமையில் (ஓய்வுபெற்ற அரசாங்க அதிபர்) செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்கள் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு திறந்து வைத்தார். நிறுவனத்தின் ஸ்தாபர் திருமதி சி.வல்லிபுரம் அனைவரையும் அன்புடன் அழைத்து மகிழ்ந்தார்.




வாகனச் சாரதி பயிற்சி நிலையம்
HK Hammacher
Fahrschule- hk- hammacher.de
எமது இணையத்தளத்தை பார்க்கவும்
ஆங்கிலம்,யேர்மன்,பிரஞ்,துருக்கி மொழிகளில்
வகுப்புக்கள் உண்டு.பரீட்சைக்கு வரக்கூடிய வினாக்கள், கார் மற்றும் மோட்டோசைக்கிளிற்கும் சிறப்பாகத் தெரிவுசெய்துகற்பிக்கப்படும்.
தமிழில் தொடர்புகளுக்கு: 0172 57 35 454
HK Hammacher
Schleswiger Str .5
44145 Dortmund
0231 81 55 94
0173 56 46 651
MPU
ASF
FES
இவர்களுக்கான சிறப்பு வகுப்புக்களும் உண்டு!

Chilli Mixx Catering
உங்கள் மங்கலகர வைபவங்கள் சுவைபெற எம்மை அழையுங்கள்!
திருமண விழாக்கள்
பூப்புனித நீராட்டு வைபவங்கள்
பிறந்த நாள் கொண்டாட்டங்கள்
ஒன்றுகூடல்கள் எதுவானாலும்
அறுசுவை படைக்க அழையுங்கள்



+49 176 41842298 +49 176 21303158







# வசீகர வளைவுகள்

வசீகரமான வளைவுகள் கண்களை அகல விடாமல் இழுத்துப் பிடித்தன. வழவழப்பான மேனியைத் தீண்ட வேண்டுமென விரல்கள் துடியாய்த் துடித்தன. வாவ் என்ன அழகு என உதடுகள் ஈரமாய் முணு முணுத்தன. மெதுவாக அந்த வளைவில் விரல்களால் மீட்டுவோம் என .....

"டேய் என்னடா எழுதறே" தோளின் வழியாய் எட்டிப்பார்த்துக் கொண்டே கேட்ட நண்பனின் கண்களில் கோபம் தெறித்தது.

"ஏன் என்னாச்சு ?" என்று கேட்டேன். எழுதியதை எட்டிப்பார்த்ததும் இல்லாமல் கோபப்படுகிறானே என மனது எரிச்சலானது.

"நீ கொஞ்சம் டீசன்டா எழுதறவன்னு நினைச்சேன். இப்படி ஆபாசமா எழுதிட்டிருக்கே ?"

"ஆபாசமாவா ? என்னடா சொல்றே "
"நீ எழுதினதை நீயே வாசித்துப் பாரு. ஒரு பொண்ணை இப்படியா வர்ணிப்பே" அவன் சொன்னபிறகு தான் மீண்டும் முதல் பாராவுக்குச் சென்று வாசித்தேன். சத்தமாய்ச் சிரித்தேன்.

"டேய் மச்சி.. நான் பொண்ணைப் பற்றி எழுதல, போனைப் பற்றி எழுதறேன்" என்றேன் சிரித்துக் கொண்டே. இப்போது எனது சிரிப்பு அவனுடைய உதட்டுக்கு இடம் மாறியது.
அப்போது தான் தோன்றியது ஸ்மார்ட் போனுக்கும், ஸ்மார்ட் பெண்ணுக்கும் இடையே இருக்கின்ற விளக்க முடியாத ஒரு தொடர்பு. மனசு இரண்டுக்குமிடையேயான ஒற்றுமையைத் தேடி இறக்கை கட்டாமல் பறந்து திரிந்தது.

புத்தம் புதிதாய் வசீகரமாய் கண்ணடிக்கும் ஒரு ஸ்மார்ட் போனின் எழிலையும், அழகிய பெண்ணின் அழகையும் இணைத்துப் பார்க்கலாம். போனை ஒரு ஆணோடு இணைத்துப் பார்ப்பவன் சபிக்கப்படுவான். எழில் சோலைக்கும், உலர் பாலைக்கும் எவனாவது முடிச்சுப் போடுவானா என்ன ?

அந்த வளைவு ! அதில் இருக்கின்ற நேர்த்தி. தாவணியோடு துள்ளித் திரிகின்ற கிராமத்து மின்னல்களின் வளைவுகளுக்கு இணையல்லவா ? சற்றும் பிசிறில்லாத அந்த வழவழ வனப்பின் அழகை வேறு எதனோடு தான் ஒப்பிடுவது ?

இப்போதெல்லாம் ஸ்மார்ட் போனைத் திறக்க எண்கள் அவசியமில்லை. விரல் தொடுதலே போதுமானது. விரல் தொடுதலில் விழித்தெழுகின்ற ஸ்மார்ட் போன்கள், காதலர்களுக்கு காதலியின் உள்ளங்கையை ஞாபகப்படுத்தும்.
ஒற்றைத் தொடுதலில் கண்களில் வெளிச்சம் கூட்டும் பெண்களை ஸ்மார்ட் போன்கள் தொடர்ந்து நினைவூட்டிக் கொண்டே இருக்கின்றன.

விரல் தொடுதல் கூட அவசியமில்லை அதி நவீன போன்களுக்கு. முகம் பார்த்தாலே மலர்ந்து விடுகின்றன. பெண்களின் முகம் பார்த்தால் மலர்ந்து விடுகின்ற வாலிப விழிகளைப் போல.

காதலியின் கரம்பற்றிச் செல்லும் காதலர்களைப் பார்த்திருக்கிறீர்களா ? உலகில் எல்லோரும் விடுப்பில் இருப்பதைப் போல அவர்களுடைய நடவடிக்கைகள் இருக்கும். சில வேளைகளில் உலகமே விடுப்பில் இருப்பதைப் போல சிரித்து நடப்பார்கள். சில ஸ்மார்ட் போன்களைக் கரங்களில் சுமக்கும் இளையவர் நெஞ்சங்களும் அப்படியே தான் இருக்கின்றன. அவர்கள் உலகை மறந்து அந்த ஐந்தரை இஞ்ச் வெளிச்சத் திரைகளில் வழுக்கித் திரிகிறார்கள்.

சாலை நடுவிலும், நெரிசல் நிலையிலும் அவர்களும் அந்த போனும் மட்டுமே பிரபஞ்சத்தில் மிச்சமிருப்பதைப் போல அவர்கள் பாவிக்கின்றனர். அதிகாலையில் எழுந்ததும் நரி முகத்தில் விழித்தது பண்டைய வழக்கம். அம்மா முகத்தில் விழித்தது முந்தைய வழக்கம். ஸ்மார்ட்போனின் முகத்தில் விழிப்பது இன்றைய வழக்கம். தேனிலவுக்குச் செல்லும் காதலர்களைப் போலத் தான் ஸ்மார்ட்போன்களும், கரங்களும் பிரியாமல் இருக்கின்றன.

## வசீகரமான ஆடைகள்



ஸ்மார்ட் போன்களைச் சுமந்து செல்லும் பெண்களோ, அழகைச் சுமந்து செல்லும் எழில் நதிகளாக நடக்கின்றனர்.
அவர்களுடைய கர்வத்தின் கிரீடங்களாக அவை கூட நடக்கின்றன.

ஒரு செல்லப் பிராணியைப் போல அவர்கள் அதைப் பாதுகாக்கின்றனர். வசீகரமான ஆடைகளால் அதை போர்த்துக் கொள்கின்றனர்.

தொடர்ச்சி 21 ம் பக்கம்







# வசீகர வளைவுகள்

அடிக்கடி புத்தாடை வாங்கும் பெண்கள், தங்கள் ஸ்மார்ட் போனுக்கும் ஒரு ஆடையை வாங்க மறப்பதில்லை. வெல்வெட் போர்த்திய மெல்லிய ஆடைகளை சில வாரங்கள் வைத்திருப்பார்கள். பொம்மைகள் சிரிக்கும் கண்ணாடி ஆடைகள் அடுத்த வாரங்களில் முகம் காட்டும். உடலோடு ஒட்டிப் பிடிக்கும் ஆடைகள் சில நேரம், இருபுறமும் கைகளை விரிக்கும் ஆடைகள் சில நேரம் என ஆடைகள் தொடரும்.

இப்போதெல்லாம் வைரத்தை ஓரங்களில் ஒட்டி வைத்தும் ஸ்மார்ட்போனுக்கு ஆடைகள் அணிவிக்கின்றனர் பெண்கள். "போனை விட அதிகமா கவருக்கு செலவு செய்ய வேண்டியிருக்கு" என புலம்பாத காதலர்களைக் கொண்ட பெண்கள் பாக்கியவான்கள். காதலிக்கு ஆடைவாங்கவே முழி பிதுங்கும் காதலர்கள் பரிதாபத்துக்குரியவர்கள்.

தேவையிருந்தாலும் தேவையில்லாவிட்டாலும் ஆப்ஸ்களை தங்களுக்குள் சேமித்துக் கொண்டே இருக்கின்றன ஸ்மார்ட் போன்கள் . எப்போதேனும் பயன்படுத்தும் ஆப்களும் ஸ்மார்ட் போனுக்குள் நிரந்தரமாய்க் கூராடமிட்டுக் குடியிருக்கின்றன. பெண்களின் பட்டுப் புடவைகள் அடுக்கப்பட்டிருக்கும் அலமாராக்களைப் போல அவைகள் புன்னகைக்கின்றன. என்றேனும் பயன்படுத்துவார்கள் எனும் நினைப்பில் அவை தூக்கத்தில் விழித்திருக்கின்றன.

நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாக களமிறங்கும் ஸ்மார்ட் போன் மாடல்கள் இளைஞர்களின் கனவுப் பிரதேசத்துக்குள் கண்ணி வெடி வைக்கின்றன. ஒவ்வொரு நவீனத்துடனும் வருகின்ற புத்தம் புதிய ஸ்மார்ட் போன்கள், பழைய போன்களின் மெமரி மனதில் பொறாமை விதைக்கின்றன. அவர்களுடைய புராசசர் வேகங்களை, பழைய காதலியர் கலாச்சாரப் பிழை என கற்பித்துக் கொள்கின்றனர்.

ஆசையின் பெருந்தீயையும், ஆர்வத்தின் பெரும் தழலையும் இந்த ஸ்மார்ட் போன்கள் விதைத்துக் கொண்டே இருக்கின்றன. பழைய போன்களை வைத்திருப்போர் அதில் புதிய வரவுகளின் வசீகரம் காணாமல் களையிழக்கின்றனர். புதியதாய் ஒன்றைப் பதியம் போட மனதுக்குள் மோகத் தீயை முளைக்க விடுகின்றனர்.




போன்களின் அடிப்படைத் தேவை பேசுவது என்பது மறைந்து விட்டது. இப்போது அலங்காரங்களும், வசீகரங்களுமே முன்னிலைப்படுத் தப்படுகின்றன. தன்னிடம் இருப்பதைக் கொண்டு திருப்திப்படாத மனநிலையை ஸ்மார்ட்போன்கள் தந்து கொண்டே இருக்கின்றன. "ஒண்ணை விட இன்னொன்னு பெட்டரா இருக்கு" எனும் ஒப்பீடு சிந்தனையை ஆழமாய் நடுகின்றன ஸ்மார்ட் போன்கள்.

## ஸ்மார்ட் போன்களும், ஸ்மார்ட் பெண்களும்



ஸ்மார்ட் போன்களும், ஸ்மார்ட் பெண்களும் வடிவத்திலும், வசீகரத்திலும் ஒன்றாக இருக்கலாம். ஆனால் உள்ளாடும் நேசத்திலும், உயிரோடும் பாசத்திலும் பெண்மையை எதனோடும் ஒப்பிடுதல் அநியாயம். மண்ணை மலரச் செய்வதும், மனிதனை வளரச் செய்வதும், இறையை உணரச் செய்வதும் என பெண்மையின் பரிமாணங்களை அசைபோடுகையில் ஸ்மார்ட் போன்கள் கண்களை மூடி ஓரமாய் கிடக்கின்றன. வெறும் டிஜிடல் கருவிகளாய்.






# „கட்டுக்கதை“






**றஜினா தருமராஜா**

நண்பர்களே, கட்டுக்கதை என்றால் என்ன? கற்பனைகள் கலந்த கதைகளா அல்லது உண்மையை மறைப்பதற்காகக் கூறும் கதைகளா? இரண்டு கூற்றுகளும் கட்டுக்கதைகளுக்கு பொருந்துகின்றன.
கதைகள் என்றாலே கற்பனைகள் கலந்தால் மட்டுமே நன்றாக இருக்கும். கேட்பவர்கள் ரசிக்கும் அளவிற்கு கதைகள் இருக்க வேண்டும் அல்லவா! கற்பனை வளம் நிறைந்தவர்களாகச் சிலர் இருக்கின்றனர்.

சும்மா ஒரு விடயத்தை பெரிதுபடுத்தி, ஒன்றுமில்லாத ஒன்றுக்கு,கண் முக்கு வாய் வைத்து,கதைப்பது,கட்டுக்கதை. ஒன்றைத் தலை கீழாகக்கதைப்பது என்றும் சொல்லலாம். ஆம்,
பெண் ஒருத்தியை இரசித்துக் கதைக்கும் பொழுது அவளின் கண்கள் மூக்கு மற்றும் வாயை வர்ணித்தால் தான் அவளின் அழகை இரசிக்கமுடியும்.

இதேபோலவே கட்டுக்கதையின் இரசனைகள்.


கற்பனைக் கதைகள் யார் மனதையும் புண்படுத்தாதவை ஆனால் கட்டுக்கதைள் புண்படுத்துபவை. கண்ணால் காண்பதும் பொய் காதால் கேட்பதும் பொய் தீர விசாரிப்பதே மெய். விசாரிக்காமல் பொழுதுபோக்குக்காக சிலர் பேசுவார்கள். ஒன்று கூடியும் உரையாடுவார்கள். பொய்யான விடயத்தை உண்மையாக்குவதற்குக் கூட உழைப்பார்களாம் சிலர். இக்கதைகள் மனங்களைப் புண்ணாக்கி விடுகின்றன. மற்றவர்கள் மனம் புண்படாது நடந்து கொள்வதே நன்று.

தொலைபேசியில் மணிக்கணக்காக உரையாடுவார்கள். போக்குவரத்துக்குப் பணம் செலவு செய்து வீடு சென்றும் உரையாடுவார்களாம்.

கட்டுக் கதை எடுத்துக்காட்டுகள் சில: ஒரு குடும்பத்தலைவன் வேர்வை சிந்தி கடுமையாக உழைக்கச் செல்கிறார். அவர் சம்பாதித்தப் பணத்தில் வீடு கட்டுகிறார். ஊர் என்ன சொல்லும்? இவருக்கு எங்கிருந்து இவ்வளவ பணம் என்று கேட்கும். கட்டுக் கதையை உருவாக்கும் நேரம் வந்துவிடும். அவர்களுக்கும் இக் கட்டுக்கதையினால் நேரம் போனதாகிவிடும். அதாவது பொழுதுபோக்கு.
இந்தக் கட்டுக்கதைகள் பற்றி சிலரைக் கேட்டு அறிந்தவை என்னவென்றால் இளம் சந்ததியினரைப் பற்றிக் கட்டுக் கதைகள் உருவாகி வருகின்றனவாம்.
ஓர் ஆணும் பெண்ணும் வெளியில் நின்று உரையாடக் கூடாது. ஆம், உடனே இவர்கள் காதலர்கள் என்பர்.
பல்கலைக்கழகத்துக்குச் செல்லும் பெண் தன் நண்பன் ஒருவனுடன் நூலகத்துக்குச் சென்று கல்வி கற்பதற்காகச் சந்திக்கின்றனர். இவர்களைக் காண்பவர்கள் இவர்கள் நூலகத்துக்குச் செல்லும் முன்னரே கட்டுக் கதைகளை உருவாக்கிவிடுவர்.
வேலைக்குச் செல்லும் பிள்ளைகள் வேலை முடிந்து இரவில் வீடு செல்கிறார்கள் என்றால் அதற்கும் ஆயிரம் கதைகள். வேலை இல்லை பொய் என்பர்.
இந்தக் கட்டுக்கதைகள் இன்று தோன்றியவை அல்ல. நம்நாட்டிலேயே அன்றும் இருந்துள்ளது. ஆனால் என்ன அப்போது இன்றுபோல் வேகமாக கட்டுக்கதை பரவ வட்சப்வசதிகளோ! வைபர் வசதிகளும் வெறும் சைபர்தான். அதனால் பொட்டுக்காலும், போகும் இடங்களிலும், இரவிரவாக அக்கம் பக்கத்து வீட்டுத் திண்ணைகளிலும் இந்தக் கட்டுக்கதைகள் பிரசவத்துக்கொண்டுதான் அன்று இருந்தன.
கட்டுக் கதையினால் பாதிக்கப் பட்டவர்கள் அதிகம். ஆம் மன அழுத்தத்துக்கு உள்ளாகி துன்பப் படுகின்றனர். ஆகவே தயவு செய்து மற்றவர்களின் மனதைப் புண்படுத்தாது வாழப் பழகிக் கொள்ள வேண்டும். ஏனெனில் நாம்செய்யும் காரியங்கள் எங்களுக்கே திரும்பி வந்துவிடும். நன்மை செய்வோம்! நல்லதைப் பேசுவோம்! நன்மைபெறுவோம்.





# சிலப்பதிகாரத்தில் ஏறுதழுவுதல் ஏழு காளைகளும் ! ஏழு கன்னியரும் !

**தனசேகர் பிரபாகரன்**



தமிழ் வரலாற்றில் குடிமக்கள் காப்பியம் என்றும் புரட்சிக் காப்பியம் என்றும் கொண்டாடப்படுவது "நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரமே !", சிலம்பு மட்டும் இல்லையெனில் தமிழர் வரலாற்றில் ஒருமிகப்பெரிய வெற்றிடம் உருவாகியிருக்கும் என்பது திண்ணம். மூன்று நாட்டிற்கு முறையே மூன்று காண்டங்கள் வைத்து மூவேந்தர்களை சமமாய் புகழ்ந்து முத்தமிழ் காப்பியமாய் விளங்கும் இளங்கோ தந்த செல்வம் இந்த சிலம்பு.

தமிழரின் கலைக்களஞ்சியமாய் விளங்கும்சிலம்பு "ஏறு தழுவுதலை" பற்றி விரிவாய் உரைக்கிறது. மதுரைக் காண்டத்தின் ஆய்ச்சியர் குரவையில் வரும் மிக அழகான பகுதி !
கண்ணகியை ஆயர் குல மாதிரியின் வீட்டில் விட்டுவிட்டு சிலம்பை விற்க கோவலன் சென்று விடுகிறான், இடைப்பட்ட காலத்தில் ஆயர் குடியிருப்பில் தீ நிமித்தங்கள் தோன்ற குரவை ஆடி கோபாலனை ஏத்த முடிவெடுக்கின்றனர்.

கறவைகள் கன்றுகளின் துயர் நீங்க முன்பு ஆயர் பாடியில் கண்ணன் ஆடிய சரிதத்தை ஆடுவோம் என்று மாதரி தன் மகளிடம் கூறுகிறாள். அதற்கு 7 பெண்களை அழைக்கிறாள் அவர்களின் சிறப்பையும் குறிக்கிறாள். இந்த ஏழு பெண்களும் தமக்கென ஒரு காளையினை வளர்த்து வருபவர்கள், வலிமையான இந்த காளைகளைஅடக்குபவர்களுக்கே வாழ்க்கைப் படுவோம் என உறுதி பூண்டவர்கள், காளையின் கொம்பிற்கு அஞ்சுவானை மறுபிறப்பிலும்ஆயர் பெண் விரும்பி ஏற்க மாட்டாள் என்னும் கலித்தொகை தரும் செய்தி இங்கு நோக்கதக்கது.

"ஆயர் பாடியில், எரு மன்றத்து,
மாயவனுடன் தம்முன் ஆடிய
வால சரிதை நாடகங்களில்,
வேல் நெடுங் கண் பிஞ்ஞையோடு ஆடிய
குரவை ஆடுதும் யாம்' என்றாள்"

முதல் பெண்:
காரி கதனஞ்சான் பாய்ந்தானைக்காமுறுமிவ்
வேரி மலர்க்கோதை யாள் சுட்டு
முதல் பெண் கருமையான காளையை வளர்த்து வருகிறாள், இதன் சீற்றத்தை அடக்குபவர்களுக்கே தேன் நிறைந்த மலர்மாலையை சூடிய முதல் பெண் ஆட்படுவாள்.

இரண்டாம் பெண்:
நெற்றிச் செகிலை யடர்த்தாற் குரியவிப்
பொற்றொடி மாதராள் தோள்
நெற்றியில் சிவந்த சுட்டியை உடைய காளையை கொண்டவள் இரண்டாம் பெண், இதனை அடக்குபவர்களுக்கே பொன் வளைஅணிந்த இவளது தோள்கள்.

மூன்றாம் பெண்:
மல்லல் மழவிடை யூர்ந்தாற் குரியளிம
முல்லையம் பூங்குழல் தான்
முல்லை மலரை சூடிய இந்த பெண் வலிமை மிக்க எருதினை வளர்த்து வருகிறாள் இதனைஅடக்குபவனையே இவள் மணம் புரிவாள்.


நான்காம் பெண்:
நுண்பொறி வெள்ளை யடர்த்தாற்கேயாகுமிப்
பெண்கொடி மாதர்தன் தோள்
நுண்ணிய புள்ளிகளை உடைய வெள்ளை எருதினை கொடி போன்ற நான்காவது பெண் வளர்த்து வருகிறாள், இவளது தோள்கள் இக்காளையினை அடக்குபவர்களுக்கே உரியன.

ஐந்தாவது பெண்:
பொற்பொறி வெள்ளை யடர்த்தாற்கேயாகுமிந்
நற்கொடி மென்முலை தான்
அழகிய இம் மறை ஏற்றினை அடக்கியோனுக்கே இவ்வழகிய கொடிபோன்றாளுடைய மெல்லிய முலைகள் உரியன வாகும்.

ஆறாவது பெண்:
வென்றி மழவிடை யூர்ந்தாற் குரியளிக
கொன்றையம் பூங்குழ லாள்
சீரிய வெற்றி தரும் காளையை ஆறாவது பெண் வளர்க்கிறாள், இதனைஅடக்குபவர்களுக்கே கொன்றை போல் கூந்தல் உடைய இப்பெண் சொந்தம்.

ஏழாவது பெண்:
தூநிற வெள்ளை அடர்த்தாற் குரியளிப
பூவைப் புதுமல ராள்

தூய வெள்ளை நிற முடைய இவ் வேற்றின் சீற்றத்தினைக் கெடுத்தவனுக்கு இக் காயாம் பூப்போலும் நிறத்தினையுடையாள் மனைவி ஆவாள்.
இவ்வாறு இந்த ஏழு பெண்களையும் அவர்கள் வளர்த்துவரும் காளைகள் குறித்தும் மாதரி தன் மகள் ஐயைக்கு கூறுகிறாள்.
கண்ணன் ஏழு காளைகளை அடக்கி தன் முறைப்பெண்ணான நப்பின்னையை மணந்தான் என்று தொன்மம் கூறுகிறது, ஆயர்குலத்தவனான கண்ணன் அவர்தம் வீரவிளையாட்டும் ஏறு தழுவதலையும் விளையாடினான் என்று இலக்கியங்கள் கூறுவது பொருத்தமே. கறவைகள் திரள் காத்த கார்வண்ணன் என்றும், குன்றம் ஏந்தி ஆநிரை காத்தவன் என்றும், புகழப்பெறும் கண்ணனை விடவும், உயிர்கட்கு தீங்கு செய்தல் பாவம் என்றுரைக்கும் சமணக் கொள்கைகள் கொண்ட இளங்கோவை விடவும் யாரும் ஏறுதழுவுதட்கு சான்று பகர முடியாது. "ஏறு தழுவுதல்" ஒரு வீர விளையாட்டே அன்றி உயிர்களை துன்புறுத்தி விளையாடும் செயலன்று என்பது தெளிவோம் !

யோ்மனி
வாணி நர்த்தனாலய அதிபர்
கலாநிதி வானதி தேசிங்குராஜா
அவர்கள் எழுதிய
Bharatham from my Perspective
என்னும் ஆங்கில நூலினை
முத்திரை அனுப்பி இலவசமாகப்
பெற்றுக் கொள்ளலாம்.
தொடர்புகளுக்கு:
0049 176 38 97 83 61






பைபிளில் திருப்பாடல்கள் எனும் ஒரு நூல் உண்டு. அதில் தாவீது மன்னன் எழுதிய ஒரு திருப்பாடலின் சில வரிகள் இவை.

வேற்றிடங்களில் வாழும்
ஆயிரம் நாள்களினும்
உம் கோவில் முற்றங்களில் தங்கும்
ஒருநாளே மேலானது

பொல்லாரின் கூடாரங்களில்
குடியிருப்பதினும்,
என் கடவுளது இல்லத்தின்
வாயிற்காவலனாய் இருப்பதே
இனிமையானது.

( திருப்பாடல்கள் 84:10 )

ஆயிரம் நாட்கள் வேறு இடங்களில் வாழ்வதை விட இறைவனுடைய ஆலயத்தின் முற்றங்களில் ஒரு நாள் வாழ்வதே சிறந்தது என்கிறார் அவர்.

எது நமது வாழ்க்கையில் முதன்மையானதாய் இருக்கிறது என்பதைக் கொண்டு நமது வாழ்க்கை எப்படி அமைகிறது, யாருக்குப் பிரியமானதாய் அமைகிறது என்பதைக் கண்டுகொள்ளலாம்.

எத்தனை நாட்கள் வாழ்ந்தோம் என்பதல்ல, எப்படி வாழ்ந்தோம் என்பதே கவனிக்க வேண்டியது.

இறைவனுடைய ஆலயத்தின் உள்ளே இருப்பதல்ல, அவரது ஆலயத்தின் முற்றங்களில் இருப்பதே கூட மகிழ்ச்சியானதாய் இருக்கிறது இறைவனை உளமாரத் தேடுபவர்களுக்கு.

பைபிள் மனித உடலை இறைவன் குடிகொள்ளும் ஆலயமாய் சித்தரிக்கிறது. இறைவன் குடிகொண்டிருக்கும் ஆலயத்தை புனிதமாய்க் காத்துக் கொள்ள வேண்டிய கடமை நமக்கு உண்டு. உள்ளம் புனிதமாய் இருக்கும் போது தான், உள்ளத்திலிருந்து வெளிவருகின்ற சிந்தனைகளும், செயல்களும் புனிதமாய் இருக்கும்.
மூன்று ஆண்டுகள் வெளியிடத்தில் வாழவேண்டுமா ? ஒரு நாள் இறைவனின் வாயில்களில் வாழவேண்டுமா என்று கேட்டால் என்ன சொல்வோம் ? மூன்றாண்டு வேண்டுமெனக் கேட்போம் என்றே உள்மனது சொல்கிறது. ஏனெனில் நமது சிந்தனைகள் எண்ணிக்கையின் அடிப்படையில் தான் கட்டமைக்கப்படுகிறது.

எவ்வளவு பணம், எத்தனை வீடுகள், எத்தனை கார், எவ்வளவு சொத்து என்பது தான் இங்கே அளவீடுகள். அதிகமாய் இருக்க வேண்டும் எனும் அவஸ்தையும் தேடலுமே வாழ்க்கையை அலைக்கழிக்கின்றன.

நிம்மதியான வாழ்க்கை வாழ்வதற்கு பணம் தேவையென நிம்மதியில்லாமல் அலைந்து கொண்டிருக்கிறோம். நிம்மதி தருபவரை உதறிவிட்டு, நிம்மதியை வேறெங்கோ தேடிக்கொண்டிருக்கிறோம்.

இங்கே தாவீது மன்னன், கோயிலின் வாயில்காவலனாக தனிமையில் இருப்பதே போதும் என்கிறார். நமது வாழ்க்கையில் நமது தேடல்கள் நண்பர்களின் கூடாரத்தில் குடியிருப்பதாகவே இருக்கிறது. கேளிக்கைக் கொண்டாட்டங்களில் இணைந்திருக்கவே மனம் விரும்புகிறது.

எது எனது வாழ்க்கையில் முக்கியமானதாய் இருக்கிறது ? எனது தேடல் இறைவனின் அருகாமையா, உலகத்தின் வசீகரமா ?
எனது தேடல் உயிர்வாழ்தலின் ஆசையா ? இறையோடு வாழ்தலின் ஆசையா ?
எனது விருப்பம் பொல்லாரின் உறைவிடங்களில் கிடைக்கும் உல்லாச நிமிடங்களா ? அல்லது ஆலய வாயிலில் இருக்கும் தூங்கா நிமிடங்களா ?

எனது வாழ்க்கை மனிதநேயத்தைச் சார்ந்திருக்கிறதா இல்லை சிற்றின்பக் கொண்டாட்டங்களில் சிக்கிக் கிடக்கிறதா ? வறுமையின் வாசலில் படுத்திருக்கும் ஏழையோடு என்னை அடையாளப்படுத்துகிறேனா ? அல்லது அந்த ஏழையைக் கண்டு சற்றும் மனம் இரங்காத செல்வந்தனோடு என்னை அடையாளப்படுத்துகிறேனா ?

எது எனது வாழ்க்கையின் முதலிடம் பிடிக்கிறது ? சிந்திப்போம். வாழ்க்கையின் முதன்மைகளை இறைவனை மையமாய்க் கொண்டு மாற்றியமைப்போம்.

ஸ்ரீ துர்க்கா கணபதி
ஜோதிட நிலையம்
உலகப் புகழ்பெற்ற ஜோதிட நிபுணர்
பண்டித்
கோவிந்த ராஜு
(UNITED KINGDOM)
புகழ்பெற்ற ஜோதிட நிபுணர் கைரேகை, முக இலக்கணம், புகைப்படம், இராசிபலன், எண்கணித சாஸ்திரம், வானியல் பஞ்சாங்கம், 100 வருட ஷதப்தி பஞ்சாங்கம், அதிர்ஷ்ட கற்கள், வாஸ்து சாஸ்திரம் ஆகியவற்றை கொண்டு நடந்தவை நடக்கின்றவை நடக்கப்போகின்றவை பற்றி துல்லியமாக கணித்து கூறுவார்.
100% உத்தரவாதம்
✓ தொழில் ✓ வசியம் செய்தல் ✓ வழக்கு மன்ற விவகாரம்
✓ கல்வி ✓ வாஸ்து சாஸ்திரம் ✓ கண்திருஷ்டி கழித்தல்
✓ வியாபாரம் ✓ காதல் விவகாரம் ✓ லக்ஷ்மி வசீகரம்
✓ திருமணம் ✓ குழந்தை பாக்கியம் ✓ தாம்பத்தியக் கோளாறு
✓ உடல்நலம் ✓ நாம நட்சத்திரம் ✓ கணவன் மனைவி ஒற்றுமையின்மை
போன்ற எல்லா காரியங்களுக்கும் பரிகாரங்கள் நல்லபடியாக செய்து தரப்படும்.பில்லி, சூனியம், கெட்ட சக்தி, மந்திர பிரச்சனைகளுக்கு நிரந்தர தீர்வு கிடைக்கும்.
+447405666293
+447897427492
329/326 BATH ROAD,
HOUNSLOW WEST,
POST CODE: TW4 7HW,
LONDON
10:00 A.M
8:00 PM
UK
UK
UK

Nabil
PARTY FOODS
& CATERINGS
நீங்கள் ஒரு முக்கிய நிகழ்வை
சிறப்பாகக் கொண்டாடப் போகின்றீர்களா ?
உங்கள் விருப்பம்
எங்கள் சேவை
உதாரணமாக பிறந்தநாள் விழா, திருமணவிழா, பூப்புனித நீராட்டு விழா போன்றவைகளை ? அப்படியானால் நாங்கள் உங்கள் விருப்பங்கள் மற்றும் எண்ணங்களுக்கு அமைவாக இலங்கை மற்றும் இந்திய உணவு வகைகள் அந்த நாட்டு முறைப்படி தயாரித்து வழங்குகிறோம்.
MENU
•Vegetable Biriyani, •Beef Biriyani, •Chicken Biriyani, •Many Different rice dishes, •Vegetable, Chicken, Mutton & Beef Kottu Rotty, •Varieties of Noodles,• Special Fish Dishes and Rosted Fish, •Short Eats ( Rolls, Samosa, Pattis & Many More), •Cake (Birthday & Other Celebrations)
Mr. M. Nazeer
015770773416
0245172578
nabilpartyservice@gmail.com
Nabil Party Foods

07ம் பக்கத் தொடர்ச்சி

# வலி தரும் மகாவலி




மணலாறு பிரதேசத்தை சுற்றி சுமார் 3,000 மில்லியன் ரூபாய்கள் செலவில் அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகிறது. இந்த அபிவிருத்தி திட்டங்களிற்காக மகாவலி அபிவிருத்தி சபையின் கீழ்வரும் மகாவலி டு வலய பிரதேசம் சுமார் 163,000 ஹெக்டேயரிலிருந்து 192,000 ஹெக்டேயராக விஸ்தரிக்கப்படுகிறது.
யுத்தகாலத்தில் மணலாறில் இருந்து இடம்பெயர்ந்த தமிழர்களின் நிலங்களில் சிங்களவர்கள் குடியேறியிருப்பது ஒரு புறம், புதிதாக மகாவலி அதிகார சபையின் எல்லை, வெலிஓயா னுளு பிரிவைத் தாண்டி, முல்லைத்தீவு மாவட்டத்தில் தமிழர்கள் வாழும் பிரதேசங்களுக்குள் மூக்கை நீட்டியிருப்பது மறுபுறம் என்று இரு பாரிய அச்சுறுத்தல்களை எதிர்கொண்டே இந்த வாரம் முல்லைத்தீவில் தமிழர்களால் ஆர்ப்பாட்டம் ஒன்று நடாத்தப்பட்டிருக்கிறது.

"எங்கள் நிலம் எங்களுக்கு வேண்டும்" என்றும் "விழித்தெழு தமிழா, எதிர்த்திடு மகாவலியை" என்றும் கோஷங்கள் எழுப்பிக்கொண்டு ஆயிரக் கணக்கான தமிழ்மக்கள் முல்லைத்தீவில் அணிதிரண்டு தமது எதிர்ப்பை பதிவு செய்திருக்கிறார்கள்.
போராட்டம் அழைக்கப்பட்டமைக்கான காரணத்தை தமிழ் சிவில் சமூக அமையம் வெளியிட்ட அறிக்கை பின்வருமாறு விபரிக்கின்றது.
"கடந்த ஜனவரி பெப்ரவரி 2017ல் கொக்கிளாய், கருநாட்டுக்கேணி கரையோரப் பகுதியில் அரச காணியில் அடாத்தாக குடியேறியிருந்தனர் எனக்கூறி இரண்டு சிங்கள மீனவர்களிற்கு எதிராக கரைத்துறைப்பற்று பிரதேச செயலகத்தினால் அரச காணி (ஆட்சி மீளப்பெறுதல்) சட்டத்தின் கீழ் வழக்கு தொடரப்பட்டது.
வழக்கை விசாரித்த முல்லைத்தீவு நீதிமான் நீதிமன்றம் மேற்படி இரு சிங்கள மீனவர்களையும் காணிகளை விட்டு வெளியேறுமாறு ஜனவரி 2018ல் கட்டளை வழங்கியது.
அதன் பின்னர், காணிகளில் அடாத்தாக குடியிருந்த இருவரும் உயர்நீதிமன்றத்தில் அடிப்படை மனித உரிமை மீறல் வழக்கொன்றை தாக்கல் செய்தனர். பெப்ரவரி 2018ல் வழக்கை எடுத்துக் கொள்ள (leave to proceed) மறுத்து உயர் நீதிமன்றம் கட்டளையிட்டது.
இது இவ்வாறிருக்க 6.8.2018 அன்று மகாவலி அபிவிருத்தி சபை மேற்படி இரண்டு சிங்கள மீனவர்களிற்கும் காணி அனுமதி பத்திரத்தை வழங்கி அவர்களின் சட்டபூர்வமற்ற காணி அபகரிப்பை சட்டபூர்வமாக்கியுள்ளது.
மேற்படி நடவடிக்கையானது மத்திய அரசாங்கத்தின் சட்டமான அரச காணி (ஆட்சி மீளப்பெறுதல்) சட்டத்தின் கீழ் உரிய தமிழ் அரச அதிகாரிகளால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளையும் நீதிமன்ற தீர்ப்புக்களையும் கேலிக்குரியதாக்கியுள்ளது.
சட்டத்தின் ஆட்சி தமக்கு ஒருபோதும் நிலையான தீர்வுகளைத் தரமாட்டாது என்ற புரிதலை இந்தச் சம்பவங்கள் மீள ஞாபகப்படுத்துகின்றன."
தமிழர் தாயகத்தை துண்டாடும் முயற்சிகளை தடுக்க தமிழ் மக்கள் அணிதிரள்வது அவசியமானது. இராணுவத்தினர் வசமிருக்கும் வளமான விவசாய நிலங்களும், குடிமனைகளும் முழுமையாக விடுவிக்கப்பட போராடுவதும் அவசியமானது.
மறுவளமாக தாயகத்தில் எமது இருப்பை, எமது வசமிருக்கும் நிலங்களை, எமக்கிருக்கும் வளங்களைக் கொண்டும் நம்மத்தியில் இருக்கும் நிபுணர்களைக் கொண்டும் முழுமையாக பயன்படுத்தி வளப்படுத்தி எமது பிரதேசங்களையும் எமது மக்களையும் மேம்படுத்த நாங்கள் என்ன திட்டங்கள் வைத்திருக்கிறோம்?
அபிவிருத்தி என்ற போர்வையில் சிங்களவர்கள் எமது பிரதேசங்களில் குடியேறும் பிரச்சினையை தடுக்க, அதே பிரதேசங்களில் எமது மக்களை குடியேற்ற முடியுமா? அதற்கு எங்களது மக்கள் முன்வருவார்களானால் எமது பிரதேசங்களை நோக்கி வரும் அபிவிருத்தி செயற்பாடுகளை எமக்கு நன்மை பயக்கத்தக்கதாக மாற்ற முடியுமல்லவா?
நெடுங்கேணியை அண்டிய பிரதேசங்களில் மீண்டும் பாரிய விவசாய பண்ணைகளை திறந்து நடாத்த முனையும் தமிழ் முதலீட்டாளர்கள், அந்த பண்ணைகளில் வேலை செய்ய தமிழ் தொழிலார்களை தேடுவது கடினமாக இருக்கிறது என்று முறையிடுவதில் உண்மை இருக்கிறதா?

கடந்தாண்டு அரசியல் தீர்வுக்கு யோசனைகள் வரைந்து சமர்ப்பித்த வடக்கு மாகாண சபை, கடந்த நான்காண்டுகளில் எமது பிரதேச வளர்ச்சிக்கான அபிவிருத்தித் திட்டங்கள் ஏதாவது வரைந்ததா? இல்லை சொல்லிக் கொள்ளும்படியாக ஏதாவது முயற்சிகளைத் தான் முன்னெடுத்ததா?

ஈராண்டுகளிற்கு முன்னர் கனடாவில் நடந்த வட மாகாண அபிவிருத்தி தொடர்பான மாநாட்டில், வடக்கு மாகாண முதலமைச்சர், அமைச்சர்கள், அரச அதிகாரிகளின் பங்களிப்போடு புலம்பெயர் வாழ் நிபுணர்களின் வழிகாட்டலில் உருவாக்கிய, அபிவிருத்தி திட்டங்கள் என்னவாகின?

கடந்தாண்டு ஆசிய அபிவிருத்தி வங்கி செயற்படுத்த முன்வந்த, யாழ்ப்பாண கிளிநொச்சி மாவட்டங்களின் தண்ணீர் தேவைகளை பூர்த்தி செய்யவும் மலக்கழிவுகளை முறையாக அகற்றுவதற்குமான 130 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான யாழ்ப்பாண ஆறு திட்டம் இன்னமும் வட மாகாண சபையின் பரிசீலனையில் தான் இருக்கிறதா இல்லை அதனை மத்திய அரசு முடக்கி விட்டதா?
சிங்கப்பூரின் அபிவிருத்திக்கு பாரிய பங்காற்றிய அந்நாட்டின் நீண்ட கால வெளிநாட்டு அமைச்சரும் (1965-80), பிரதி பிரதம மந்திரியுமான (1980-85), சின்னத்தம்பி ராஜரத்தினம் பிறந்த சங்கானை வீட்டை பார்க்கவும், சிங்கப்பூரின் வளர்ச்சிக்கு யாழ்ப்பாணத் தமிழர்கள் ஆற்றிய பங்களிப்புக்கு நன்றி செலுத்தவும் யாழ் வந்த சிங்கப்பூர் வெளிவிவகார அமைச்சரிடம், ஒரு மறுவாழ்வு நிலையத்தை (சுநாயடிடைவையவழைெ உநவெசந) அமைக்க உதவ யாழ் வைத்தியசாலை மருத்துவர்களால் முடியுமென்றால், எங்களது பிரதேச அபிவிருத்திக்கு சிங்கப்பூரை பங்காளியாக்க எங்களது மாகாண சபையும் பாராளுமன்ற உறுப்பினர்களும் என்ன முயற்சியெடுத்தார்கள்?

தனிநாட்டுக் கனவை நெஞ்சில் சுமந்து கொண்டு, நாடு விடுதலை அடைந்ததும் எங்கே அதிவேகப் பாதை போட வேண்டும், எப்படி வடக்கையும் கிழக்கையும் இணைக்க ரயில் தடம் பதிக்க வேண்டும், விவசாயம், கைத்தொழில், மீன்வளம் எப்படி அபிவிருத்தி செய்யப்படும் என்று மாவட்டம் மாவட்டமாக திட்டங்களை வரைந்து கொண்டு விடுதலைப் போரை முன்னெடுத்த நம்மினமா இன்று திட்டங்கள் எதுவுமின்றி அந்தரிப்பது?
எங்களது இருப்பை பாதுகாக்க நாங்கள் போராடத் தான் வேண்டும். அதேவேளை போராடி போராடியே அழிந்த சந்ததி என்ற வரலாற்று அவப்பெயரையும் நாங்கள் சுமந்தவர்களாகி விடலாகாது. முப்பது வருட கொடிய யுத்தத்தால் அழிவைச் சந்தித்தவர்கள் நாங்கள், எங்களை நாங்களே மீளெழ வைக்க நாங்கள் தான் முயற்சிக்க வேண்டும்.
இடம்பெயர்ந்தோரும் புலம்பெயர்ந்தோரும் மீண்டும் தாயகம் திரும்பி எமது பிரதேசங்களில் நாங்கள் வாழ நாங்கள் வழிசெய்யலாம். அரசியல் தீர்வு வரும் வரை அபிவிருத்தியை பின்போடலாம் என்பது "ஐயர் வரும் வரை அமாவாசை காத்திருக்காது" என்பது போல நீண்ட கால நோக்கில் பாரிய பின்னடைவையே எமக்கு ஏற்படுத்தும்.
7 habits of Highly Effective People என்ற மிகச்சிறந்த புத்தகத்தை எழுதிய Stephen Cover சொல்லிய Circle of Influencey நாங்கள் கவனம் செலுத்தினால், எங்கள் பாடசாலைகள் நன்றாக இயங்கும், பல்கலைக்கழகம் புத்துயிர் பெறும், மாநகர சபையும் மாகாண சபையும் வினைத்திறனுடன் செயற்படும், முதலீட்டாளர்கள் வருவார்கள், நல்ல நல்ல தொழில் முயற்சிகள் உருவாகும், வியாபாரமும் வர்த்தகமும் பெருகும், மக்கள் மீண்டும் தங்களது சொந்த இடங்களிற்கு திரும்புவார்கள், அந்நியர்கள் எங்களது மண்ணில் குடியேறுவதற்கான வாய்ப்புக்களை நாங்களே அடைத்துக் கொள்ளலாம்.

"பத்துப் பன்னிரண்டு தென்னைமரம் பக்கதிலே வேணும்
நல்ல முத்துச் சுடர்போலே நிலாவொளி முன்பு வரவேணும்
அங்குக் கத்துங் குயிலோசை சற்றே வந்து காதிற் படவேணும்
என்றன் சித்தம் மகிழ்ந்திடவே நன்றாயிளந் தென்றல் வரவேணும்
காணி நிலம் வேண்டும் பராசக்தி, காணி நிலம் வேண்டும்"









Lyca TV
உலகின் மிகப் பிரமாண்டமான தொலைக்காட்சி நிலையம்
ஒருவருட இணைப்புச் சந்தா
£/€69
SET TOP BOX INCLUDED
புதுப்பித்தல்
£/€49
14 மாதங்கள்
50க்கும் அதிகமான தமிழ்த் தொலைக்காட்சிகள்
TENT KOTTA
1000க்கும் அதிகமான தமிழ்த் திரைப்படங்கள்
4K / HD / 5.1 DOLBY தரத்தில் திரைப்படங்கள்
SUN NXT
4000 + திரைப்படங்கள்
DOWNLOAD VIDEOS
Look for this symbol to Download TV episodes to watch on the go without using data
MOBILE & TABLET
App Store
Google Play
OFFLINE VIEWING FEATURES
நிகழ்ச்சிகளை DOWNLOAD செய்து, INTERNET இணைப்பின்றி உங்களுக்கு விரும்பிய நேரத்தில் பார்க்கும் வசதி
* Selected channels only
UNITED KINGDOM
0207 132 2727
GERMANY
069 1200 7102
FULL TERMS AND CONDITIONS ARE AVAILABLE AT WWW.LYCATV.TV. LYCATV IS A TRADEMARK AND SERVICE MARK BELONGING TO LYCAMEDIA LTD. ANY PRODUCT OR SERVICE OR TRADE NAME OTHER THAN THOSE OWNED BY LYCAMEDIA LTD, THAT IDENTIFY A THIRD PARTY AS THE SOURCE, THERE-OF MAY (EVEN IF NOT SO INDICATED) BE THE SERVICE OR TRADEMARK OF THAT RESPECTIVE ENTITY OR INDIVIDUAL. ANY UNAUTHORIZED USE OF THE LYCATV MARK IS STRICTLY PROHIBITED.
www.lycatv.tv




25 ம் ஆண்டில் தடம் பதிக்கும் வெற்றிமணிக்கு எங்கள் வாழ்த்துக்கள்

ச3 ம் பக்கத் தொடர்ச்சி

# காட்டுப்புலம்



சிறுவர்க்கு முதல் பந்தி பெரியவர்க்கு இரண்டாவது பந்தியென நான்கு, ஐந்து பந்திகள் இருத்தி கூட்டாஞ்சோறு பரிமாறப்பட்டது. அனைவரும் கூடி ஒன்றாய் உண்ட பொழுதில் கண்ட மகிழ்வுக்கு எல்லையில்லை. இறுதிப் பந்தியில் உணவுப்பரிமாற்றம் நடக்கும்போதே காளி கோவிலடி ஆலமரத்தின் கீழே மாலை நிகழ்வுக்கான ஏற்பாடுகள் ஆரவாரமாய் நடைபெற்றுக்கொண்டிருந்தன.

வல்லமையின் "சமத்துவம்" பாடலோடு மாலை நிகழ்வுகள் ஆல மரத்தடியில் மகிழ்வுடனே ஆரம்பமானது. அதனைத் தொடர்ந்து "ஆளுமைத்துளி" சிறுவர்களின் நாடகம் அரங்கேற்றப்பட்டு கலந்துரையாடலும் நடைபெற்றது. தொடர்ந்து செம்முகம் ஆற்றுகைக் குழுவினரின் "புதிய வாழ்வு" என்னும் தெருவெளி நாடகம் ஆற்றுகை செய்யப்பட்டது.

குடும்ப வன்முறை, இளவயதுத் திருமணம், பாடசாலை இடைவிலகல், மது பாவனை, லீசிங் பிரச்சினை போன்ற சமூப் பிரச்சினைகள் பலவற்றை இவ் ஆற்றுகையினூடாக மக்களுக்கு எடுத்துக்கூறப்பட்டது. தொடர்ந்து இப் பிரச்சினைகளைத் தீர்ப்பது தொடர்பாக மக்கள் தங்களுடைய கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டனர்.

எங்களுடைய நாடகங்கள் நிறைவடைந்த பின்னர் காட்டுப்புலத்தில் வாழும் சிறுவர்களின் இரு நாடகங்கள் ஆற்றுகை செய்யப்பட்டது. போதியளவு பயிற்சி இன்றிய போதும் அவர்களுடைய நடிப்பாற்றல் திறன் மற்றும் தங்களுடைய சமூகத்திலுள்ள பிரச்சினைகளை எடுத்துக்கூறிய விதம் அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியது. முன் வருதல், தயக்கமின்றி பிறருடன் கலந்துரையாடல், ஒற்றுமையுடன் செயற்படுதல், திறன்களை வெளிக்கொணர்வதற்கான களத்தினை சரியாகப் பயன்படுத்தலென சிறுவர்கள் தங்களுடைய பங்குபற்றுதலை மிகச் சிறப்பாக மேற் கொண்டனர். "தும்புத்தடி மிசின்" என்னும் நகைச்சுவை நாடகமும் அதனைத் தொடர்ந்து "போதையை ஒழிப்போம்" என்கின்ற சமூக நாடகத்தையும் ஆற்றுகை செய்தனர். நகைச்சுவையாகவும், கருத்தாழம் கொண்டதாகவும், உரைஞருக்கூடாக சம்பவங்களை எடுத்துக்கூறுவதாகவும், பொருத்தமான பாடல்களையும் சேர்த்தும் அனைவரது மனங்களையும் கொள்ளை கொண்டனர். நாடகத்தின் நிறைவில் "வாழுவோம் வாழுவோம் வாழுவோம் நலமாக நாமும் வாழுவோம்...." என்கின்ற இவர்களின் பாடலும் அதன் அர்த்தமும் அவர்களின் எதிர்பார்ப்பை எடுத்துரைத்தன.

அக்கிராமத்து மக்கள், இளைஞர்கள், சிறுவர்களென அனைவருக்கும் நன்றி கூறி நாமும் புறப்படத் தயாராகினோம் அப்போதே அன்றைய நிகழ்வுகளை ஒழுங்கமைத்த இளைஞர்கள் எங்களின் கரம்பற்றி கூறிய நன்றிகளும் நிகழ்வின் மன நிறைவும் சிறியளவிலேனும் மாற்றத்தை ஏற்படுத்துமென்ற நம்பிக்கையொளி பிறந்ததை உளமார உணர்த்தின. பேருந்து புறப்பட தயாராவதற்குள் ஓடி வந்த சிறுவர்களின் முகங்களில் புன்னகையும் புன்னகைக்குப் பின்னால் இவ்வாறு ஓர்நாள் மட்டுமா? நாங்கள் மகிழ்வாகவும் பாதுகாப்பாகவும் இருந்தோம் என்கின்ற ஏக்கமும் தொடர்ந்தும் இவர்களும், இவர்கள் போன்றவர்களும், இவ்வாறன நிகழ்வுகளும் நடக்குமா? என்ற கேள்வி அப் பிஞ்சுகளின் மனதில் இருந்துகொண்டே இருக்கும் என்பதை ஊகித்துக்கொண்டவாறே அவர்களுக்கு கையசைத்த வண்ணம் மீண்டும் பேருந்தின் பின்னிருக்கையிலிருந்து புறப்படத் தயாரானேன்.

இவ்வாறான பயணங்கள் காட்டுப்புலத்திற்கு மட்டுமல்ல கட்டவிழ்ந்து செல்கின்ற எங்களுடை அனைத்துக் கிராமங்களுக்கும் தேவைப்பாடுடை யதாகவே உள்ளதென்பது நம்மில் பலர் அறிந்திருக்க வாய்ப்பில்லை. அவ்வாறு அறிந்திருப்பினும் மக்களோடு மக்களாய் நின்று பணியாற்றத் தயாரில்லை. இவ்வாறான சமூக நலன் சார் செயற்பாடுகளின் தாற்பரியம் அன்றைய தினம் அங்கு பொழுதினைச் செலவழித்தவர்களுக்கு நன்கு புரிந்திருக்கும். எனவே இவ்வாறான பயணங்களுக்கு அவர்கள் தங்களுடைய உறவுகளையும், நண்பர்களையும் அணிதிரட்டிக் கொள்வதனூடாக இவ்வாறான பயணங்களை பலப்படுத்துவதோடு பன்முகப் படுத்தவும் முடியுமானதாக இருக்கும்.
மக்களோடு மக்களாய், சமூகத்தோடு சமூகமாய் ஒவ்வொரு மனிதனும் பயணிக்கத் தயாரெனில் புதிய பாதைகள் திறக்கப்படும். இன்னல்கள் இல்லாதொழிந்து நிம்மதியாய் வாழலாம் இணைந்து செல்ல கரம் கொடு தோழனே!

## இப்படியும் இளைஞர்களா?

**பேராசிரியர் சி.மௌனகுரு இந்த நிகழ்வு பற்றி முகம்மலர்ந்து முகப்புத்தகத்தில் பின்வருமாறு பதிவுசெய்துள்ளார்.**

இப்படியும் இளைஞர்களா? எத்தனை மகிழ்ச்சி.எங்கோ சென்று கொண்டிருக்கும் இன்றைய இளைஞர் மத்தியில் எதிர்த் திசையில் நம்பிக்கை யோடு பயணிக்கும் இவர்களைக்காண நம்பிக்கை பிறக்கிறது.சவால்களை எதிர்கொண்டு முன்செல்லும் ஒரு கூட்டம் வரலாற்றோட்டத்தில் எப்போதும் காணப்படுகிறது.வாழ்த்துக்கள் இளைஞர்களே (28-08-2018)
யாழ்ப்பாணம் சுழிபுரம் காட்டுப்புலம் ( 25.06.2018 ) மாலை சிறுமியின் சடலம் ஒன்று கிணற்றில் இருந்து மீட்கப்பட்டது. சுழிபுரம் காட்டுப்புலம் அ.த.க பாடசாலையில் தரம் ஒன்றில் கல்வி பயிலும் சிவநேஸ்வரன் றெஜினா (வயது 6 ) என்ற பாடசாலை மாணவியே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார்.இந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.இந்நிலையில் குறித்த மாணவி சிவநேஸ்வரன் றெஜினா பாலியல் துன்புறுத்தல்களுக்கு பின்னர் கழுத்து நெரித்து கொலை செய்யப்பட்டார் என பிரேத பரிசோதனை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தக் காட்டு புலம் நோக்கிய நமது இளைஞர்களின் இன்றைய பணி போற்றத்தக்கது.
.இதனை முழுமையாக வாசித்த அனைவருக்கும் நன்றி நின்றி நன்றி தாயகத்தில் இளைஞர்கள் இப்படியும் உள்ளனர் என்பது மகிழ்வான செய்தியல்லவா!









# காலமும் கோலமும்



நெடுந்தீவு முகிலன்.

நான் நடப்பதற்கே பாதைகள்
இல்லாமல் இருந்தது.

ஒருவரை பின் தொடரவும்
எனக்கு வழி தெரியாது போனது.

பாதணி வாங்கவும் என்னிடம் வசதியில்லை
என் கை பிடித்து நடக்கவும் யாருமில்லை...

நானாய் ஒரு திசை நோக்கி மெதுவாய்
தனியாய் நடக்க தொடங்கினேன்.

அந்த பாதையில் கற்களும் முட்களும்
நிறைந்தே கிடந்தது.

இரத்தம் வடிந்தது நகம் உடைந்தது.
திரும்பி வராமல் வலியோடே நடந்தேன்.

நாட்கள் நகர்ந்தது - நானும்
செருப்பு வாங்கி மாட்டினேன்.

ஆனால் நான் மீதி கடக்க இருக்கும்
பாதைகளோ பளிங்காய் இருக்கிறது.

அதை மிதிக்கும் வாய்ப்பை கூட
ஏனோ என் கால்கள் இழந்து விட்டது.

## சுவிஸ் நாட்டில் ஊடகவியலாளர் இரா.துரைரத்தினம் எழுதிய "செய்திகளின் மறுபக்கம்" நூல் அறிமுக விழா!



ஊடகவியலாளர் இரா.துரைரத்தினம் எழுதிய செய்திகளின் மறுபக்கம் என்ற நூல் அறிமுக விழா கடந்த மாததம் 08.09.2018 சனிக்கிழமை சுவிட்சர்லாந்து செம்மாக்கிறேத்தன் ஸ்ரீகதிர்வேலாயுதசுவாமி ஆலய மண்டபத்தில் நடைபெற்ற போது நூல் விமர்சன உரையாற்றிய முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் தற்போது சுவிட்சர்லாந்தில் வசித்து வருபவருமான அழகு குணசீலன் தெரிவித்தார்.

நாங்கள் ஏற்கனவே அறிந்த செய்திகளில் அவர் சொல்லாமல் விட்ட சம்பவங்களை அல்லது தன்னால் காலச்சூழல் கருதி சொல்ல முடியாமல் போன சம்பவங்களை இப்போது சொல்ல வேண்டும் என்ற மன உறுத்தலின் வெளிப்பாடாகவே செய்திகளின் மறுக்கம் என்ற இந்நூலை ஊடகவியலாளர் துரைரத்தினம் எழுதியிருக்கலாம் என அழகு. குணசீலன் தெரிவித்தார்.

வைத்தியகலாநிதி விவேகானந்தன் ஜெயரூபன் தலைமையில் நடைபெற்ற இந்நூல் அறிமுக கூட்டத்தில் நூல் அறிமுக உரையை மார்க்கண்டு ஜெயமோகன் நிகழ்த்தினார். விமர்சன உரையை ஊடகவியலாளர் சண். தவராசாவும் சிறப்புரைகளை சிறப்புரைகளை கலாநிதி கல்லாறு சதீஸ், ஐ.பி.சி தொலைக்காட்சியின் அரசியல் நிகழ்ச்சி தயாரிப்பாளர் பிறேம் சிவகுரு', எழுத்தாளர் கிருஷ்ணா அம்பலவாணர் ஆகியோர் நிகழ்த்தினர். ஏற்புரையை நூலாசிரியர் இரா.துரைரத்தினம் நிகழ்த்தினார்.

## யேர்மனி முல்கைம் முருகன் ஆலயத் தேர்த்திருவிழாவில் இருந்து சில காட்சிகள்(02.09.2018 ஞாயிற்றுக்கிழமை)











# நின்னைச் சரணடைந்தேன்



## வெள்ளை தாமரை பூவில் மட்டுமல்லாது வேறு எங்கெல்லாம் சரஸ்வதி தேவி வீற்று இருக்கிறாள்

எதற்குள்ளும் பொருந்த கூடியவரும், எதற்குள்ளும் அடக்க முடியாதவருமாக யோக நிலையில் வாழ்ந்து ,அந்நிலையை தன் தமிழில் செதுக்கி சென்ற சித்த புருஷனை நினைக்காத நம் தமிழர் விழாக்கள் இருக்க முடியாது. அந்த வகையில் இம்மாதத்தின் சிறப்பாய் அமையும் நவராத்திரி காலத்திற்கு உகந்த முத்தேவிகளையும் போற்றி பணிந்த அவர் தமிழை நினைக்காது இருக்கலாமோ ?
பள்ளி செல்லும் மாணவர்கள் கல்வி சிறக்க சரஸ்வதிக்கு விரதம் இருந்து , சகலகலா வல்லி மாலை பாடல் பத்தும் இசைத்து வழிபடுவது பல்லாண்டு வழக்கம். ஆனால் பொருள் உணராது எதை படித்தும் பயன் இருக்க வாய்ப்பில்லை. இலகு தமிழில் சரஸ்வதி தேவியின் புகழை பத்து பாடல்களில் நமக்காய் வடித்து கொடுத்திருக்கிறார் பாரதி.

இந்த பாடலின் அழகு என்னவென்றால் வெள்ளை தாமரை பூவில் மட்டுமல்லாது வேறு எங்கெல்லாம் சரஸ்வதி தேவி வீற்று இருக்கிறாள் என்று தன் கற்பனையை விரிக்கிறார்.
வீணை எழுப்புகின்ற நாதத்தில் கலந்திருக்கிறாள். மிகுந்த இனிமையும் இன்பமும் தரவல்ல பாடல்களை இயற்றுகின்ற கவிஞர்களின் இதயத்தில் கொலுவிருப்பாள்.மெய்ப்பொருளை ஆராய்ந்து தரும் வேதத்தின் உள் இருந்து பிரகாசிப்பாள். மனம் மாசு இல்லாதா முனிவர்கள் கூறுகின்ற அருள் வாசகங்களில் அர்த்தம் ஆவாள்.
இனிய குரல் கொண்ட பெண்களின் பாடல்களில் பொருந்தி இருப்பாள். குழந்தைகள் பேசுகின்ற மழலையில் இருப்பாள். பாடல் இசைக்கும் குயிலின் குரலிலும் , இனிய மொழி பேசும் கிளிகளின் நாவிலும் இருப்பாள். இவற்றை தவிர குற்றம் குறை இல்லாத ஓவியங்கள், கோபுரம், ஆலயங்களின் வேலைப்பாடுகளில் உள்ள அழகிலும் குடியிருப்பாள். மொத்தத்தில் இனிமையான எல்லாவற்றிலும் சரஸவதியின் இருப்பை உணர்கிறார் பாரதி.

கலைமகளின் புகழை மேலும் சொல்லுகையில், இதர தெய்வங்களையெல்லாம் நாம் அறிந்து கொள்ளும் படி செய்கின்ற கடவுள். அறிவு என்னும் அரிய விடயத்தை நமக்குள் தருவதால் , நமக்கு தீமை செய்வோரை நாம் உணரும் படி செய்து அவற்றிலிருந்து நம்மை தடுத்து நிறுத்தும் கடவுளும் ஆகிறாள்.
”உய்வம் என்ற கருத்துடையோர்கள்
உயிருனுக்குயிர் ஆகிய தெய்வம் □

மெய்ஞ்ஞான வழியில் உயர் நிலையை அடைய வேண்டும் என்று எண்ணம் கொண்ட உயிர்களுக்கு உயிராகி இருந்து வழி நடத்தும் தெய்வம். தெய்வங்களிற்கு எல்லாம் தெய்வம் என்று புகழ்ந்து பணிகிறார்.


உதட்டளவில் வேத மந்திரங்களை உச்சரித்து , ஒன்றன்மீது ஒன்றாய் புத்தகங்களை அடுக்கி வைத்து சந்தனம் தடவி பூக்கள் வீசி செய்யும் சாத்திரம் எல்லாம் சரஸ்வதி தேவியை வழிபடுக்கும் முறை அன்று.

ஒவ்வொரு வீட்டிலும் கல்வி அறிவையும், காலை அறிவையும் வளர்த்திட வேண்டும். ஒவ்வொரு வீதியிலும் இரண்டொரு பள்ளிக்கூடங்களை அமைக்க வேண்டும். அது மட்டும் இன்றி தேடி கல்வியை பயில எண்ணம் இல்லாத ஊர் இருப்பின் அவை இருந்தும் வீண் , தீக்கு இரையாக்குவோம் . இதுவே அமிர்தம் போன்ற அன்னை சரஸ்வதியின் அன்பினையும் அருளினையும் பெற வழி என்கிறார்.
இது அத்தனையும் தாண்டி ஒரு அர்த்தமுள்ள கருத்தை நம் ஆழ் மனதோடு பதித்து விட்டு செல்கிறார். எத்தனையோ மேலான அற செயல்களையும் தர்மங்களையும் செய்வதிலும் பார்க்க கோடி மடங்கு அதிக நற்பயன் தரக்கூடியது ஓர் ஏழை மாணவனுக்கு படிப்பு அறிவை புகட்டுவது. ஆதலால் பாரதியின் சிந்தனையை நம்மால் இயன்றளவு செயல்படுத்த விழைவதோடு மட்டும் அன்றி நம் அடுத்த சந்ததிக்கும் புகட்ட கூடிய சந்தர்ப்பமாக நவராத்ரி காலம் அமையும் என்ற நம்பிக்கையில் , வாசகர்கள் ஓவரொருவரும் ஒரு ஏழை குழந்தைக்காவது கல்வி பெறுவதற்கான சிறு உதவி செய்தாலும் எத்தனையோ சமுதாய மாற்றங்களை கொண்டு வரலாம் என்ற பேராவாவினால் பாரதி அடியேனும் அன்பு விண்ணப்பத்தை உங்கள் மனங்களில் ஏற்றி செல்கிறேன்.




யேர்மனியில் டோட்மூண்ட் நகரில் 23.09.2018 சிறப்பாக கொண்டாடிய
என் பிறந்த நாள் விழாவில் கலந்து வாழ்த்திய உங்கள்
அனைவருக்கும் என் நன்றி
அன்புடன்
உங்கள் செல்வக் குழந்தை டிஷானா சுதர்சன்




மிருதங்க அரங்கேற்றம்
செல்வன் டிலக்சன் தர்மசீலன்
ஹம் ஸ்ரீ காமாட்சி அம்பாள் அருளுடன்
மிருதங்க ஆசிரியர் திரு இராகுலன் இராமநாதன் அவர்களின் ஆசியுடனும்
செல்வன் டிலக்சன் தர்மசீலன்
அவர்களின் அரங்கேற்ற விழாவினை சிறப்பித்து வாழ்த்திட மதிப்புக்குரிய
குருமார்கள்,உறவினர்கள்,நணபர்கள் அனைவரையும்
அன்புடன் அழைக்கின்றோம்.
தங்கள் நல்வரவை அன்புடன் எதிர்பார்க்கும்
திருமதி தவேஸ்வரி.தர்மசீலன்
செல்வன் ஹிஷான் தர்மசீலன்
தொடர்புகளுக்கு: 0049 2501 985835- 0049 157 3911 4878–0049 157 5270 3612
காலம்:
20.10.2018 சனிக்கிழமை
நேரம்: மாலை.3:00 (15:00)
இடம்: Stadthalle Hiltrup
Westfalenstraße 197– 48165 Münster


# கனவு



## அது ஒருவர் பார்த்து அனுபவிக்கும் நாடகம்

" I Have A Dream" இக்கூற்றினைப் பற்றி அறியாதவர்கள் பலர் இருக்கமுடியாது. நீக்கிரோக்களின நல் வாழ்விற் காகக் குரல் கொடுத்து மடிந்த மார்ட்டின் லூதர் கிங் என்ற பெருமகன் 1963ஆம் ஆண்டு அமெரிக்காவில் வாசிங்ரன் நகரில் உள்ள லிங்கன் ஞாபகார்த்த சதுக கத்தில் ஆற்றிய பிரபலமான உரையின் ஆரம்ப வசனம்தான் இது. இங்கு அவர் கண்ட கனவு என்பது நனவாக வேண்டும் என்ற உள்ளத்தில் எழும் கற்பனை.

இதற்கு உறங்க வேண்டிய தேவை இல்லை.

"கனவு - நினைவு" இப்படி அற்புதப் பொருத்தமான இரு பதங்கள் வேறு எந்த மொழியிலாவது உள்ளதோ எனக்குத் தெரியவில்லை.

நான் சொல்ல வரும் கனவு தான் என்ன? உறங்கும் போது நடைபெறும் நிகழ்வு. அதற்கு ஒன்றோ டொன்று தொடர்புடைய நான்கு அர்த்தங்கள் உள்ளன.

1.கனவின் போது மிகச் சிறிய அளவிலே மூளை இயங்கச் செய்கிறது. வெளியே இருந்து ஏதாயினும் தூண்டல்கள் மூளையை வந்தடைவது தடுக்கப் படுகிறது."நான், எனது" என்ற "சுய தொகுதி" கனவின் போது இல்லாமல் போய்விடுகிறது.

2. கனவு என்பது நாம் அனுபவிப்பது. நிகழ்ச்சி நடக்கின்ற போது எமது புலன்களைச் சம்பந்தப் படுத்துவாகவும் அமைகிறது. நாமே கனவின் பிரதான நடிகராக அமைவதால் சில சமயங்களிலே அது மிக உணர்வு பூர்வமானதாகவும் அமைந்து விடுகிறது .

3. அதிகாலையில் நாம் எழுந்திருக்கும் போது இந்தக் கனவு எமக்கு நன்றாக நினைவில் உள்ளமையால் கனவு அனுபவத்தை நினை வாற்றலில் பதித்துள்ளோம்.

4. எமது கனவு அனுபவத்தை நாம் எழுத்து மூலமாகவோ அல்லது வாய் மொழியாகவோ இன்னொருவருக்குச் சொல்கின்றோம். ஆகவே கனவு எனும் நாடகத்தை நாம் ஒருவர் மாத்திரமே அனுபவிக்கிறோம். இன்னொருவர் காண்பதற்கோ கேட்பதற்கோ சந்தர்பம் கிடைப்பதில்லை இல்லை.

**மீண்டும் கனக்ஸ்**

நாம சொல்லித் தான் இன்னொருவருக்குத் தெரிய வருகிறது. ஆகவே கனவு என்பதை உறக்க நிலையில் நாம் அனுபவிக்கும் உணர்வினை நினைவுக்குக் கொண்டு வருதல் எனலாம் அல்லது எமது சுய தொகுதி வெளி உலகத்துடன் தொடர்பற்ற நிலையில் இருக்கும் சமயத்திலே எமது மனத்தில் நடைபெறும் சிறுசிறு நாடகங்கள் எனலாம்.

சாதாரணமாக சராசரியாக ஒருவருக்குத் தினசரி மூன்றோ நான்கோ கனவுகள் வரலாமாம். குழந்தைகள் கூடிய நேரம் உறங்குகின்றமையால் அவர்களுக்குத் தினசரி இன்னும் அதிக கனவுகள் தோன்றலாம். நாம் உறங்குகின்ற சமயங்களிலே REM என அழைக்கப் படும் Rapid Eye Movement நடைபெறுகிறது. அச் சமயத்தில் மூடப்பட்ட கண் இமைகளின் பின்னே நமது கண்கள் முன்னும் பின்னுமாக அசைகின்றன என 1950ம் ஆண்டிலே ஆய்வாளர்கள் கண்டு பிடித்துள்ளனர். அப்போது தான் கனவுகள் ஏற்படுகின்றதாக உளவி யலாளர்கள் சொல்கிறார்கள். நமது உறக்கத்தின் ஆரம்பத்தில் தோன்றும் கனவுகள் சிறியயை யாகவும் நேரம் போக நீண்டு கொண்டும் போகுமாம். சிறப்பாக பிந்தி வரும் கனவுகள் நெடியவையாக இருப்பதுடன் மிகத் தெளிவானவையாகவும் அதிகம் போலித்தன மானவையாகவும் அமைய லாம். நம்மவர்கள் இதனா லேயே காலையில் கண்ட கனவு பலிக்கும் எனப் பயந்தடித்தபடி இருப்பதைக்காணலாம்.

கனவு பற்றி வெவ்வேறு கொள்கைகள் விஞ்ஞானிகளால் சொல்லப் பட்டுள்ளன. சிக்மண்ட் புறோயிட் (Sigmund Freud) எமது மனத்திலே நம்மால் அடக்கப் பட்ட ஆசைகள் வேறோரு அடையாளத்தில் புலப்பட்டு எமது மனத்திற்கு அந்த ஆசையை நிறைவேற்றிய மனச் சாந்தியைத் தருவதுடன் அந்த எண்ணம் மீண்டும் எமது வாழ்வில் குறுக்கிடாமல் செய்கிறது என்கிறார். காதல் வயப் பட்டவர்கள், சிறப்பாக ஒரு தலைக் காதல் வயமானோர், இக் கொள்கையினை ஏற்பார்கள் என நம்பலாம்.

அமெரிக் பூர்வ குடிமக்களின் கனவு பற்றிய கொள்கை நம்மவர்களுக்குப் பெரும் அளவிலே ஒத்து வரும் போலத் தெரிகிறது. கனவுகள் உண்மை நிகழ்வுகள் என்பார்கள் அவர்கள். எமது கனவுகள் எம்மைப் பற்றிய உண்மை களையும் எமது வாழ்வு பற்றிய செய்தி களையுமே சொல்வதாக அவர்கள் கருதுகிறார்கள்.

இன்னொரு கொள்கை மிகவும் ஜதார்த்தமானது. அதன் படிக்கு எமது நாளாந்த அனுபவங்கள் எமது ஆழ் மனத்திலே (Sub conscious mind) தங்கியுள்ளன. நாம் உறங்குகின்ற போது இவற்றில் சிலவற்றை எமது மூளை தொகுத்து ஒரு சிறு நாடகமாக எமக்குக் கனவு மூலமாக அளிக்கின்றது. இரவிலே அதி பயங்கரமான திரைப்படம் ஒன்றினை உங்கள் பிள்ளைகள் பாரத்தார்கள் என்று வையுங்கள். அன்று இரவு உங்கள் தூக்கம் நிம்மதியாக இருக்கும் என்பதற்கு உத்தர வாதமே இல்லை. நடு இரவில் பிள்ளைகள் உங்களைத் தட்டி எழுப்பி உங்களுடன் உறங்கப் போகிறேன் பயங்கர கனவுகள் வருகின்றன என்று கெஞ்சுவார்களா. ஏன் பெரியவர்கள் கூட இத்தகைய கனவுகளைக் காண்பது உண்டு. ஆனால் அனுபவங்கள் அன்றன்றே கனவில் வரவேண்டும் என்ற அர்த்தம் இல்லை. அனுபவங்கள் எமது ஆழ்மனதிலே வருடக் கணக்கிலே புதையுண்டு இருக்கலாம். இந்தப் புதையலை கிண்டி எடுத்து தொர்குத்து நீக்க வேண்டியதை நீக்கி தேர்ந்த நுனவைழச ஆக மூளை ஒரு நாடகத்தை அமைத்து பல வருடங்களின் பின்னே உங்களைப் பார்க்க வைக்கலாம். சில வருடங்களுக்கு முன்னர் இங்கே ஒரு வழக்கு நடைபெற்றது.

28 வயதுப் பெண்மணி ஒருவர் தனது சிறிய தந்தையார் தன்னைப் பால்முறை வன்செயலுக்கு ஆளாக்கினார் எனக் குற்றம் சாட்டினார். அப்போது தனக்கு 7 வயது எனவும் கூறினார். தனது அறியாப் பருவத்தில் நடந்த இந்த நிகழ்ச்சி தனது உறக்கத்தை இப்பொழுது கனவுகள் மூலமாகக் கெடுப்பதாகக் கூறினார்.

எத்தகைய கனவுகள் என்பதை நீங்கள் அறிந்தால் ஆச்சரியப் படுவீர்கள். அப்பெண்ணுக்கு அதிக கனவுகளிலே தனது பற்கள் வீழ்வதாக இருக்குமாம். நம்மவர்கள் பல் விழுவதாகக் கனவு கண்டால் இறப்பு நடைபெறும் என்பார்கள். பல்விழுவதாகக் கண்ட கனவுக்கும் பாலியல் வன்முறைக்கும் என்ன தொடர்பு என்கிறீர்களா. கனவுகள் தத்ரூபமாக நடந்த நிகழ்வுகளைக் காண்பிக்க வேண்டும் என்பதில்லை. அவை சங்கேதங்களாகவோ குறியீடு களாகவோ (Symbolic) அமையலாம். இப்பெண்ணை அக் கொடியவன் பாலியல் வன்முறைக்கு ஆளாக்கு கின்ற பொழுது அதற்கு ஏழு வயது. அப்பொழுது தான் அதன் பாற்பற்கள் விழுந்து நிரந்தரப் பற்கள் தோன்றுகின்றன. எனவே கனவு நிஜநிகழ்ச்சியைப் புலப்படுத்தாது சங்கேதமாக நடந்த காலத்தைப் பிரதிபலித்துள்ளது.

தொடர்ச்சி 32 ம் பக்கம்



31 ம் பக்கத் தொடர்ச்சி....

# கனவு





**மீண்டும் அமரர் கனக்ஸ்**

கனவுகள் வாழ்க்கைக்கு இறியமையாதவையா என்ற வினா எழுகிறது. இது அவரவர்கள் மனப் பான்மையிலேயும் அவர்கள் வாழ்கின்ற கலாச் சாரத்திலேயுமே தங்கி உள்ளது. ஆனால் சில பிரபலங் களைக் கனவுகள் வழிநடத்திய உண்மை பதிவுகளில் உள்ளன. ஆபிரஹாம் லிங்கன் அமெரிக்காவின் குடியரசுத்தலைவராக இருந்த போது படுகொலை செய்யப் பட்டார்.
அவர் படுகொலை செய்யப்படுவதற்குச் சிறிது காலத்திற்கு முன்னர் அவர் ஒரு கனவு கண்டாராம்.” வெள்ளைமாளிகையிலும் அதற்கு வெளிப் புறத்திலும் மக்கள் பெரும் தொகையாக நின்று பெருமளவில் தமது துயரத்தைக் காட்டியபடி இருந்தார்களாம். அங்கே ஒருவரின் உடல், (அதனைக் குடியரசுத் தலைவர் என்றே லிங்கன் இனம் கண்டார்,) காணப்பட்டதாம்.” லிங்கன் கனவு கண்ட சில நாட்களில் அவர் கொலை செய்யப் பட்டார். 1983ம் ஆண்டிலே தமிழ் நாட்டில் வாழ்ந்து கொண்டிருந்த நமது அரசியல் தலைவர் ஒருவரை நான் சந்தித்து உரையாடிக் கொணடிருந்த போது அவர் காலம் சென்ற தமிழ்த் தலைவர் இ.மு.வி நாகநாதன் தன்னை அங்கே வருமாறு அழைப்பதாககத் தான் அடிக்கடி கனவு கண்டதாகக் கூறினார். சிறிது காலத்தில் அவர் கொலை செய்யப் பட்டார். நான் காங்கேசந் துறையில் வாழ்ந்த காலத்தில் எனது இல்லத்தில் கிணற்றடியில் இருந்து மலகூடம் செல்வதற்காகப் பாதை அமைத்து அதன் இரு புறங்களிலும் கமுக மரங்கள் நட்டிருந்தேன். ஒரு இரவு அந்தக் கமுகமரத்தில் ஒன்று வட்டுடன் முறிந்து வீழ்வதாகக் கனவு கண்டேன். இதை எனது தாயாரிடம் சொன்னேன். குடும்பத்தில் ஒரு துயரச் சம்பவம் நடைபெறலாம் என்றார். வாரத்தில் எனது மைத்துனர் இறந்தார். Robert Louis Stevenson என்பவர் சென்ற நூற்றாண்டின் பிரபலமான எழுத்தாளர்.

அவருடைய மிகப் பிரபலமான கதைகளில் ஒன்று " Jeckell and Mr. Hyde" இந்தக் கதைக்கான கரு அவருக்குக் கனவிலே தான் தேன்றியதாம். 1960களில் மிகப் பிரபலமாயிருந்த இசைக் குழுவினரில் ஒருவரான Paul McCartney க்கு Yesterday என்ற பாடலுக்கு இசை கனவிலே தான் உதித்ததாம். இப்படிப் பல உதார ணங்கள் சொல்லலாம். ஏன் உங்களுக்குக்கூட இத்த கைய பல அனுபவங்கள் ஏற்பட்டிருக்கலாம். ஆகவே கனவுகள் வாழக்கைக்கு இன்றியமையாதவையா என்பதற்குப் பதில் கூறு முடியாது. அவரவர்கள் மனப் பாங்கினைப் பொறுத்தது. கனவுக்கு முக்கியத்துவம் கொடுத்து அது பற்றிச் சிந்தித்துக் கொண்டிருப்பவரும் உளர் அதனை உதாசீனப் படுத்தி உடனடியாக மறந்து விடுபவரும் உளர்.
ஆழ்மனத்திலே உள்ள வாழ்க்கை அனுபவங்கள் வெகுகாலத்தின் பின்னர் கனவுகளாக வருவதாகக் கூறியிருந்தேன். அதே போன்று சில சமயங்களிலே கனவுகள் கூட ஆழ்மனத்திலே புதையுண்டு விடுவதும் உண்டு. இரவினிலே கண்ட கனவு , கனவு முடிந்து கண் முழித்ததும் நினைவுக்கு வரும் ஆனால் மீண்டும் உறங்கிக் காலையில் எழுந்ததும் அரைகுறை ஞாபகமே வருவதும் உண்டு. ஆனால் பின்னர் ஒரு பொழுது அது நினைவுக்கு வரலாம்.
இரண்டு கண்களும் பார்வை அற்றவர்கள் கனவு காணமுடியுமா என எண்ணலாம். கனவு என்பது கண்கள் மூலம் காண்பது இல்லையே. அது ஒரு அகத் தோற்றம் எனவே கண்பார்வை இல்லாமலே பார்க்கக் கூடியது ஒன்று உண்டென்றால் அது கனவு மாத்திரமே.

விலங்குகளால் கனவு காணமுடியுமா என்பது இன்னொரு சந்தேகம் உள்ள. எல்லா விலங்கு களாலுமே கனவு காண முடியுமாம். வீட்டிலே படுத்து உறங்கிக் கொண்டிருக்கும் நாயினை அவதானித்தீர்களானால் அதன் கால்கள் சில சமயங்களில் அசைவதைக் காண முடியும். அப்போ அது கனவு காண்கிறது என்கிறார்கள் விஞ்ஞானிகள். கனவு மெய்ப்பட வேண்டும் காரியமாவது விரைவில் வேண்டும் ( பாரதி)

09ம் பக்கத் தொடர்ச்சி....

# நாளை உங்கள் பாதணியே....



வியரபிள் பேய்மென்ட் முறை என்பது மிக எளிமையானது. வழக்கமாக கார்டை எடுத்து, மெஷினில் சொருகி, ரகசிய நம்பர் கொடுத்து, ஓகே சொல்லும் போது பணம் நம்மிடமிருந்து அடுத்த நபருக்குச் செல்லும். இந்த வியரபிள் வகையில் நாம் வெறுமனே அந்த கருவியை கையிலோ விரலிலோ கழுத்திலோ அணிந்து கொண்டு, அதைக் கொண்டு மெல்ல தட்டினால் போதும். பண பரிவர்த்தனை ஓவர் !
தொழில்நுடம் நமது கையிலிருக்கும் கருவியிலிருந்து தகவலை கடத்தி வங்கியின் தகவல்களோடு ஒப்பிட்டுப்பார்த்து தேவையான பணத்தை அனுமதிக்கிறது அல்லது நிராகரிக்கிறது.

விசா நிறுவனம் கிரீஸ் நாட்டு தேசிய வங்கியுடன் இணைந்து இந்த தொழில்நுட்பத்துக்கு பிள்ளையார் சுழி போட்டிருக்கிறது. விரலில் அணியும் மோதிரம், கைகளில் அணியும் பிரேஸ்லெட் இவற்றின் மூலமாக பேமென்ட் செலுத்தும் முறையை முதல் கட்டமாக சந்தைப்படுத்துகிறார்கள்.
பணப் பரிவர்த்தனைகள் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வருவதால், இத்தகைய தொழில்நுட்ப முன்னேற்றங்களும் அவசியமாகின்றன என்கிறார் விசா நிறுவன ஐரோப்பிய பிரிவின் தலைவர் “மைக் லெம்பர்கர்” அப்படியே அவர்கள் ஸ்பெயின் நாட்டின் கெயிக்ஸா வங்கியோடு தொடர்பு வைத்துக் கொண்டு, வாட்ச் மூலம் பணப் பரிவர்த்தனை செய்யும் முயற்சியிலும் ஈடுபட்டிருக்கிறார்கள். அது இந்த ஆண்டு இறுதியில் ஆரம்பமாகும் என நம்பப்படுகிறது.

இன்னும் சில ஆண்டுகளில் அணியும் தொழில்நுட்பம் எல்லாவற்றிலும் நுழைந்து விடும் என்பது சர்வ நிச்சயம். இன்டர்நெட் ஆ.்.ப் திங்க்ஸ், பிக் டேட்டா, ஆர்டிபிஷியல் இன்டலிஜென்ஸ், மெஷின் லேர்னிங், பிரையின் மேப்பிங் போன்ற தொழில்நுட்பங்களின் கலவையாக எதிர்கால அணியும் நுட்பம் உருவாகும் என்பதே தொழில்நுட்பத்தின் கணிப்பாகும்.
உதாரணமாக கூகிள் கிளாஸ் போன்ற ஸ்மார்ட் கண்ணாடிகள் எதிர்காலத்தில் பரவலாகும். இது ஹாலிவுட் சினிமா போல, இன்டெர்நெட் ஆ.்.ப் திங்கஸ், என்.எ.்.ப்.சி போன்ற தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி, பார்க்கும் இடத்தில் இருக்கும் தகவல்களையெல்லாம் புரிந்து கொள்ள பயன்படும். பார்வையில்லாதவர்கள் இதை அணிந்து கொண்டு சாதாரண நபரைப் போல நடமாடும் காலம் உருவாகும்.
அணிகின்ற பாதணி உங்களுக்கு வழிகாட்டி அழைத்துச் செல்லலாம், உங்களிடம் இருக்கும் அத்தனை கருவிகளுக்கும் தேவையான சார்ஜை இது தனது அசைவின் மூலம் தந்து செல்லலாம். நாம் அணியும் ஆடையே ஒரு ஜிபிஎஸ் மேப்பாக நமக்கு உதவலாம். அணிகின்ற கான்டாக்ட் லென்ஸ் மூலமாக பண பரிவர்த்தனைகள் நடக்கும் காலம் உருவாகலாம்.
இப்படி எங்கும் நீக்கமற நிறையப்போகும் அணியும் தொழில்நுட்பத்தின் இன்றைய வளர்ச்சி இந்த பணப் பரிவர்த்தனை ! அது நிச்சயம் அடுத்தடுத்த தளங்களுக்கு அசுரப் பாய்ச்சல் எடுக்கும் என்பதில் சந்தேகமில்லை.


RKL IMMO .de IMMOBILIEN & BAUFINANZIERUNG
UMFINANZIERUNG / KAPITALANLAGE / RATENKREDIT / SONDERFINANZIERUNG



Registrierungsnummer: D-W-133-ADSJ-30 Umsatzsteuer ID: DE186406298
RKLIMMO / S.KIRTHARAN
வீடு வாங்குவோர்க்கு மீண்டும் அரச உதவி
ஒரு பிள்ளைக்கு 12000,00 இலவசமாகக்கிடைக்கும்
வீட்டுக்கடன் பெறும்போது ஓய்வூதியம் (Rente)
ஓர் தடையாக உள்ளதா?? எம்முடன் தொடர்பு கொள்ளவும்.
வீடு வாங்கவிருப்பம், ஆனால் கையில் பணமில்லையா?
நாம் 115 % கடனை வழங்குகின்றோம்
முக்கிய குறிப்பு: எமது சேவை என்றும்போல் 100% இலவசம் .
INTERNET:WWW.RKLIMMO.DE
நம்பிக்கை உத்தரவாதம் 17 வருட அனுபவம்
Tel: 0511 5307 4208 Vahrenwalder Str.167 30165 Hannover








சிவகாமி மணவறைச் சோடினை
யோகன், யோகி:
02823/6838
Mobil:
152 138 22 350





Yogan Deko



# திருமந்திரமும் வாழ்வியலும் 31

(சைவசித்தாந்த ரத்தினம் நாகேந்திரம் கருணாநிதி)

இந்நூலில் சிவம் எனவரும் சொல்லுக்கு இறைவன் என்னும் கருத்தைக் கொள்வோமானால் இந்நூல் எல்லா மதத்திற்கும் பொது நூலாக அமைவதைக் காணலாம்.

## திருமந்திரம் கூறும் ஆவணப்படுத்தல்






31.05.1981

இற்றைக்கு 1600 வருடங்களுக்கு முன்பே (கி.பி. 4 அல்லது 5 ஆம் நூற்றாண்டு) திருமூலர் திருமந்திரத்தில் தனது செயல்பாட்டை தானே ஆவணப்படுத்தியுள்ளதன் மூலம் ஆவணப்படுத்துதலின் முக்கியத்துவத்தை எமக்குக் கூறியுள்ளார். எமது மூதாதையர் தாங்கள் வாழ்ந்த காலத்தில் நடந்தவற்றை ஆவணப்படுத்தத் தவறியதாலும், சைவசமய, சாஸ்திர, வானியல், மருத்துவம், இன்னும் பல விடையங்கள் பற்றி முனிவர்கள், சித்தர்கள், நாயன்மார்கள், புலவர்கள் உட்பட பல அறிஞர்களால் எழுதிவைக்கப்பட்ட ஏடுகளை பின்பு வந்தோர் பாதுகாக்கத் தவறியதாலும், அன்னியர்களின் படை எடுப்புகளாலும், இயற்கை அனர்த்தங்களாலும், தென்கிழக்கு ஆசியாவில் பெரிய நூலகமான கிட்டத் தட்ட 97,000 அரிய நூல்களையும், பழமையான ஓலைச்சுவடிகளையும் கொண்ட யாழ் நூலகம் இலங்கை அரசால் 01-06-1981 இல் முற்றாக எரிக்கப்பட்டதாலும், தமிழ்ச் சமுதாயம் குறிப்பாக சைவசமயத்தவர் பெரும் இழப்பிற்கு ஆளாகியுள்ளோம். இதன் விளைவு வரலாறுகள் திரிபு படுத்தப்பட்டும், யாரோ செய்ததை வேறு ஒருவர் செய்ததாகக் கூறுவதையும் காணக்கூடியதாக இருக்கின்றது. இதனால் எது சரி எது தவறு என அறியமுடியாத நிலையும் இன்றைய சமுதாயத்திற்கு ஏற்பட்டுள்ளது. பல ஆராய்ச்சியாளர்கள் வருடக்கணக்காக சரியான தகவல்களை அறிவதற்காக முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள். சிலர் தங்கள் அனுமானங்களை கூறியுள்ளது சரியானதுதானா என்னும் கேள்வி இருக்கத்தான் செய்கின்றது.

திருமந்திரத்தை திருமூலராகிய தான்தான் அருளியதாக அவர் பதிவு செய்த திருமந்திரப் பாடல் எண் 3046

"மூலன்உரை செய்த மூவாயிரம் தமிழ்
மூலன்உரை செய்த முந்நூறு மந்திரம்
மூலன்உரை செய்த முப்பது உபதேசம்
மூலன்உரை செய்த மூன்றும் ஒன்றாமே"

திருமூலர் அருளிய மூவாயிரம் பாடல்களும், திருமூலரே சொல்லிய முந்நூறு மந்திரங்களும், திருமூலர் வழங்கிய முப்பது உபதேச மொழிகளும் திருமூலர் தமிழுக்குத் தந்த ஒத்த கருத்துடைய, ஒரே பொருளுடைய தமிழ் மறை எனப் போற்றத்தக்க பெருமை உடையவையாகும்.

திருமூலர் தான் உலகிற்கு வந்த நோக்கத்தைக் கூறிய பாடல் எண் 92

"நந்தி அருளாலே மூலனை நாடிப்பின்
நந்தி அருளாலே சதாசிவன் ஆயினேன்
நந்தி அருளால் மெய்ஞ்ஞானத்துள் நண்ணினேன்
நந்தி அருளால் நான் இருந்தேனே"

என் தலைவன் நந்தி. அவன் அருளாலே நான் சாத்தனூர் மாட்டிடையன் மூலன் உடலில் புகுந்தேன். பின் நந்தி அருள் துணையாலேயே சிவாகம மந்திரம் செப்பலானேன். நந்தி எம் பெருமான் அருள் வழி காட்டுதலின்படியே நான் மெய்ஞ்ஞான சித்தி பெற்றேன். இப்படியாக நான் பெற்றது உற்றது எல்லாமும் நந்தி அருளாலேயே அல்லாமல், இதில் என் செயல் ஒன்றுமில்லை. ( திருமூலர் திருமந்திரத்தில் சிவபெருமானை நந்தி என்றே குறிப்பிடுகின்றார்) திருமூலர் திருக்கயிலாய பரம்பரையில் வந்தவர் என கூறிய பாடல் எண் 91

"விளக்கிப் பரமாகும் மெஞ்ஞானச் சோதி
அளப்பில் பெருமையன் ஆனந்த நந்தி
துளக்கறும் ஆனந்தக் கூத்தன் சொற்போந்து
வளப்பின் கயிலை வழியில் வந்தேனே"

ஆகம வேதப் பொருளை விளக்கி அருளியவன் பராபரன். மெஞ்ஞானச்சோதி வடிவானவன். அளவிடமுடியாத பெருமை உடையவன். அவனே இன்ப வடிவான நந்தியெம் பெருமான். மனித மனங்களை நடுங்கச் செய்யும் ஆணவ மலங்களைப் போக்கி அருள ஆனந்த நடமிடுபவன். இவன் அருளாணையை ஏற்று, வளமிக்க திருக்கயிலாய மலைஞானகுரு, நந்தி பரம்மரையில் வந்தவன் நான்.

திருமூலர் தனது குரு பரம்பரை பற்றிக் கூறும் பாடல் எண் 67

"நந்தி அருள்பெற்ற நாதரை நாடின்
நந்திகள் நால்வர் சிவயோக மாமுனி
மன்று தொழுத பதஞ்சலி வியாக்ரமர்
என்றிவர் என்னோடு எண்மரும் ஆமே"

நந்தி எம்பெருமான் திருவருள் கருணையால், மறைப் பொருள் கேட்டுணர்ந்த மாமுனிகள் எட்டுப் பேர்களாவார். அவர்கள் சனகர், சனந்தனர், சனாதனர், சன்றகுமாரர் என்ற நால்வர். சிவயோக மாமுனிவர், பதஞ்சலி (தில்லைத் தாண்டவம் கண்டு மகிழ்ந்த பாம்புக் காலுடைய தவயோகி), வியாக்கிரபாதர் (புலிக் காலுடைய முனிவர்), என்னையும் சேர்த்துக் குருமார் எட்டுப் பேர்.

திருமூலர் தனது சீடர்கள் யார், யார் என கூறிய பாடல் எண் 102

"கலந்தருள் காலாங்கர் தம்பால் அகோரர்
நலந்தரு மாளிகைத் தேவர் நாதாந்தர்
புலம்கொள் பரமானந்தர் போக தேவர்
நிலம்திகழ் மூலர் நிராமயத் தோரே"

திருவருளும் குருவருளும் கலந்த மெய்த் தவயோகிகள் காலாங்கர், அகோரர், திருமாளிகைத் தேவர், நாதாந்தர், பரமானந்தர், போகநாதர், திருமூலர் என்னும் எழுவராவர். இவர்கள் அனைவரும் இறவா உடல் பெற்ற தவஞானிகள்.

திருமூலர் தான் பல ஆண்டுகள் வாழ்ந்ததாகக் கூறிய பாடல் எண் 80

"இருந்தேன் இக்காயத்தே எண்ணிலி கோடி
இருந்தேன் இராப்பகல் அற்ற இடத்தே
இருந்தேன் இமையவர் ஏத்தும் பதத்தே
இருந்தேன் என்நந்தி இணைஅடிக் கீழே"

தியானத்தில் இந்த உடலோடு பல கோடி ஆண்டுகள் வாழ்ந்தேன். பகல் இரவு பேதம் தெரியாது தவயோகத்தில் நான் என்னை மறந்து இருந்தேன். வானுலகத் தேவர்கள் எல்லாம் வழிபட்டு வணங்கும் திருவடியை வணங்கித் துதித்தபடி இருந்தேன். என் தலைவன் நந்தியெம் பெருமான் திருவடியே துணை என்று அதன் கீழே அதனைப் பற்றியபடி பற்று ஒழிந்து இருந்தேன்

ஓம் பூரணம் ஓம்

மானுடம் முழுமை பெறும் பூரணம்

பூரண ஆச்சிரமம்

சுவிற்சர்லாந்து

0041 79 839 27 73

உடலினையும் மனதினையும் உறுதி செய்து
வாழ்வினை வெற்றி கொள்வோம்

யோகா, தியானம், மன ஒருங்குவிப்பு, உடல் உள நல பயில்வு, ஐயதய சாதனைகள்

Purna Ashram Gotthelfstrasse 44, 3400 Burgdorf Switzerland Tel: 0041 34 413 02 65




# உலகை எமக்கு கையில் தந்த தமிழின்

உலகில் எதையும் தேடித்தரும் Google, செல்போனை ஆக்கிரமிக்கும் Android, வலைத்தளங்களை காட்டுவதற்கு பயன்படும் Chrome, என்று இப்படி நவீன கால தொழில்நுட்ப அம்சங்கள் பலவற்றின் வேகமான வளர்சிக்குப் பின்னனியில் இருக்கும் தமிழின் சுந்தர் பிச்சை.

படிப்படியாக முன்னேறுவது என்றால் என்ன, முன்னேறிக் கொண்டு இருப்பதற்கு என்னவெல்லாம் செய்யவேண்டும், விழுந்தால் எழுந்திருப்பது எப்படி என ஆர்வத்துடன் பயணிக்க துடிக்கும் அனைவருக்கும் எழும் இதைப்போன்ற கேழ்விகளிட்கெல்லாம் விடைதான் சுந்தர் பிச்சையின் வாழ்க்கை.

பிச்சை சுந்தரராஜன் எனும் இவர் தமிழ்நாட்டில் உள்ள மதுரை மாவட்டத்தில் பிறந்தார்.இவரது பெற்றோர் ரகுநாத பிச்சை மற்றும் லட்சுமி.இவர் ஜூலை மாதம் பன்னிரண்டாம் தேதி 1972 ஆம் ஆண்டு பிறந்தார்.

இவரது தந்தை ஒரு மின் பொறியாளர் தாய் ஒரு சுருக்கெழுத்தாளர்.சுந்தர் பிறந்த பின்பு அவர் அப்பணியை விட்டு முழுநேர குடும்ப பெண்மணியாக மாறினார்.



பிறந்ததிலிருந்தே நடுத்தர குடும்பத்தை சேர்ந்த இவர் சிறிய வீட்டிலிருந்தே வளர்ந்தார். முதன் முதலில் தன் தந்தை வீட்டிற்கு புதிதாக ஒரு தொலைபேசியை வாங்கிவந்த பொழுது அதன் மூலம் பல விஷயங்களை கற்று கொள்ள ஆரம்பித்தார். அதில் அவர் விசேஷதிறன் பெற்றிருந்தார். தான் டயல் செய்த எண்களைமுழுவதும் நினைவில் வைத்துக் கொண்டிருந்தார். அதுவே அவரது வாழ்வில் மின்னனு சாதனங்களுடனான முதல் தொடர்பாகும். இன்று தொழில்நுட்ப உலகை ஆளும் நிறுவனத்தின்தலைமை பதவிக்கு உயர்ந்திருப்பவர் இவர்.

ஜனார்த்தனி சுபசபாநாதக்குருக்கள்

ஐ.ஐ.டி கரக்பூரில் பொறியியல் பயின்ற இவர், அமெரிக்காவில் உள்ள ஸ்டான்போர்ட் பல்கலைக்கழகத்தில், பொருளறிவியல் பட்டம் பெற்றார்.

சுந்தர் பிச்சையின் இளமைக் காலங்களில் வீட்டில் தொலைக்காட்சி கூட கிடையாது. அவரது 12 ஆவது வயதில் வீட்டிற்கு கொடுக்கப்பட்ட தொலைபேசி இணைப்பு மட்டும் தான் ஒரு ஆடம்பரப் பொருள். இணையத்தளம் (Internet) நடைமுறையில் இல்லாத காலத்தில், கணனி (Computer) மற்றும் தொழில்நுட்பம் பற்றிய அறிவை, பத்திரிகைகள், புத்தகங்கள் ஊடாகவும் வளர்த்துக் கொண்டார். தனது இளமைக் காலத்தில் தனிமையில் இருந்து வாசிப்பதிலேயே தனது முழு நேரத்தயும் பயன் படுத்தினார். அதனால் அவருக்கு நண்பர்கள் வட்டாரம் கிடையாது.

2004ஆம் ஆண்டில் அமெரிக்காவில் உள்ள கூகுள் நிறுவனத்தில் இணைந்த அவர், 2015 இல் இருந்து இன்று வரை புழுழபடநலின் (CEO) முதன்மை செயல் அலுவலராக செயல்ப்படுகின்றார்.

”எப்போதும் கடினமான பாதைகளை தேர்ந்தெடுங்கள், அந்த பாதையில் தான் போட்டிகள் அதிகம் இருக்காது, அதன் இறுதியில் கிடைக்கும் வெற்றி உங்களை உச்சத்தில் நிறுத்தும்.” என்ற சுந்தர் பிச்சையின் கூற்று தான் எம்மை போன்ற இளம் சமுதாயத்திற்கு எடுத்துக்காட்டாக அமைகிறது.

எப்படி பட்ட சூழ்நிலையில் இருந்தாலும் நாம் ஒரு இலக்கை அடைய வேண்டும் என நினைத்து முயற்சித்தால் வாழ்க்கையில் எந்த நிலையையும் நாம் அடையலாம், என்பதை இவர் நிரூபித்திருக்கிறார்.


திருமண சேவை

மண (மகன், மகள் ) தேவை

கிறிஸ்த மதத்ததைச் சேர்ந்த நன்கு படித்து, பல்கலைக்கழகம் முடித்து, சிறந்த தொழில்புரியும் 26 வயது முதல் 30 வயதுவரையிலானவர்கள் துணையை தேடுகிறார்கள். விபரங்களை கீழ்வரும் தொலைபேசி இலக்கத்திற்கு குறும் செய்திகளாக அனுப்பவும். ( முக்கிய குறிப்பு: தொலைபேசி எடுக்க வேண்டாம், படம் அனுப்ப வேண்டாம்.) இச்சேவை அனைத்தும் இலவசம் இது எமது ஓய்வு நேரத்தில் ஒரு பணியாக மேற்கொள்கின்றோம். என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. ஐரோப்பவில் உள்ளவர்களும் விண்ணப்பிக்கலாம். நாம் இலவசமாக தொடர்புகளை மட்டும் ஏற்படுத்தி தருவோம். பெற்றோர் தொடர்பு கொள்வது வரவேற்கத்தக்கது.

தொலைபேசி இலக்கம். 0049 176 579 469 33

0049 152 105 12 973 ( நேச தேவா)



வெற்றிமணி யேர்மனியில் மட்டும்

விமானச் சேவை விளம்பரங்கள்

புதிதாக எதுவும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்பதனை அன்புடன் அறியத்தருகின்றோம். இவ்வறித்தல் குறிப்பிட்ட சில காலங்களுக்கு செல்லுபடியாகும்.

Radio - by -Phone

தொலைபேசி இலக்கத்தில் ஐரோப்பிய தமிழ் வானொலி

அழையுங்கள் கேட்டு மகிழுங்கள்




02219888014
0445133032
0180140659
03303326349
078772527



இலங்கைக்கு பார்சல் அனுப்ப விரும்புகிறீர்களா?

TAMIL-PARCEL.de

ஒரு பாசல் அனுப்பும் கட்டணம் 55€ மட்டுமே!

PARCELS TO COLOMBO ONLY 50 €

Our partners near you

Arnsberg. Bochum. Bonn. Brüggen.Dortmund.Duisburg. Essen.Frankfurt.Heideelberg. Heilbronn.Hornberg.Herne. Hückelhoven.Krefel. Mannheim.Mönchengladbach. Neuss.Mörfelden-Walldorf.Mühlacker. Mühlheim. Solingen.Stuttgart.Wuppertal

✓ 60 x 40 x 40 cm அளவு பெட்டிகள்
✓ பெட்டியின் உள்ளடக்கம் 40Kg
✓ பெட்டி மற்றும் டேப் றோல் இலவசம்
✓ நீங்கள் வெளிநாடுகளில் இருந்து அனுப்பும் பார்சல்கள் தாயகத்தில் உள்ள உங்கள் இல்லங்கள் தேடி நேரடியாக கொடுக்கப்படும் (Door-to-Door Delivery)



ஒவ்வொரு பார்சலும் 300€ காப்புறுதியுடன் அனுப்பப்படும்




3 பார்சல்கள் அனுப்பினால் 4ஆவது பார்சல் இலவசம்

Best Price Promiser

மக்கள் தொடர்பு:

www.tamil-parcel.de

0176 56841676
0176 24889539




# ஆண் பெண் இடைவெளி

அங்காடியில் ஒரு பலவீனமான பாட்டி தன் பொதியைச் சுமக்க கடினப்பட, உடனே சென்று உதவுகிறோம். இதுவே குறுப்பிட்ட பாட்டி ஒரு பாட்டாவாக இருந்தால் அதே விரைவாக உதவிடுவோமா? அல்லது பாட்டா அவருடைய பலவீனத்தை வெளிப்படையாகக் காட்டிடுவாரா?

இக்கேள்வி சமுதாயத்தின் சர்ச்சையான ஒரு நிலைமையை காட்டுகிறது. உலகின் உயரதிகாரிகளாக மிகக் குறைந்த பெண்கள் இருப்பதற்கும், சராசரி ஆண்கள் பலர் மன-அழுத்ததால் மரணிப்பதற்கும் இதுவே காரணம்.


தற்போது ஜேர்மனியில் Gender-Payment-Gap அதாவது ஆண்-பெண்




சம்பள வேறுபாடு 21% ல் உள்ளது. காரணம் என்ன? விளைவுகள் என்ன?
Facebook நிறுவனத்தின் துணைமுதலாளியாக Sheryl Sandberg 2007ம் ஆண்டில் இருந்து பணிபுரிகிறார். Google, Disney போன்ற பல நிறுவனங்களில் முதலாளியாக இருந்த இவர் இன்று உலகின் மிகப் பணக்காரர்களில் ஒருவர்.
இவரது உரையை நான் பார்க்கையில், சுவாரஸ்யமான ஒரு விடயத்தைச் சொன்னார். 3மணி நேர செயளாளர் கூட்டத்தின் பிறகு, பெண்களுக்கான கழிப்பறை இருக்குமிடத்தை ஆண் அதிகாரிகளிடம் வினாவ, யாருக்கும் தெரியவில்லையாம். காரணம் உயர்செயலாளர் மாடிக்கு பெண்கள் யாரும் அதுவரை வரவில்லை என்ற உண்மையை Sandberg விளக்கினார்.
உலகளாவிய ரீதியில் பாராளுமன்றங்களில் தற்போது 23,8% (June 2018) மட்டுமே பெண்கள் உறுப்பினர்களாக உள்ளனர். பொதுவாக உயர் செயளார்களாக பெண்கள் மிகக்குறைவாகவே இருக்கின்றனர். இதைபற்றி Sandberg: „பெண்கள் ஆண்களை விட கடினமான தீர்மானங்களை எடுக்கவேண்டியுள்ளார்கள். குடும்பமா, தொழிலா எனும்போது, அதிகமான பெண்கள் குடும்பத்தை நோக்கியே முடிவு எடுக்கின்றனர்!“ (Sandberg, 2015). இந்த முடிவை பெண்கள் மணம் புரிவதர்க்கு முதலே எடுத்து, கிடைக்கக்கூடிய வாய்ப்புக்களை தவறவிடுகின்றனர். தான் செயலமர்வு களுக்கு செல்லும்போது பெண்கள் நிர்வாக சபையில் இருந்தாலும் முன்வந்து கலந்துரையாடுவதை விரும்பாததையும், எண்ணங்களை முன்நிறுத்தாதையும் கண்டு Sandberg வருந்துகிறார். இப்படி பெண்கள் தம் திறமைகளை மழுங்கடிக்கின்றனர். இதற்கு பெண்கள் மட்டும் காரணமல்ல, சமுதாயமும் முக்கிய பங்கேற்கிறது. வெற்றிகரமான பெண்ளைக்கண்டு அதிக மக்கள் பயமும், பொறாமையையுமே கொள்கின்றனர் (UOC 2015).

நியூ யோர்க்கில் உள்ள Colombia பல்கலைக்கழகத்தில் நடந்த ஒரு ஆராட்சியில், பெண் வழக்கறிஞர் Heidi வெற்றிகரமாக முடித்த ஒரு வழக்கை, இரு மாணவகுழுக்களிடம் ஒரு அறிஞர் சமர்பித்தார். அங்கே ஒரு குழுவிடம் Heidi என வழக்கறிஞரின் உண்மைப்பெயரையும், மற்றய குழுவிடம் Heidi என்ற பெயரை Hans என ஆண்பெயராகவும் மாற்றிக்கொடுத்தார்.




**ராம் . பரமானந்தன்**

மாணவர்கள் வழக்கைப் படித்த பின்னர், வழக்கை வெற்றிகண்ட வழக்கறிஞரின் அலுவலகத்தில் பணி புரிவார்களா என கேட்டார். பெண்ணென அறிந்த மாணவர்கள் அவரை வஞ்சகமான முதலாளியாகவும், தன் எல்லையை மீறி நடப்பதாகவும் தெரிவித்து அவருடைய அலுவலகத்தில் பணி புரிய மறுத்தனர். அதே வழக்கை ஆண் வழக்கறிஞர் செய்ததாக நம்பிய மாணவர்கள் Hans ஒரு திறமையான, துணிந்த முதலாளியென கூறி அவரிடம் பணிபுரியவும் விரும்பினர். தொழில்வழியே வெற்றிபெற்ற ஆண்கள் சமுதாயத்தால் மிகுந்த வரவேற்பை பெறுகையில், பெண்களுக்கு அத்தகைய வரவேற்பு கிடையாது என்பதற்கு இதுவே சாட்சி.

பெண்கள்மீதான அழுத்தம் இவ்வண்ணம் இருக்க, இன்றைய சமுதாயத்தில் ஆண்களுள்ளும் அழுத்தம் வேறொரு முறையில் உள்ளது. இங்கே „Toxic Masculinity“ என்னும் விசத்தனமான ஆண்மை ஆணினத்தை உள்ளிருந்து வருத்துகிறது. Hollywood நடிகர் Justin Baldoni: „ஆணாக பிறந்ததால் எனது வாழ் நாள் முழுதும் நான் நடித்தவணணம் உள்ளேன்! சமுதாயம் ஆணெனும் தரத்தைக் குறிப்பிட, அதற்கு நிகராவதற்கு தவிக்கிறோம். இதனால் ஆண்மை எமக்குள் விசமாகக் கடைகிறது” என்கிறார்.
Baldoni சொன்னதை குறிப்பிட ஒரு எடுத்துக்காட்டு: புலம்பெயர்ந்து வரும் தமிழ்த் தந்தைமார் பலர், ஈழத்தில் மிக உயர்ந்த தொழில்களை செய்து, வெளிநாடுகளில், தம் கல்விக்கு பொருந்தாத, வருவாய் குறைந்த தொழில்களையே செய்கின்றனர். இந்த மனவருத்தத்தை இவர்கள் வெளிப்படையாகப் பேசுவதில்லை. காரணம் ஆண்கள் குடும்பத்தை காக்கும் சிரமங்களைச் சொல்வதை சமுதாயம் கோழைத்தனம் என்கின்றது. சமுதாயத்தின் சட்டங்களை மறுக்காதிருக்க, குடி, போதை, ஆக்ரோசம் போன்ற வழிகளில் உணர்வுகளிலிருந்து தப்புகின்றனர்.
ஆண்கள் சந்திக்கையில் ஏனைய பெண்களைப் பற்றி தவறாக பேசுவதையும், பெண்களிடம் தவறாக நடப்பதையும், ஆணுக்கு ஆண் கண்டிக்காமல் இருப்பது கற்பழிப்பு போன்ற செயல்களை ஆதரிக்கிறது (Baldoni, 2018).
இது „Toxic Masculinity“ என பாலினவிஞ்ஞானத்தில் குறிக்கபடுவதின் இன்னொரு பக்கம்.
ஆணும் பெண்ணும் பறவையின் இரு இறக்கைகள் போல. இரு இறக்கைகளும் சமனான முறையில் பறந்தால் மட்டுமே பறவையால் பறக்க முடியும். இல்லையெனில் பறவையால் உயரமுடியாது. (Abdul'L'Beha) ஆண் மையிலே அழகாக இருப்பதால் ஆணாகப் பிறப்பதே சிறப்பென, தமிழர் நாம் மூட நம்பிக்கையால் சமநிலையின்மை மேலும் ஆதரிக்கிறோம். மானிட வாழ்விற்கு இந்த உதாரணம் பொருந்துமா? காலத்துக்கேற்ப ஆண், பெண் நியதிகளை எப்படி மாற்றுவோம்?







# கொழும்பில் எழுச்சியுடன் முருகபக்தி மாநாடு

குகா

சர்வதேச மட்டத்தில் மலேசியா திருமுருகன் திருவாக்கு திருபீடத்தின் ஏற்பாட்டிலான நான்காவது முருகபக்தி மாநாடு ,லங்கையின் தலைநகர் கொழும்பில் ஓகஸ்ட் மாதம் 3 ஆம் திகதி முதல் மூன்று தினங்கள் பெரும் எழுச்சியுடனும் பக்தி பூர்வமாகவும் நடைபெற்று முடிவடைந்துள்ளது. தமிழ்க் கடவுளான முருகப்பெருமானின் புகழை உலகெங்கும் எடுத்துக் கூறும் வகையில் இரண்டு வருடங்களுக்கு ஒரு தடவை நடத்தப்பட்டுவரும் முருகபக்தி மாநாட்டின் தொடரில் நான்காவது மாநாடு கொழும்பில் நடத்தப்பட்டது.

மலேசியா பெட்டாலிங் ஜெயாவிலிருந்து மாநாடுகளை உலகெங்கும் நடத்திவரும் தவத்திரு பாலயோகி சுவாமிகளின் மலேசிய திருமுருகன் திருவாக்கு திருபீடம் 2012 ஆம் ஆண்டில் முதலாவது முருகபக்தி மாநாட்டினை மலேசியாவில் நடத்தியது.

இரண்டாவது முருகபக்தி மாநாட்டை 2014 இல் சுவிற்சர்லாந்திலும் 2016 ஆம் ஆண்டு மூன்றாவது முருகபக்தி மாநாட்டை தென்னாபிரிக்காவிலும் சிறப்புற நடத்தியதோடல்லாமல் 2016 ஆம் ஆண்டு ஆவணி மாதம் ஏழாம் நாள் நடைபெற்ற மூன்றாவது முருகபக்தி மாநாட்டின் வைபவத்தில் மலேசியா திருமுருகன் திருவாக்கு திருபீடத்தின் தவத்திரு பாலயோகி சுவாமிகளால் நான்காவது முருகபக்தி மாநாட்டினை இலங்கையில் இந்துமத அலுவல்கள் அமைச்சு பொறுப்பேற்று நடத்தும் வகையில் ஞானச் செங்கோல் கையளிக்கப்பட்டது.

இலங்கை இந்துமத அலுவல்கள் அமைச்சின் கீழியங்கும் இந்துசமய கலாச்சார அலுவல்கள் திணைக்களம் மற்றும் இந்து பண்பாட்டு நிதியம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் இந்த மாநாடு கொழும்பு பம்பலப்பிட்டி ஸ்ரீமாணிக்கப்பிள்ளையார் ஆலய கலையரங்கில் இடம்பெற்றது. புரவலரும் மாநாட்டுக்குழுவின் அருட்தலைவரும் மலேசியா திருமுருகன் திருவாக்கு திருபீட முதல்வருமாகிய தவத்திரு பாலயோகி சுவாமிகள் அவர்களும் இந்தியாவிலிருந்து திருக்கயிலாய பரம்பரை மயிலம் பொம்மபுர ஆதீனம் இருபதாம் பட்டம் சீர்வளர் சீர்ஸ்ரீ சிவஞான பால்ய சுவாமிகள் அவர்களும், சிரவணபுரம் கௌமார மடாலய மடாதிபதி முனைவர் தவத்திரு குமரகுருபரசுவாமிகள் அவர்களும், ஸ்ரீமத் போகர் பழனி ஆதீன சீர்வளர் சீர்சிவானந்த புலிப்பாணி சுவாமிகள் அவர்களும், இங்கையில் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் அவர்களும் அருளுரை வழங்கினர்

.யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வேந்தரும் இந்து பண்பாட்டு நிதியத் தலைவருமான பேராசிரியர்சி.பத்மநாதன் மற்றும் பல்கலைக் கழகங்களின் பேராசிரியர்கள் கம்பவாரிதி ஜெயராஜ், கலாநிதி ஆறுதிருமுருகன், இந்திய பேராசிரியர் சோ.மீனாட்சிசுந்தரம்,முனைவர் சிவஸ்ரீ எஸ்.பி.சபாரத்தின சிவாச்சாரியார், பேராசிரியர்சிவகுமார், முதுமுனைவர் சக்திவேல் முருகனார் முதலானோரும் ,ம்மாநாட்டில் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள்.

மேலும முருகப்பெருமான் மீது அருணகிரிநாதர் சுவாமிகள் மனமுருகிப் பாடியருளிய திருப்புகழ்களில் கதிர்காமக்கந்தன் மீது பாடிய 14 திருப்புகழ்களைத்தாங்கிய இறுவட்டு கதிர்காமக்கந்தன் ஆலயத்தில் முருகனின் பாதங்களில் வைக்கப்பட்டு ஆசி பெறப்பட்டபின் செங்காலன் சென்மார்க்கிறெத்தன் கதிர்வேலாயுதசுவாமி ஆலயத்தலைவர் வே.கணேசகுமார், பொருளாளர் சதா அற்புதராஜா ஆகியோரிடம் கையளிக்கப்பட்டுள்ளன. .சுவிற்சர்லாந்தில் 2014 ஆம் ஆண்டு நடைபெற்ற இரண்டாவது முருகபக்தி மாநாட்டின்போது இலங்கையின் ,புனர்வாழ்வுப்பணிக்கு 12 இலட்சம் ரூபா வழங்கப்படும் என அறிவிப்பு விடுக்கப்பட்டிருந்தது. மலேசியா திருமுருகன் திருவாக்கு திருபீடத்தின் சார்பில் இந்த நிதிக்கான காசோலை இலங்கை இந்து பண்பாட்டு நிதியத்தின் பொறுப்பாளர்களிடம் மாநாட்டில் வைத்து கையளிக்கப்பட்டது.



# தொலைபேசியில் பேசியபடி வாகனம் ஓடுபவரைக் குறிவைத்த 20 ஆயிரம் யேர்மன் பொலீசாார்.



சிவப்பிரியன்

கடந்த 20.09.2018 வியாழக்கிழமை வாகன ஓட்டுநர்களின் பாதுகாப்புக்கருதி யேர்மனி நாடு முழுவதுமான சோதனைகள் பாதுகாப்பு விளக்கங்கள் என நடத்தப்பெற்றன. இச்சேவையில் 20 ஆயிரத்திற்கு மேற்பட்ட பொலீசார் ஈடுபடுத்தப்பட்டனர்.
குறிப்பாக வாகனங்களை ஓட்டியபடி தெலைபேசியில் பேசிபடி செல்லும் சாரதிகளினால் ஏற்படும் விபத்தைத் தடுக்க இந்தச் சோதனை நடவடிக்கை எடுக்கப்பட்டது. நாடு முழுவதுமாக ஆயிரத்திற்கு மேற்பட்ட சாரதிகள் பொலீசாரால் பிடிக்கப்பட்டனர். அவர்களிடம் விசாரனையும், அவர்களின் நடத்தையால் ஏற்படும் விபத்துகள் பற்றிய விளக்கமும் அத்துடன் பேசியதற்கான தண்டமும் அறிவிடப்பட்டது. இவ்வாறு வாகனங்களில் ஓடியபடியே பேசுபவர்களில் பெண்களும், வியாபரம் செய்பவர்களும், ஆண்,பெண் நண்பர்கள் காதலர்கள் என பலரும் அடங்குவர்.

தாய்மார் பிள்ளைகளுடனும், பாசல் சேவீஸ் வேலை செய்பவர்கள் அவர்களது வாடிக்கையாளர்களுடனும். பேசுவது தெரிவந்துள்ளது. அது மட்டுமல்ல 100க்கு 80 வீதமானவர்கள் தொலை பேசியை வலது பக்க இருக்கையில் வைத்துக்கொண்டே வாகனம் ஓடுகின்றனர். சிலர் வலதுகையில் வைத்துக்கொண்டே கியர்மாற்றுதல் கோப்பி குடித்தல் பேகர் உண்ணுதல், போன்றவற்றையும் செய்கின்றனர். இன்னும் சிலர் கைத்தெலைபேசியில் வீட்டுக் கணக்கு வழக்குகளையும் பாக்கின்றனர். இவையாவும் நேரடியாக பொலீசாரால் கண்டுபிடிக்கப்பட்டவையே.
அவர்கள் வாகனம் ஓடும் போது கடைசியாக எப்போது என்ன நேரம் எவ்வளவு நேரம் பேசினார்கள் என்பதனை பொலிசார் தாங்கள் தெருவில் அமைத்துவைத்திருந்த Monitor இல் போனை இணைத்து சரியாகச் சொல்கிறார்கள். இதில் bluetooth இல் இணைத்து பேசியிருந்தால் அவை அதனைக்காட்டும். அது குற்றமில்லை.
இவற்றைவிட ஆச்சரியமானது வியாபாரம் (business) செய்பவர்கள் தங்களது வலது பக்க இருக்கையில் பல கணக்கு கோப்புக்கைள (File) சரிபாரத்தபடியே வாகனங்களை ஓட்டுகின்றதும் தெரிய வந்துள்ளது. பலர் தங்கள் நேரம் அவசரம் போன்றவற்றைக் காரணம் காட்டினார்கள். அவர்களுக்கு எல்லாம் யோர்மனியில் இத்தகைய சாரதிகளால் ஏற்படும் விபத்தை விளக்கப் படங்கள் மூலம் விபரித்து உதவினர்.

ஒருவர் தொலைபேசியில் கதைத்துக்கொண்டு வாகனம் ஓட்டுவது என்பது 0.8 மில்லி அல்கேோல் குடித்துவிட்டு போதையில் ஓட்டுவதற்கு சமமானது. என்பதனையும் சோதனைகளின் போது குறிப்பிட்டு உள்ளனர்.
வானகத்தில் ஓடிட்யபடியே (text message) ரெக்ஸ் மசேச்பண்பவர்கள் தொகையும் அதிகமாகக் காணப்பட்டதை அன்றைய சோதனைகள் எடுத்துகாட்டின. சாரதிகள் மட்டுமன்றி பாதசாரிகளையும் இந்த சோதனை விட்டுவைக்கவில்லை.

பாதசாரதிகள் அவர்கள் தெருக்கடக்கும் போதும், நாயுடன் நடை பயிலும்போதும், தெலைபேசியில் கதைத்தபடியும் ரெகஸ் பண்ணியபடியும் செல்வதும் இச்சோதனை நேரத்தில் பொலீசாரால் அவதானிக்கப்பட்டு அவர்களுக்கு அறிவுபூர்வமான விளக்கங்கள் கொடுக்பட்டன. புதிய தொழில் நுட்பங்கள் பெருக பெருக விபத்துக்கள் அதிகரித்தவண்ணமே உள்ளன. இவற்றில் புதிய தொழில் நுட்பங்களைத் தடைசெய்வதை விட அதனை முறைாகப் பாவித்தல் எப்படி என்பதனைக் கற்றுத்தேர்தலே முறை யானதாகும். அதனை யேர்மனியில் அன்று பொலீசார் மேற்கொண்டனர்.



# நீல மலைச்சாரல் தென்றல் நெசவு நடத்துமிடம்




**கானா பிரபா**

ரஹ்மான் இசை மெது மெதுவாகத் தான் கொல்லும் என்பார்கள். ஆனால் அதை நான் மறுதலிக்கிறேன், நேற்று "மழைக்குருவி" பாட்டைக் கேட்ட உடனேயே அந்த மாற்றம் என்னுள் சயனைட் ஆக இறங்கி விட்டது.

சிட்டுக் குருவியின் பின்னால் தான் மனம் ஓடிக் கொண்டிருக்கிறது மழைக் குருவி பாட்டைக் கேட்டுக் கொண்டே. ஏ.ஆர்.ரஹ்மான் பாடிய "மழைக் குருவி" என்ற "செக்கச் சிவந்த வானம்" என்ற பாடல்.

நீல மலைச் சாரல்......

இந்த ஆரம்ப வரிகளைக் கவனியுங்கள் இதில் "நீல" என்ற அந்தத் தொடக்கத்தை எவ்வளவு நளினமாகக் கீழிறக்குவார். ஒவ்வொரு சொற்களையும் பேசும் போதும் பாடும் போதும் வித்தியா சப்படுகிறது. எப்படியென்றால் இங்கே ரஹ்மான் பாடுவதைப் போலத் தான்

நீல.....மலைச்..... சாரல்

என்று கீழிறக்குவாரே அங்கே தான் ஒரு பாடகன் தன் குரலுணர்ச்சி வழியாகக் கேட்பவனுக்கு அந்த உலகத்தைக் காட்டுவது.

வீதிக்குப் பழக்கப்பட்ட காரோட்டி ஒருவன் தன் ஒரு கையை சன்னல் கரையோரம் கிடத்தி விட்டு கையால் காரின் வழி திருப்பும் சக்கரத்தை நகர்த்தி ஓடுமாற் போல வானில் எட்டப் போய்த் தன் சிறகிரண்டையும் தள்ளி விட்டுக் காற்றில் அலைந்தும், மிதந்தும், இறங்கியும், ஏறுமாற் போல இருக்கிறது

நீல மலைச்சாரல் தென்றல் நெசவு நடத்துமிடம்

என்ற ஆரம்ப வரிகள் மலைச் சாரலை அளவெடுத்துப் பாடும் பாங்கில் இருக்கும்.

வழக்கத்துக்கு மாறாக ரஹ்மான் குரலில் வரிகளை நோக்கி ஒரு அந்நியோன்யம் மிகுந்த தொனி இருப்பதைப் பார்க்கிறேன்.

நநநந நனனன...

என்று ராஜாத்தனம் காட்டுகிறார்.

"தெரியவில்லை....."

என்னும் போது ஒரு ஏக்கம் கவ்விக் கொள்கிறது.

"விட்டுப் பிரிந்தேன்...."எனும் போது குரல் கம்மிக் கொள்கிறது. இப்பேர்ப்பட்ட வித்தியாசமான ரஹ்மானை நான் கேட்டதில்லை.

காட்டில் அந்நேரம்
கதையே வேறு கதை
கூட்டை மறந்துவிட்டுக்
குருவி கும்மியடித்ததுகாண்

என்று ஆரம்பிக்கும் வரிகளில் இருந்து இன்னொரு குரலைச் சேர்த்திருக்கலாம் என்பது என் உணர்வு.

ஒரு சிட்டுக் குருவிக்கும் மனிதனுக்குமான இயற்கையின் பந்தம் காதலோடு பொருத்திப் பார்க்கப்படுகிறது. வைரமுத்து அவர்கள் ஏற்கனவே எழுதிய "மழைக் குருவி" என்ற கவிதை சில மாற்றங் களோடு கவிதையின் சில பகுதிகள் மட்டும் எடுத்துக் கையாளப் பட்டிருக்கின்றன.

இதோ...
நீல மலைச்சாரல்
தென்றல் நெசவு நடத்துமிடம்
நீல மலைச்சாரல்......

> **பேச்சு எதுவுமின்றிப் பிரியமா என்றது**

வானம் குனிவதிலும்
மண்ணைத் தொடுவதிலும்
காதல் அறிந்திருந்தேன்


கானம் உறைந்து படும்
ஞானப் பெருவெளியில் ஒரு
ஞானம் வளர்த்திருந்தேன்

இதயம் விரித்திருந்தேன் நான்
இயற்கையில் திளைத்திருந்தேன்

சிட்டுக் குருவியன்று
சிநேகப் பார்வை கொண்டு
வட்டப் பாறையின்மேல்
என்னை வா வா என்றது



கிச்சுக் கீச் என்றது
கிட்ட வா என்றது
பேச்சு எதுவுமின்றிப்
பிரியமா என்றது



கிச்சுக் கீச் என்றது
கிட்ட வா என்றது
பேச்சு எதுவுமின்றிப்
பிரியமா என்றது

ஒற்றைச் சிறுகுருவி நடத்தும்
ஓரங்க நாடகத்தில்
சற்றே திளைத்திருந்தேன்

கிச்சுக் கீச் என்றது
கிட்ட வா என்றது
பேச்சு எதுவுமின்றிப்
பிரியமா என்றது




ஒரு நாள் கனவு
இது பேரற்ற பேருறவோ....
யார் வரவோ.......

நீ கண் தொட்டுக்
கடந்தேகும் காற்றோ
இல்லைக் கனவினில் நான்
கேட்கும் பாட்டோ
இது உறவோ.....
இல்லைப் பரிவோ...
நீல மலைச்சாரல்
தென்றல் நெசவு நடத்துமிடம்




நநநந நனனன...
அலகை அசைத்தபடி பறந்து
ஆகாயம் கொத்தியதே
உலகை உதறிவிட்டுச் சற்றே
உயரப் பறந்ததுவே...



கிச்சுக் கீச் என்றது
கிட்ட வா என்றது
பேச்சு எதுவுமின்றிப்
பிரியமா என்றது

முகிலினம்
சர சர சரவென்று கூட
இடி வந்து
பட பட படவென்று வீழ
மழை வந்து
சட சட சடவென்று சேர
அடை மழைக் காற்றுக்குக்
குடையில்லை மூட



வான வெளி...
மண்ணில் நழுவி
விழுந்ததென்ன
திசையெல்லாம்
மழையில் கரைந்து
தொலைந்ததென்ன

சிட்டுக் குருவி பறந்த
திசையும் தெரியவில்லை
விட்டுப் பிரிந்து விட்டேன்
பிரிந்த வேதனை
சுமந்திருந்தேன்.....



விட்டுப் பிரிந்தேன் பிரிந்தேன்
உயிர் நனைந்தேன்

அந்தச் சிறுகுருவி
இப்போது அலைந்து
துயர் படுமோ...துயர் படுமோ
இந்த மழை சுமந்து
அதன் றெக்கை
வலித்திடுமோ..வலித்திடுமோ

காட்டில் அந்நேரம்
கதையே வேறு கதை
கூட்டை மறந்துவிட்டுக்
குருவி கும்மியடித்ததுகாண்

சொட்டும் மழை சிந்தும்
அந்தச் சுகத்தில் நனையாமல்
என்னை எட்டிப் போனவனை
எண்ணி எண்ணி அழுதது காண்

எனக்கு ஏ.ஆர்.ரஹ்மான் - மணி ரத்னம் - வைரமுத்து கூட்டணி வந்தால் உள்ளூர எழும் ஆனந்தத்துக்கு முக்கிய காரணம் "தமிழ்".

தொடர்ச்சி 31 ம் பக்கம்



# நயன்தாராவின் வெற்றிகள்! வியப்பில் ஜோதிகா!





கதாநாயகர்கள் அளவுக்கு தனக்கென்று ஒரு இடத்தை பிடித்துள்ளார் நயன்தாரா. காதாநாயகிக்கு முக்கியத்துவம் உள்ள படங்களை தேர்வு செய்து நடித்து வருகிறார். அந்த படங்கள் அவருக்காகவே ஓடி வசூலை அள்ளிக் குவிக்கின்றன. இதனால் தயாரிப்பாளர்கள் அவரை நம்பி படம் எடுக்கிறார்கள். அவர் கேட்கும் சம்பளத்தையும் கொடுக்கிறார்கள்.

நயன்தாராவை பார்த்துவிட்டு கதாநாயகிக்கு முக்கியத்துவம் உள்ள படங்களை தேர்வு செய்து நடித்த அனைவரும் வெற்றி பெற்றுவிடவில்லை. ஆனால் நயன்தாராவுக்கு மட்டும் இந்த யுக்தி பலிக்கிறது. அதனால் அவர் தனது சம்பளத்தை ரூ. 5 கோடியாக உயர்த்திவிட்டார். கதாநாயகரை வணங்கும் ரசிகர்களை தன்னையும் கொண்டாட வைத்துள்ளார் நயன்தாரா.

நயன்தாராவின் இந்த பாணி ஜோதிகாவை வியக்க வைத்துள்ளது. நயன்தாரா தனக்கென்று செல்வாக்கை வைத்திருப்பது சாதாரண விஷயம் அல்ல. தொடர்ந்து வெற்றி பெற்றுக் கொண்டிருக்கிறார்.

வாழ்வில் முன்னேற கூடுதலாக முயற்சி செய்ய வேண்டும் என்ற எண்ணத்திலேயே அவர் இருப்பது எளிது அல்ல. தன்னை சுற்றி நகரும் கதைகளை தேர்வு செய்து நடிக்கிறார் என்கிறார் ஜோதிகா.

ஒரே நாளில் அவர் பல காட்சிகளில் நடிக்கிறார். குறித்த காலத்திற்குள் நடித்து முடித்துவிடுகிறார். இப்படி நடிப்பது கஷ்டம். குறித்த காலத்திற்குள், நிர்ணயிக்கப்பட்ட பட்ஜெட்டில் படத்தை முடித்துக் கொடுக்கும் நயன்தாராவை பார்த்தால் வியப்பாக உள்ளது என்று தெரிவித்துள்ளார் ஜோதிகா. ஒரு இடைவேளை எடுத்துவிட்டு மீண்டும் நடிக்க வந்துள்ள ஜோதிகா வித்தியாசமான கதாபாத்திரங்களாக தேர்வு செய்து நடிக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.



கதாநாயகியாகிய நாங்கள் பிரியாணி காட்சிகள், ஒயின் ஷாப் காட்சிகளில் நடிக்க முடியாது. குழந்தை பிறந்த பிறகும் ஹீரோயின்கள் குண்டாக இருக்கக் கூடாது. இளம் ஹீரோக்களுடன் காதல் செய்ய முடியாது. இப்படி பல விஷயங்கள் உள்ளது. அதனால் நல்ல கதை, நடிப்பில் தான் எங்களால் கவனம் செலுத்த முடியும் என்று ஜோதிகா கூறியுள்ளார். இரண்டாம் சுற்றைத் தொடங்கிய ஜோதிகாவுக்கு கணவர் சூர்யா பேராதரவாக உள்ளார். மணிரத்னம் இயக்கத்தில் அவர் நடித்துள்ள செக்கச் சிவந்த வானம் கடந்த 27ம் தேதி வெளியாகி பலதரப்பட்ட விமர்சனத்துடன் கலக்குகிறது. அவரின் அடுத்த படத்தை புதுமுக இயக்குனர் ராஜ் இயக்குகிறார். இந்த படத்தை ட்ரீம் வாரியர் பிக்சர்ஸ் தயாரிக்கிறது.

## நீல மலைச்சாரல்

30 ம் பக்கத் தொடர்ச்சி



தமிழ்ப் படமென்றாலும் தமிழுக்கு அந்நியமான காட்சிக் களத்தையும், சடங்குகளையும் போட்டுக் குழப்பி இந்திய வர்த்தகச் சந்தையை இலக்கு வைத்தாலும் தன்னுடைய படங்களில் "தமிழ்" தான் தலைப்பாக இருக்கும் கறார் பேர்வழி மணிரத்னம். அது போலவே ரஹ்மான் மற்றைய படங்களில் யாருடனாவது கூட்டுச் சேரட்டும் ஆனால் என் படம் என்றால் வைரமுத்து தான் என்று விடாக்கண்டனாக இருப்பார்.

காட்டில் அந்நேரம்
கதையே வேறு கதை
கூட்டை மறந்துவிட்டுக்
குருவி கும்மியடித்ததுகாண்

சொட்டும் மழை சிந்தும்
அந்தச் சுகத்தில் நனையாமல்
என்னை எட்டிப் போனவனை
எண்ணி எண்ணி அழுதது காண்



எனக்கு ஏ.ஆர்.ரஹ்மான் - மணி ரத்னம் - வைரமுத்து கூட்டணி வந்தால் உள்ளூர எழும் ஆனந்தத்துக்கு முக்கிய காரணம் "தமிழ்".

தமிழ்ப் படமென்றாலும் தமிழுக்கு அந்நியமான காட்சிக் களத்தையும், சடங்குகளையும் போட்டுக் குழப்பி இந்திய வர்த்தகச் சந்தையை இலக்கு வைத்தாலும் தன்னுடைய படங்களில் "தமிழ்" தான் தலைப்பாக இருக்கும் கறார் பேர்வழி மணிரத்னம். அது போலவே ரஹ்மான் மற்றைய படங்களில் யாருடனாவது கூட்டுச் சேரட்டும் ஆனால் என் படம் என்றால் வைரமுத்து தான் என்று விடாக்கண்டனாக இருப்பார்.

இங்கே இந்த இடத்தில் வைத்து வைரமுத்துவின் தேவை ஏன் முக்கியமாகப்படுகிறது என்று நோக்குவதற்கு இந்த மூவர் கூட்டணியில் ஏராளம் பாடல்களைக் காட்டினாலும் இந்த "மழைக்குருவி" பாடல் இன்னும் வெகு நெருக்கமான உதாரணமாக அமையும். இன்று யாரும் பாட்டெழுதலாம், எதையும் போட்டு எழுதலாம் என்ற சூழலில் வைரமுத்துவின் பங்களிப்பு முக்கியமாகப்படுகிறது.

பாடல் வழியே அந்தக் காட்சியின் பின் புலத்தைத் தொடுவதோடு அழகிய தமிழ்ச் சொற்களையும் ரம்மியமான வரிகளோடு பொருத்தி விட்டு அழகு பார்ப்பார் வைரமுத்து.

எப்படித் தாய்த் தயாரிப்பாளர் தன் பஞ்சு அருணாசலம் படங்களில் இசைஞானி இளையராஜா கொடுத்ததெல்லாம் தனியானதொரு விசேஷம் பெறுமோ அப்படியே இந்த ரஹ்மான் மணிரத்னத்தோடு சேரும் போதெல்லாம் உணர்கிறேன்.

ஊருக்கு எவ்வளவு தான் ஆக்கிப் போட்டாலும் தன் தாய்க்குச் செய்து காட்டிப் பெருமை வாங்கும் சிட்டுக் குருவியாய் இந்தப் பாட்டு.





உலகு எங்கும் வலம்வர
தரமான விமானப் பயணத்தற்கு
EurAsian - Tours
LITTLE INDIA வின் மற்றுமொரு சேவை...
Tel: 02131 273 692
Rishi Ganeshamoorthy
Rishi 0174 96 44 965
துரித பண
மாற்றுச் சேவை!
VALUTRANS MONEY TRANSFER
Tel:02131 73 87 83 Fax: 02131 73 87 84
Further Str. 156
41462 Neuss
info@eurasian-tours.com
இந்தியா– இலங்கை– விசா பெற்றுத்தரப்படும்!


Jasmine Silk House
புத்தம் புது வரவுகள் என்றும் எமக்கு பண்டிகை நாட்களே!!!
என்றும் மலிவாக தரமாக திருமணப் பட்டுப்புடவைகள் மற்றும்
பாட்டிசாறிகள், சிறுவர்களுக்கான ஆடைகள், பஞ்சாபிகள்,
அனைத்தும் புத்தம், புது டிசைன்களில், எம்மிடம் உண்டு.
நம்மை நாடிவரக் காரணம், அதுவே!
HP:0173 1937 325
Tel:02102 844744 'Jasmin Silk House" Fester Str.50- 40882 Ratingen


ASIA BAZAR
Ria Money Transfer
MoneyGram
துரித பண மாற்றுச் சேவை!
VALUTRANS MONEY TRANSFER
ஆசிய,ஆபிரிக்கஉணவுவகைகள்
வியாழன் சனிக்கிழமை தோறும்
இலங்கை,இந்திய உடன் மரக்கறிவகைகள்
கடல் உணவுப் பொருட்கள்.இன்னும் பல...
உரிமையாளர்:
பா.கணேஷ்
An der Stadt Mauer 2-4
41061 Mönchengladbach
Tel:02161 208303 Fax:02161-309282


Stuttgart நகரில்...
Pirruntha Silks
தரம்மிக்க தங்க நகைகள் நங்கையர் விரும்பும்
நவீன டிசைன்களில் அமைந்த
சேலைகள் மற்றும் இமிற்ரேசன் நகைகள்
அனைத்திற்கும் நீண்டகாலநம்பிக்கை
மிக்க ஸ்தாபனம்
பிருந்தாஸ்
0170 334 4059
Ludwig str.87a - 70197 Stuttgart Tel: 0711 615 8976


Photography
Video Filming
Album Making
Graphic Desiging
Your Dreams Comes True
AKR Visualizers
BOOK A SESSION NOW AT
professional photography & cinematography
0049 231 5337 5366
0049 162 803 1647
Rheinische Str. 72
44137 Dortmund
akrvisualizers
akrvisualizers
akrvisualizer@gmail.com


SARAVANAA BHAVAN®
WORLD'S NO.1 INDIAN VEGETARIAN RESTAURANT CHAIN
069-97 693 374
info@saravanaabhavan.de
Kaiserstraße 66, 60329 Frankfurt am Main
India Singapore Malaysia Thailand Hong Kong U.A.E. K.S.A. Oman Qatar Bahrain Kuwait U.K. France Germany Australia South Africa Canada U.S.A.


Star - Impex
Asiatische & Afrikanische
Lebensmittel Grosshandel
Lebensmittel Grosshandel e.K.
Franziusstrasse.150 (TOR 3) DE - 44147 Dortmund
Tel : 0231/8602696 Fax : 0231/8602698
E-mail : Info@star-impex.de Web : www.star-impex.de
Tel:0231 860 26 96
Dortmund மாநகரில்
தாயக மரக்கறிகள்
பழவகைகள் மற்றும்
உணவுப் பொருட்களை
மொத்தமாக
பெற்றுக்கொள்ள
நாடுங்கள்
Snacks
Getreide
Gewürze
Getränke
Tiefkühlkost
Obst &Gemüse
Hülsenfrüchte
Öffnungszeiten:
Mo-Fr: 10.30-19.30
Sa: 09.30-18.00
StaR Impex :
Inh :K.Sivasubramaniam